1425

...கர்த்தா
...கர்த்தா } வை. மு. கோதை நாயகி அம்மாள்.

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி

மலர் III 1926 இதழ் 10-11

OFFICE OF THE REGISTRAR
15 MAR 1927



...ன் மோகினி ஆபீஸ்,
26 தோடித தெரு,
...வல்லிக்கேணி, மதராஸ்.

JL
ஈ441, N22 Jm
N26·3·1@4
182828

குறிப்பு:—ஒவ்வொருமாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

இனாம் ! இனாம் !...

# முற்றிலும் இனாம் !

'C' ரிஜிஸ்டர் ! 'C' ரிஜிஸ்டர் !

டைம்பீஸ் டைப்பீஸ்




இனாம். இனாம்.

எங்களின் "தாகரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை, வாங்குகிறவர்களுக்கு 'C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக் கடியாரத்தில் உள்ளடையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது முந்துங்கள்.

**காப்டன் வாச் கம்பெனி,** தபாற்பெட்டி நெ 265, மதராஸ்

---

## பாதி விலை ! ஒரு மாதம் வரையிலும் பாதி விலை

**அசல் விலை ரூபாய் 14.**

**பாதி விலை 7.**



22 கார்ட் ரோல்ட்டு கோல்டுகைக் கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டை யுடன் அனுப்பி வைக்கப்படும்

**ஸ்வான் ஹவுஸ்,**

தபால் நெ. **508,** பி. டி. மதராஸ்

நமது ஜெகன்மோகினியின் சந்தாநேயர்களான அன்பார்ந்த சகோதர சகோதரிகளுக்கு மிகவும் வணக்கத்தோடு தெரிவிக்கும் விக்ஞாபனம்.

அடியாள் ஓர் முக்கியமான காரியார்த்தமாக வெளியூருக்குச் செல்லவேண்டியிருப்பதால் அடுத்த திங்களின் 11-வது சஞ்சிகையையும், இந்த மாதமே பிரசுரித்து முன்னதாக அனுப்பியுள்ளோம். நாம் இதனுடைய காலக்கிரமத்திலேயே திங்கள்தோறும் பத்திரிகையை வெளிப்படுத்தி வருகையில், ஏதோ எதிர்பாராத சில இடைஞ்சல்களினால், சில தினங்கள் தவக்கமாகுமாயின் நமது நண்பர்களில் சிலர் வீணே தபாலாபீசுக்குப் பஞ்சமேற்படாம லிருக்கும்பொருட்டு, அனாவசியமாக அணாவைச் செலவிட்டுக் கடிதம் எழுதிவிடுகின்றார்கள். மேலும் நாம் 4-வது சஞ்சிகையில் இந்த விஷயமாக ஒரு நோட்டீஸ் பிரசுரித்து சில தினங்கள் பொறுக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தும், அதைச் சிலர் கவனிக்காமல் எழுதுகின்றதைப்பற்றி அடுத்த திங்களின் சஞ்சிகையை முன்னதாகவே அனுப்பி விட்டோம். நமது ஜெகன்மோகினியின் மூன்றுவதாண்டு, கடவுளின் கிருபையாலும், பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும், ஏதோ எம்மாலியன்றமட்டும் திங்கள் தோறும் காலக்ரமத்தில், தவறாது வெளியிட்டுக்கொண்டே வருகிறோம். பெரிய மனிதர்களாலும், அறிவாளர்களாலும் காலக்கிரமத்தில் செய்தற்கரிதான இத்திருப்பணியை கேவலம் பேதையாகிய யான் கூடியவரையில், தடைபடாமல் நடத்தி வருகின்றேன். அப்படியும் எதிர்பாராமல் ஏற்படும் சொற்ப தினங்களின் தவக்கத்தைப் பொறுத்திருக்கும் நண்பர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நமது சஞ்சிகையின் மூன்றுவதாண்டு முடிவு பெறுவதற்கு இன்னும் ஒரு சஞ்சிகைதானுளதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். 12-வது சஞ்சிகை முடிந்த பின்னர், ஓர் அருமையான துப்பறியும் நாவல், வெளிவரப் போகின்றது. இதுகாறும் நமது ஜெகன்மோகினியை ஆதரித்துதவிய எமதன்பார்ந்த நேயர்கள் நாளது, செப்டம்பர் மாதம் பிறக்கும் நான்காவதாண்டிற்கும் எம்மைக் கைவிடாது, சந்தாநேயர்களாகச் சேர்ந்தும், தமது நண்பர்களுக்குச் சிபார்சு செய்து, அவர்களையும் சந்தாநேயர்களாகச் சேர்த்தும் நமது பத்திரிகை மேன்மேலும் அபிவிருத்தியடைந்து வளர்பிறை மதியம் போன்று திங்கள்தோறும் செழித்தோங்குமாறு அதை ஆதரித்து, எம்மையும் உற்சாகப்படுத்துவீர்களென்று நம்புகின்றேன்.

நிற்க, நமது தமிழ்நாட்டின்கண் வெளிப்போந்துள்ள சஞ்சிகைகள் கணக்கில்லாமலுள்ளன. மேனாட்டாரைப் போல ஏகோபித்து ஒற்றுமையுள்ளவர்களாக நம்மவர்களிருந்தால் நமது நாடு எவ்விதம் முன்னேற்றத்தை அடைந்து செழித்து ஓங்கும் என்பதைக் கூறவும்வேண்டுமோ? லக்ஷக் கணக்கில் பத்திரிகைகள் வெளியானாலும் மேனாட்டார் லக்ஷக் கணக்கில் சந்தாதாரர்களாகச் சேர்ந்து விடுகின்றார்கள். நமது ஜெகன்மோகினியோ பெண்பால்; அதில் வெளியாகும் வைதேகியும் பெண்பால்; இவ்விரு பெண்மணிகளையும் மேற்கொண்டு வெளியிடும் யானோ பெண்பால். ஆக மூவரும் பெண்பாலாக உள்ளபடியால் தான் அளவற்ற சந்தாதாரர்கள் சேரவில்லையோ என்ற சந்தேகத்தால் அடுத்த ஆண்டில் வெளிவரும் நாவலுக்கு ஆண்பாலின் பெயரும் கூட சேர்த்துவைக்க தீர்மானித்திருக்கிறோம். ஜூலை மாதத்திய சஞ்சிகை ஜூன் மாதத்திய சஞ்சிகையோடு வந்துவிடுகின்றபடியால் ஆகஸ்டு மாதம் கடைசிக்குள் 12வது சஞ்சிகை வெளியாகிவிடும். அதற்குப்பிறகு செப்டம்பர் மாதத்தில் வெளிவரும் சஞ்சிகையை 15 தேதிக்கு (தமிழ் முதல்தேதிக்கு) வெளியிடுவதாக ஏற்பாடு செய்திருக்கிறோம். நம்முடைய சஞ்சிகைக்கு கூடிய சீக்கிரத்தில் தக்க ஆதாரம் ஏற்பட்டு சந்தாதாரர்கள் போதிய அளவு சேருவார்களானால் நாம் நம்முடைய பத்திரிகையின் பக்கங்களையும் அதிகப்படுத்த உத்தேசித்திருக்கின்றோம்.

நிற்க, அடுத்த ஆண்டில் ஒரு புதிய ஏற்பாடு செய்திருக்கிறோம். அதாவது, 5 சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்கும் நண்பர்களுக்கு ஒருவருஷ சஞ்சிகை இனாமாகக்கொடுக்கப்படும். 15 பேர்களை சேர்த்துத் தருகின்றவர்களுக்கு நமது வைதேகி 2 பாகங்களும் ,ஒருவருஷ சஞ்சிகையும் இனாமாகக் கொடுக்கப்படும்.

நாளது செப்டம்பர் மாதத்திற்குள் நமக்குப்போதிய அளவு சந்தாதாரர்கள் சேர்ந்து நம்மையாதரித்து உதவுவார்களாயின் முதல் சஞ்சிகையிலிருந்தே பக்கங்களை அதிகப்படுத்துகிறோம். அறிவிற் சிறந்த அன்பீர்காள்! கடவுளின் அருளையும், தங்கள் ஆதரவையும் எதிர்நோக்கித் தொடங்கிய நமது ஜெகன்மோகினியை எல்லோரும் என்றும் கைவிடாமல் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகின்றேன். இதில் எவ்விதமான குற்றம் குறைகளிருப்பினும் அவற்றை பாராட்டாமல் விஷயத்தையே கைக்கொள்வீர்களென்று நம்புகின்றேன்.

இங்ஙனம் தங்கள் சகோதரி,

வை. மு. கோதைநாயகி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1927
MADRAS

## 14 வது அதிகாரம்.

வெண்ணெய்திரளும் சமயம் தாழியுடைந்தது.

எட்டாவது அதிகாரத்தின்இறுதியில் நமது அருங்குண பூஷண மாகிய வைதேகியை ஒரு முரடன் பலாத்காரம் செய்த தருணம் அவ் வன்னப்பேடு தனது மானத்தைக் காக்கும் பொருட்டுக் கற்பு லக்ஷ்மி என்னும் வீரியமவளைத் தூண்ட அவள் உடனே சாளரத்தின் வழி யாக கீழே விழுந்துவிட்டாளென்று சொன்னோமல்லவா? பிறகு அவ் வனிதாரத்தினத்தின் கதி யாதாயதென்பதைக் கவனிப்போம்.

நமது மின்னலிடை மாதரசி அப் பாதகனின் வசை மொழியைக் கேட்டு மனந் தாளாமல் இப்பூதலத்தை விட்டுப்போதலே சாதகம் என்ற தீர்மானத்தை உறுதியாகக் கொண்டவளாய் சாளரத்தின் வழி யாக திடீரென்று விழுந்துவிட்டாள். அந்தோ! தனதுப்பிராணனை விட மானமே பெரிதென்று தன்னுயிரை அரை வினடியில் அசகாய சூரத் தனமாய் விட்டுவிட எண்ணிக் கீழேவிழுந்து விட்ட மடந்தையின் மனம் அப்போது எவ்வாறிருக்கும் என்பதை ஊகித்தறிந்துகொள்ள வேண்டியதே யன்றி நம்மால் வரைவது கூடாமை யென்றே கூறல் வேண்டும்.

ஆஹா! அவ்வன்னப்பேடு சற்று முன்பு தன்னிலே கலங்கித் துக் கசாகரத்தில் மூழ்கி, புலம்பிக்கொண்டு தனது கால கதியை எண்ணி எண்ணி வெயிலிலகப்பட்ட புழுவைப் போலத் துடித்து மனங் கலங்கி கண்ணீர் பெருக "ஹா! நமது உயிரை மாய்த்துக் கொள் வதற்கேற்ற கருவிகள் ஒன்றும் இவ்விடத்தில் காணப்படவில்லையே என்ன செய்வேன்?" என்று வருந்துங்காலையில் அங்கு அன்னிய மனி தன் தோன்றி அடாத மொழிகளை அடுத்துரைத்து அவ்வன்னத்தின் மீது அம்புபாய்வது போலப் பாயும் தருணம் தன்னை யறியாமல் தைரிய லக்ஷ்மியும் கற்பேன்னும் காற்றும் அவளைத் தூண்ட அதனால் தான் ப்ராணனைவிட்டுவிடத் துணிந்து தனக்கு ஒருவழியாகிலும் கிடைத்ததே என்று வெகுவாய் மகிழ்ச்சியடைந்து "இனியாவது நம் துயரம் நீங்கி, நிம்மதியடைந்து, நீணிலத்தைத் துறந்து, நிர்மலச் சித்தனின் நிலையடி பணிந்து இருப்பேன்" என்று புலம்பிக்கொண்டே தபீரென்று கீழே விழுந்தவள், அந்த ஜன்னலுக்குக் கீழே தரைமட் டத்தோடு இருந்த ஒரு பாழ்ங் கிணற்றில் விழுந்துவிட்டாள். அவ் வளவு உயரத்திலிருந்து கீழே விழுந்தவள் தண்ணீருள்ள கிணற்றில் விழுந்தபடியால், அதிகமாக அடிபட ஹேதுவில்லாமல் சற்று காப் பாற்றப்பட்டாள் என்று கூறலாம். அந்தக்கிணற்றில் தண்ணீர் நிறைந் திராமல் வற்றி இருந்தது. இவள் குதித்தவுடன் தண்ணீரில் நன்றாக

மூழ்கி வெளிக்கிளம்பினாள். அப்போது அவளுக்கு நன்றாய் ப்ரஜ்ஞை இருந்ததாகையாலும், அவள்நிரம்ப தண்ணீரைக்குடிக்கவில்லையாகையாலும், அவளை தண்ணீரிலிருந்து மேலுக்குக் கிளப்பியபோது அவள் நன்றாகக் காலை யூன்றி நின்றாள். அந்தக் கிணற்றில் அவளுக்கு மார் மட்டுமே ஆழமிருந்த தாகையால் கீழே மண்ணும் கல்லுமாக விருந்த கிணற்றின் தரைமட்டத்தில் இவள் நன்றாகநின்றுவிட்டாள். அந்தோ! அங்கு நின்ற ஆரணங்கிற்கு முன்னிலுமதிகமான விசனம் தாங்காமல் பொங்கி எழுந்து முற்றிலும் கப்பிக்கொண்டது. "ஐயோ! பாவி கையில் அகப்படாமல் உயிரைத் துறந்துவிடலாம் என்று துணிந்து கீழே விழுந்தால் இந்த இடத்தில் எனக்கென்று தண்ணீர் வற்றிய பாழ்ங் கிணறு ஒன்று இருந்து என்னைக் கெடுக்கவேண்டுமா! ஹா! நான் உயர விருந்து விழுந்தால் நமது உயிர் உடனே போய்விடும் என்ற துணிபாலல்லவா விழுந்தேன். இங்கு சாதாரண கட்டாந்தரையாக விருக்கலாகாதா? இங்கு என் மண்டையுடைந்து, வாணாள்குறுகி இன்னேரம் நிம்மதியடைந்திருப்பேனே. ஆ! எல்லா விஷயத்திலுமா நான் பாபத்தை அதிகமாகச் செய்து, மண்டலத்தில் திண்டாடி, அண்டவிடமின்றி, கொண்டல் வண்ணனின் கழலடிக்குப் பாத்திரமற்று, கண்டவர் ஏசிப் பேசக் கண்ணீர்வடித்துப் புண்ணாக நெஞ்சம் பதற, இம்மண்ணுலகில் பாவிப் பெண்ணாகிய யான் எண்ணரிய துன்பங்களை யனுபவித்துக்கொண்டு இன்னும் எத்தனைகாலம் அல்லல்பட்டு வாடவேண்டுமோ தெரியவில்லையே. இவ்விதம் சிறுமைபடுவதற்கு என் சிரத்தில் பிரமன் எழுதியிருப்பதால் தான் உயிரைத் துறக்கவெண்ணி, விழுந்த விடத்திலும் பாழ்ங் கிணறு வந்து குறுக்கிட்டுவிட்டது. ஐயோ! இவ்விதம் இங்கு இந்தப் பாழ்ங் கிணறு இருக்கும் என்று நான் சிறிதும் எண்ணவே இல்லையே. இக்கிணற்றில் தான் விழுந்தேனே. அதில் தண்ணீராகிலும் நிறைய விருந்து என்னுவிவை அபகரித்துக் கொண்டிருக்கலாகாதா? இக்கிணற்றிலும் தண்ணீர் வற்றிப்போய் மார்மட்டுமா இருக்கவேண்டும்? மாலை நாலு மணிமுதல் என்னைப் பெரிய சனியன் பிடித்து ஆட்டுகின்றானேயன்றி வேறல்ல. இன்பமும் துன்பமும் மாறி மாறி இரவு பகல் போல வந்துகொண்டே இருக்கின்றதே. முதலில் என்பாட்டி எனக்குச் செய்யவிருந்த தீயகாரியத்தைக் கண்ட நான் துன்புற, பிறகு அதிலிருந்து தப்பி கிஞ்சித் இன்புறவும் உடனே மோட்டார் விபத்தினால் என் வீட்டு வாசலில் வந்து படுத்த மனிதருக்கு உதவிசெய்ய எண்ணி டாக்டரை யழைக்கச்சென்ற விடத்தில் மார்வாடியாலும், கான்ஸ்டேபில்களாலும் பட்டதுன்பமும், பிறகு வைதேகியைக் கொண்டு பணம்சேகரித்து வைத்தியருடன் வந்து பார்க்க அவரைக் காணாமல் மறுபடியும் துன்புற்றிருந்ததருணம் இப்பாழும் செந்தலைப் பூச்சிகளால் உண்டான துன்பமும், பிறகு இன்னொரு அன்னியனால் மனங்கலங்கி என்னுயிரை நீக்கப் பன்னகனருளால்

182828

ஜன்னலிலிருந்து விழுந்து உயிரைத்துறக்கலாம் என்ற கடைசி எண்ணத்தோடு நான் சந்தோஷமாய் என் இஷ்ட தெய்வமாகிய என்மனத்தைக் கொள்ளை கொண்ட கோமானின் திவ்யமங்கள விக்கிரகம் போன்ற உருவத்தை மனதில் பதிவு செய்துகொண்டு, "ஹா! மன்னா! சண்டாளி யான் மறுமுறை உமது திருமுகத்தைக்காணாமல் உயிர் துறக்கின்றேன். இந்த ஜென்மத்தில் தான் தங்களையே முதன் முதலாய்க் காதலித்தும், கலிதீராக் கலியுகத்தில், கலியாணம் செய்து களிக்காமல், காலனுக்கு அடிமையாகின்றேன். மறு ஜென்மத்திலாவது தங்களையே மணந்து, தங்களை இணைபிரியாமல் கூடவேயிருந்து, பாதபூஜை செய்து அதனால் சந்தோஷமடைந்து பின் என் வாணாளைத் துறக்கும்படியான வரத்தை எனக்குத் தருவாயா ஈசா! என்று தவம் செய்வதற்காக இம்மண்ணுலகம் சிலாக்ய மற்றது. விண்ணுலகத்திற்குச் சென்று கண்ணனருள் பெற்று மீண்டும் காரிகையாக குல மாதர்களின் மரபிலுதித்து என் வேட்கையைத் தீர்த்துக் கொள்கிறேன். நாதா! அதற்குத் தாமும் எனக்கு ஆசீர்வதிக்க வேண்டும். தங்களையே இவ்வுலகத்தில் எனக்கு சதமான பொருள் என்று தாங்கள் எனது வீட்டு நடைத்திண்ணையில் கிடந்திருந்த கிஞ்சித் நேரத்தில் நெஞ்சினில் நினைத்து நிலையறியாமல் சிந்தை பொங்கினேன். அந்தோ! அடுத்த க்ஷணத்தில் அவ்வெண்ணமெல்லாம் கானல் நீரைப்போல மாயமாய் பயனற்றுப் போய் விட்டன. எல்லாம் நான் செய்த வினையின் பயனேயன்றி வேறல்ல. மறுஜென்மாவிலாவது தங்களைத் திருமன்றல் செய்து கொண்டு திருப்தியுடன் வாழும் வரத்தைப் பெற்றால் போதும். தற்சமயம் இப்பாவியினிடமிருந்து தப்பி எனது கற்பாகிய முக்கிய வாபரணத்தை நான் இடை விடாமல் பூண்டால் போதும். இவ்விரண்டின் பொருட்டே என்னுயிரை இதோ விடுகிறேன். நாதா! என் ப்ராண நாதா!" என்று வேண்டிக்கொண்டே விழுந்து விட்ட எனக்கு இப்பாழ்ங் கிணறு எதற்காக வந்து தடுக்கவேண்டும்? ஐயோ! அந்தச் சண்டாளன் இங்கும் தேடிக்கொண்டு வந்து விடுவானோ! அவன் இங்கு வந்து என்னைக்கண்டுவிட்டால் இனி என்னை விடமாட்டானே. என் மானத்தை வாங்கியே தீருவானே என் செய்வேன்? இறக்கத் துணிந்தும் விதி வந்து வலிய எதிர் நிற்கின்றதே. ஹா! நாம் நடுநிசி வேளையில் இங்கு இவ்விதம் விசனித்துக் கொண்டிருந்தால் அந்தப்பாவி மேலிருந்து விழுந்தவள் இங்கு தானே செத்துக்கிடக்க வேண்டும் என்று பார்த்துக் கொண்டு வந்து விட்டால் என்ன செய்வது? இனி என்னவோ இந்தக் கிணற்றில் நம் உயிர் நீங்காது. மேலிருந்து விழுந்ததனால் வெகு அதிர்ச்சியாயும் தலையில் சிறிது காயமுமாக விருக்கிறது. நமது இப்போதிருக்கும் தேகநிலைமையைக் கண்டால் மயக்கம் வந்துவிடும் போலவிருக்கின்றது. அப்படி மயக்கம் வந்து இவ்விடத்திலேயே வீழ்ந்து

விட்டால் பிறகு எமன் கையிலகப்பட்ட உயிர்போலவும், பூனையின் வாயிலகப்பட்ட கிளியைப்போலவும் நாம் அந்தச் சண்டாளனிடமிருந்து தப்பவே முடியாது. நாம் இத்தருணத்தில் தப்பித்துக்கொண்டால் தான் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். ஆதலால் நாம் மெல்ல இந்தப் படிகளின் வழியாக மேலே ஏறி எங்காகிலும் சென்று விடுவோம்'' என்ற தீர்மானத்தைக் கொண்டவளாய் மெல்ல அந்தக் கிணற்றில் கல்களால் தூரதூரமாய்க் கட்டியிருந்த படிகளில் ஏறினாள். ஆஹா! இதுகாறும் தண்ணீரில் நின்றிருந்ததனால் அவ்வளவு பாதை தெரியவில்லை. வெளிக் கிளம்பியது தான் தாமதம். உயரவிருந்து விழுந்ததனால் ஏற்பட்ட தேகத்திலுள்ள பாதைகள் அவளுக்கு அவ்வளவு துக்கம் இருந்தும் அதன் மத்தியில் தெரிய வாரம்பித்தன. "ஹா! காலில் பலத்த அடிபட்டுவிட்டதே நான் எவ்விதம் நடப்பேன்? ஐய்யோ! சற்று தாமதமாகுமானால் அச்சண்டாளன் வந்துவிடுவானே'' என்று மனந் தவித்தவண்ணம், மெல்ல மீண்டும் இரண்டு படிகளில் ஏறினாள். உடனே அவளுக்குச் சடக்கென்று ஒரு நினைவு வந்தது. அதாவது தான் தண்ணீரிலிருந்து ஜலம் சொட்ட சொட்ட ஏறி வெளியில் வந்தால் அந்த ஜலம் படிந்த அடையாளத்தைக் கண்டு நாம் தப்பி வெளியில் போய்விட்டோமென்பதை நன்றாயறிந்துகொண்டு அதே திக்கில் தானும் தேடிக்கொண்டு வந்துவிடுவானே, அதற்கும் இடமில்லாமல் செய்யவேண்டும். ஆகையால் நாம் இந்தக் கிணற்றுப் படியிலேயே துணியை நன்றாகப் பிழிந்துகொண்டு காலில் கொஞ்சங் கூட ஜலமில்லாமல் துடைத்துக்கொண்டு மெல்ல வெளியில் ஏறி, எந்த திக்கில்லாவது நுழைந்துவிட வேண்டும்.'' என்று எண்ணமிட்ட வண்ணம் தனது சேலையை நன்றாய் தண்ணீரை எல்லாம் பிழிந்துவிட்டு, தலை முதலிய இடங்களையும் நன்றாய்த்துடைத்துக் கொண்டு, மெல்ல ஆடி ஆடி அசைந்தவண்ணம் காற்றிலசையும் மாந்துளிர்போலத் தத்தித் தடுமாறியவண்ணம் நாற்புறமும் யார் தன்னைக் கண்டு விடுவார்களோ என்ற பயத்தோடு சுற்றிச் சுற்றிப் பார்த்த வண்ணமாய் கரைமீதேறி நின்றாள். அன்று பௌர்ணமியாதலால், பட்டப்பகல் போல நிலவு காய்ந்துகொண்டே இருக்கின்றது. எங்கும் ஓசை நிசப்தமாய் இருக்கின்றது. சற்றுபோதிற் கொருதரம் சில பக்ஷிகள் மாத்திரம் கூவிக்கொண்டே இருந்தன. அந்த அர்த்த ராத்திரி வேளையில் அலகிலா விசனத்தோடு மெல்ல நமது ஆரணங்கான வைதேகி நடக்கவாரம்பித்து முன்னும் பின்னும் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணமாகச் சென்றுகொண்டிருக்கையில், இவளுக்குப் பின்னால் கொஞ்சதூரத்தில் யாரோ மனிதர் மெல்ல நடக்கும் சத்தம் அவளுக்குக் கேட்டுத் திடுக்கிட்டாள். 'ஆ! எந்த சமயம் எந்தவிதமான ஆபத்து வருமோ என்று மனதில் கிலிகொண்டு துவண்டு துவண்டு, தான் வெகு வேகமாக நடக்கவேண்டும், என்று அவள் மனதில் தோன்றுகின்றதேயன்றி அவள் கால்கள் பின்ன

விட்டுப் பின்னவிட்டே அம்மின்னல் கொடியைத் தள்ளிச்செல்கின்றன. அவள் சென்றவிடமானது நிறைய மரமும், செடிகளும் கீழே புற்களும், பூண்டுகளும் நிறைந்ததாகக் காணப்பட்டது. இவள் பின்பக்கத்தில உண்டான ஓசையைக் கேட்டவுடன் நடுநடுங்கி, கதி கலங்கி இடிந்துப்போய் அதற்குமேல் கால் ஒரு அடிகூட எடுத்து வைக்கமாட்டாமல், விடவிட என்று உதரவாரம்பித்தது. வயிற்றில் ஒரே இடி இடித்த மாதிரியான கலக்கமும், பீதியும் ஏற்பட்டு சிரம் சுழலவாரம்பிதது விட்டது. அப்போதைய அவளது மனநிலைமையால் குபீரென்று நெருப்பு ஜ்வாலைபோன்ற ஆவியொன்று அவளது கால் முதல் தலைவரையிலும் கிளம்பி தேக முழுதும் பரவி,நீராடினது போல வியர்வை வழிய வாரம்பித்துவிட்டது. இந்நிலையில் அவளது கண்கள் உள்ளுக்குள் சொருக வாரம்பித்தன. அவள் அப்போது அடியற்ற தாமரையைப்போல நிலத்தில் நிற்காமல் ஆடவாரம்பித்துவிட்டாள். அந்தோ! அந்த நிலைமையில் என்ன செய்வாள் பாவம்! அவள் ஏற்கெனவே கீழே விழுந்த அதிர்ச்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுத் தள்ளாடும் சமயம் இந்த ஓசையினுல் உண்டான திகிலும் பயமும் ஒன்றுகூடி அவளை உயிரற்ற சவம் போலவாக்கி விட்டது. அவள் "ஐயோ! அந்தப் பாதகன்தான் வந்துவிட்டானே! ஆ! இந்த ஆபத்தில் எவ்விதம் தப்புவேன்? இந்த நிலவின் வெளிச்சத்தால், என்னை அவன் கண்டுகொண்டாலும் கொள்வானே. இப்போது எங்கு ஒளிந்துகொள்ளலாம். இதைப் பார்த்தாலோ தோட்டமென்றும் சொல்ல முடியவில்லை. காடு என்றும் கூற முடியவில்லை. இங்கு எனக்கு ஒளிந்துகொள்வதற்கு வாட்டமான இடம் எங்கு கிடைக்கப்போகிறது?" என்று மனதில் பலவாருக எண்ணமிட்டுக்கொண்டே தன்னுல் இயன்றமட்டும் விசையாக நடக்க வாரம்பித்தும் அவளால் சரியாக நடக்கவே முடியவில்லை. அவள் அங்கு இருந்த ஓர் ஆலவிருக்ஷத்தின் மறைவில் நின்றுகொண்டு அங்கு காலோசை கேட்டது யாரென்று கவனிக்கலானுள். அவ்விடத்தில், அதாவது தான் விழுந்த விடத்தில், மூவர் நின்று பேசுவதைக்கண்ட அவள் மனதில்பெருத்தகுழப்பம் ஏற்பட்டுவிட்டது. "ஐயோ! அப்போது ஒருவனுகவந்தான். இப்பொழுதோ மும்மூர்த்திகள் போலவருமூர்களே! என்ன செய்வேன்? அங்கு காணவில்லையென்று இந்த திக்கில் வந்து விடுவார்களா! ஹா! அவ்விதம் வந்து விட்டால் என்கதி என்னவாகும்? பாழும் உயிரும்போகவில்லையே. அவர்கள் அவ்விடத்தை விட்டுத் திரும்புவதற்குள் நாம் இன்னும் சற்று தூரமாகினும் சென்று தப்பித்துக்கொள்வதற்கான வழியைத் தேடவேண்டும்" என்று தனக்குள் எண்ணியவளாய் பின்னும் நடக்கவாரம்பித்தாள். அங்கு செல்லச் செல்லக்கீழே யிருந்த புற் பூண்டு முதலியது காணப்படாமல், மரங்கள்மாத்திரம் அடர்ந்து இருந்தன. அங்கு சற்று அருகில் ஒரு கட்டிடம் தெரிந்தது. அதைக்கண்டதும் அவளுக்கு

இன்பமும் துன்பமும் கலந்து பொங்கிற்று. ஏனெனில் 'அந்தக் கட்டிடத்தில் யாராவது மனிதர்கள் இருக்கின்றார்களோ இல்லையோ. அப்படி யாராவது இருந்தும் அவர்கள் அந்தச்சண்டாளனுக்குவேண்டியவராக இருப்பார்களோ என்னவோ; எதற்கும் போய்ப் பார்ப்போம்' என்று அருகில் சென்றாள். அது ஒரு பக்கம் இடிந்தும், ஒரு பக்கம் குட்டிச்சுவரும், மற்றொருபக்கம் முழுக்கல் சுவராகவும் இருந்தது. அங்கு மனிதரிருக்கும் சந்தடியே காணப்படவில்லை. அதன் மேல் பாகத்தை ஓர் பெரிய அரசமரம் குடைபோல சுற்றிலும் மூடியிருந்தபடியால் நிலவின்வெளிச்சமும் அவ்விடத்திற்கு நன்றாய்த் தெரியவில்லை. காற்றில் இலைகள் அசையும் சமயம் சற்று பொட்டு பொட்டாய் நிலவின் வெளிச்சம் அங்கு தெரிந்தது. நமது ஆரணங்காகிய வைதேகி அதற்குள் போகவும் பயப்படுகின்றாள். போகாமலிருக்கவும் முடியவில்லை. அச்சமயம் தன்னை எவ்விதமாகிலும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு எவ்விடமாகிலும் சென்றுதான் தீரவேண்டும். "அங்கு பாம்பு முதலியதுஷ்ட ஜெந்துக்கள் இருந்தாகிலும் என்னைத் தீண்டி அதனாலாகிலும் என் உயிர் நீங்கிவிடட்டும். இப்பாவி இங்கு வந்து என்னைக் காணு வகையில் நான் செய்து கொள்ளவேண்டும். இங்கு எப்படி இருந்தாலும் சரி நான் போயே தீருகிறேன்" என்று எண்ணியவண்ணம் அந்தப்பாழும் கட்டிடத்திற்குள் நுழைந்தாள். அப்போது ஓர் பெரிய காற்று அடித்து மரங்கள் கலகலவென்று அசைந்ததால் அந்தக் கட்டிடத்திற்குள் நன்றாக நிலவின் வெளிச்சம் சற்று தெரிந்தது. அப்போது அங்குசென்ற வைதேகியின் தேகம் கிடுகிடென்று நடுங்கியது. மயிர்க்குச்சு எறிந்தது. "ஆ! இதைப் பாழும் கட்டிடமென்று பயந்தேனே. இது கடைசியில் ஆலயமாகவல்லவா இருக்கின்றது! என்னப்பனே? கணேசா! உன் சன்னிதானம் என்று அறியாமல் மயங்கிவிட்டேனப்பனே! எல்லோரையும் விக்னமின்றி காக்கும் விக்னேசுவரனே! என்னுடைய இவ்வேளையில் வந்துள்ள ஆபத்தைத் தீர்க்கவேண்டும். உன்னையல்லாது வேறு திக்கில்லை. என்னப்பா! ஆனைமுகத்தவனே! அரனார் திருமகனே! நாயேனைக்காப்பதுன் பாரமன்றோ! பாவிப்பாதகன் பின்னால் வருகின்றான். என்னுயிரை நீக்கினும் எல்லாவற்றிற்கும் உயர்ந்ததான கற்பென்றும் பூஷணத்தை என்னிடமிருந்து யாரும் அபகரிக்க விடாமல் காப்பாற்றவேண்டும். கணநாதா! பூதலத்திலுள்ள யாவருக்கும் சந்திலும் பொந்திலும் எங்கும் கண்ட திருமேனியாய் உட்கார்ந்து விக்னம் வராமல் காக்கும் கர்த்தா நீயன்றோ? இப்பேதையின் துன்பத்தைத் தற்போது காத்தருளல் வேண்டும். உன்னையே அண்டினேன். நீயே துணை. அப்பனே! அந்த மிகு தந்திமுக அப்பனே! எந்தனைச் சொந்தமுடன் காத்து வந்த இடரைத் தீர்த்து அபயமளிப்பாயே. ஆறுமுகன் பாலகனே! நீ இந்த இடிந்த கோவிலில் படிந்து வீற்றிருத்தல் முறையோ? ஆ! அதுவும் இவ்விடத்தில் என்

போன்ற அனாதையர்கள் அகப்பட்டுக்கொண்டு அலைகின்றவர்களுக்கு அபயமளித்து அன்புடன் காக்கும் தன்மையைக் கொண்டே இங்கு அமர்ந்துள்ளாய் போலும். ஆபத்து நெருங்கிவிட்டது. ஐயனே!'' என்று பலவாறாகச்சிந்தித்தவண்ண மிருக்க, அங்கு சமீபத்தில் பேசும் அரவம் கேட்க நமது மடந்தை இடியோசையைக் கேட்ட நாகம் போல துடி துடித்து ''ஆ! என்ன செய்வேன்? ஆபத்திற்குப் பாப மில்லை என்பார்கள். அதுபோல என் ஆபத்தை நீக்கிக் கொள்ளும் பொருட்டாக நான் என்னைக் காப்பாற்றும் கணநாதனின் பின் பக்கத்தில் நின்று மறைந்துகொள்கிறேன்'' என்று எண்ணிய வண்ணம் சரேலென்று அங்கு வெகு பெரிய சிலா ரூபமாய் எழுந்தருளியிருந்த விக்னேச்வரரின் பின்புறம் சென்று அவர் முதுகோடு முகமாய் ஒட்டிக்கொண்டு வினாயகருக்குச் சாத்தி யிருந்த பெரிய எண்ணெய் வழிந்த ஓர் துணியை இழுத்துத் தன்னை நன்றாய் மூடிக்கொண்டு, பதுங்கி உட்கார்ந்திருந்தாள். வினாயகரின் பின்புறத்திலேயே வெகு அடக்கமாக மறைந்துகொண்டு தூரவிருந்து பார்ப்பவர்களுக்கு வினாயகர் துணிக்குள் மறைந்திருப்பதுதெரியாவகையில் வெகு தந்திரமாய் உட்கார்ந்தாள். அவள் மனதில் பலவாறாக எண்ணி எண்ணி மனத்தைப் புண்ணாகச் செய்துகொண்டு கண்ணைத்திறவாமல் யோகியைப் போலவே அசைவற்றிருந்தாள்.

அந்தக் காடாந்த காரமாயுள்ள விடத்தில் பிள்ளையார் கோயிலிருப்பதும் நமது வைதேகிக்குச் சற்று ஆறுதலையுண்டாக்கிற்று. அந்தக் கோயில் எத்தனையோ காலமாக இடிந்தசோபிலாகவே கிடக்கின்றது. வருஷத்திற்கு ஒருமுறை அவ்விநாயகருக்கு உத்ஸவம் அங்கு சமீபத்திலுள்ள சிலர் சேர்ந்து பண்ணுகின்ற வழக்கம். அப்போது பெருத்த ஆடம்பரமாகச் செய்துவிட்டார்களானால் மறு வருஷந்தான் திரும்பிப்பார்ப்பது வழக்கம். அந்தத்திருவிழா காலத்தில் பெரியதுப்பட்டிபோன்ற ஒருதுணியை அந்த வினாயகருக்குச் சாத்திவிட்டால் பிறகு மறு வருஷத்தில் அதைக்களைந்துவிட்டு வேறு துணியை சமர்ப்பிக்கின்றது வழக்கம். அதில் சிலபேர்களுக்கு இந்தக்கோவிலை நன்றாகக் கட்டவேண்டுமென்பதும் உத்தேசம். ஆனால் அதற்குத்தகுந்த பணமுடைய மனிதர்களில்லாமையால் அந்தக் கோயில் வெகுகாலமாய் அவ்வாறே இருந்துவருகின்றது. அந்த வினாயகருக்கு அபாரமான சக்தி வாய்ந்திருப்பதால் வருஷந்தோறும் உற்சவம் செய்வதை மாத்திரம் சிலபெயர்கள் கடைப்பிடித்துத் தவறாமல் செய்துவருகின்றனர். இப்போதே சமீபத்தில் அந்த வினாயகரின் திருவிழா நடந்தேறியபடியால் அந்த இடிந்துகிடக்கும் கோயிலுக்குள் அதிகமான புற்று, கற்கள், மண், குப்பை முதலிய எதுவும் காலில் தட்டாமல் அரசமரத்தினிலைகளே நிறைய விழுந்து சலசலவென்று கிடந்ததுடன் வினாயகருக்குச் சாற்றியிருந்த துணியும் கிழியாமல் முழுத்துணியாகவிருந்தது. நமது பெண்மணிக்கு

அதுவெகு அநுகூலமாக உதவும் அணியாகவிருந்தது. அந்த இடத்தில் பாம்பு புற்று முதலிய எதுவிருக்குமோ என்பதைக் கூடப்பாராமல் அவள் மனமுற்றும் தன்மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதில் கண்ணுங் கருத்துமாய் எண்ணினளேயன்றி அங்கு பாம்பு புற்று முதலியது இருக்கும் என்பதைக்கூட அவள் மனதில் எண்ணவில்லை. அவள் அப்படி எதிருந்தபோதிலும் தன்னைத்தீண்டி அதனால் தான் மாண்டால்போதும் என்று எண்ணினளேயன்றி நம்மைப்பாம்பு தேள், நண்டுதெறுக்கால் முதலியன கடிக்கப்போகின்றதே என்று அவள் சற்றும் எண்ணினளில்லை. அவள் 4 அடி அகலமும் 6 அடி உயரமும் உள்ள பிள்ளையாருக்குப்பின்னால் சிறிய பூச்சியைப்போல தொற்றிக்கொண்டு மூச்சுவிடாமல் எங்கு என்ன பேச்சுக்குரல் கேட்கின்றது என்ற ஊக்கத்தோடு உட்கார்ந்திருந்தாள். அப்போது அவளுக்குச் சமீபத்தில் மனிதர் மெல்ல குசுகுசு என்று பேசும் சப்தம்கேட்டது. அதைக்கேட்டு நமது ஆரணங்கு நடுங்குகின்றாள். அவளையறியாமலேயே தேகந்தை திடும்திடும் என்று தூக்கிப்போடுகின்றது. ஐயோ! நம்தேகம் ஆடுவதைக் கண்டு இங்கு மனிதரிருப்பதாக ஊகித்த ஜோசைபறிந்து வந்து பார்ப்பார்களோ! என்ன செய்வேன்! ஏ. குஞ்சரிபாலா! கரிமுகலோலா! என்மனம் பஞ்சாய்ப் பறக்கின்றதே. என்னைக்கிஞ்சித்து கண்திறந்து கடாக்ஷிக்கலாகாதா? என்மனத்தில் என்னவோ என்னையறியாமலேயே பயம் நடுங்குகின்றதே. அந்தப்பயத்தைப்போக்கி உன் அபயப்ரதானஞ் செய்யமாட்டாயா ஏ! கணேசா! காருண்யமூர்த்தியே! உன்னையண்டிய என்னை அத்துஷ்டன் கையில் கிட்டவிடாமல் காத்து அக்கட்டைத்தடியன் சென்ற பிறகு என்னை எட்டி உதைத்துத்தள்ளிவிட்டாலும் நான் உன் திருநாமத்தை உச்சாடனம் செய்துகொண்டு எவ்விதமாவது முட்டியடித்துக்கொண்டு வெளியே சென்றுவிடுகின்றேன். அதுவரையில் நீ என்னைக்காட்டிக்கொடாமல் காப்பாற்றுவாய். என்னப்பனே! சர்வலோக சரண்யனை சங்கரசுதனே! ஐங்கரனே! ஆனைமுகத்தவனே! அபலையைக் காக்கவேண்டும். கணநாயகனே! என்று பலவாறாய் ஸ்தோத்திரம் செய்துகொண்டே விநயகரின்முதுகோடு முதுகாய் ஒட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

சற்று அருகில்கேட்ட பேச்சுக்குரல் இன்னும் அருகில் கேட்கவாரம்பித்தது. அவர்கள் பேசியதில் சில நமது வைதேகியின் செவியில்பட்டன. அதாவது:—

“என்ன ஆச்சரியம்! அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தவளின் உருவம் இதற்குள் எப்படி மாயமாய் மறைந்துபோயிருக்கும்? இது வியப்பிலும் வியப்பாகவல்லவா விருக்கின்றது! அவள் தேகத்திலுள்ள எலும்பு கூட நொறுங்கிப்போயிருக்கும் என்று நான் எண்ணியிருந்தேன். அவளது உருவமே காணப்படவில்லையே. ஆனால் அவள்

நேராகக் கீழேவிழாமல் கிணற்றில் தான் முக்கால்பங்கிற்கும் விழுந்திருக்கவேண்டும். ஏனெனில் ஜன்னலுக்கு நேரே கிணறேயுள்ள தாகையால் அவள் அப்படித் தான் விழுந்திருக்கவேண்டும். அப்படிக்கிணற்றில் விழுந்தவள் எங்குபோய்விடுவாள்? அவ்விடத்திலும் இறங்கி நாமிருவருமாய்ப் பார்த்தோமே, எங்கும் காணவில்லையே! இதென்னவாச்சரியமா யல்லவா இருக்கின்றது! அவளுக்குக் கிணற்றில் விழுந்துவிட்டபடியால் அதிகமாக காயம்பட்டிருக்காதென்று நினைக்கிறேன். அதனுல் அவள் மெல்ல தப்பித்துக்கொண்டு எங்கேயோ ஓடிப்போயிருக்க வேண்டுமேயன்றி அவளுக்கு என்னவோ உயிர்ச்சேதம் நேர்ந்திராதென்று திட்டமாய்ச் சொல்லுவேன். கிணற்றிலும் அதிகதண்ணீரில்லை. அவள் அதில் உயிர்துறக்க ஏதுவேயில்லை. அவள் நம் கையிலிருந்து தப்பித்துக்கொணடாள். இனி அவர்களிடம் அகப்படாமல் அகலவேண்டும் என்ற கருத்தோடு ஓடியிருக்கிறுள். நல்லது இருக்கட்டும். இந்தத் தோப்பையும் துறவையும் தாண்டிக்கொண்டு அவள் இன்னும் வெளியே சென்றிருக்க நேரமில்லையாகையால் எவ்விதமாயினும் அவளைப் பிடித்துவிடுவதே சரி. ஆஹா! கைக்கெட்டிய பொருள் வாய்க்கெட்டாமல் போய்விட்டதே. என்ன அதிர்ஷ்ட ஹீனம்? அவள் காலால் மிதித்த மண்ணும் மணம்பெற்று எழில் வழியுமென்றுல் வேறு சொல்லவும் வேண்டுமோ! இந்தத் தோட்டத்தைவிட்டுச் செல்ல வேறு வழிகள் கிடையாது. குறுக்கே பாய்ந்தால் முள் நிறைந்திருப்பதால் அவ்வழி செல்லல் அசாத்தியம். ஆகையால் விசையாக நட'' என்று கூறிக்கொண்டே அவர்கள் பிள்ளையார் கோயிலின் வாயிலை யடைந்தார்கள்.

இதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பெண்மணி "ஐயோ! இங்கேயும் வந்துவிட்டார்களே! ஒருக்கால் நானிருப்பதைக் கண்டு வருவார்களோ! ஆ! என்ன செய்வேன்! கணேசா! விஞயகா! அடைக்கலம் என்று உன்னடியை அடைந்தேன். என்னை இத்தருணம் கைவிடலாகாது. அபலையைக் காப்பதுன்பாரம்'' என்று மனதில் எண்ணமிட்ட வண்ணம் மனந்தவிக்க உட்கார்ந்திருந்தாள். அங்கு வந்து நின்றவர்களில் ஒருவன் "ஏனையா! இந்தக் கோயிலை நன்றுய்ச் சுற்றிப் பார்க்கலாம் வாருங்கள். இதற்குள் ஒருக்கால் மூலை முடுக்கில் ஒளிந்திருக்கலாமல்லவா? கிளம்புங்கள். கோயில்வாயிலில்நின்றுல் வேலையாகுமா?'' என்றுன்.

அதைக் கேட்ட மற்றெருருவன் அடே முட்டாளே! இது முழுமையுமிடிந்த கோயிலாயிற்றே. இதனுள் ஒளிவதற்கே இடமில்லை. நாலு மூலையும் இடிந்து கிடக்கின்றது தெரியவில்லையா. இதற்குள் சாதாரணமாக யாரும் தினப்படியில் செல்வதே வழக்கமில்லை. திருவிழாக் காலத்தில்தான் எல்லோரும் உள்ளே போவது. மற்ற நாளில்இங்கு சென்றுல், காவில் தேள் கொட்டிவிடுகின்றதாம்.

இந்தக் கோவிலையும் சாமியையும் பார்த்தால் பரிகாசமாயிருக்கின்றதேயன்றி, இந்தப் பிள்ளையாருக்கு அபாரமான சக்தியுண்டு. அதை நான் எத்தனையோ தரம் நேரிலும் கண்டிருக்கிறேன். ஆகையால் இங்கு அவள் உள்ளே செல்லவே முடியாது. காலில் தேள் கொட்டி இருக்கும். அதை நான் முதன் முதல் நம்பாமல் வெறும் வேஷ வார்த்தை என்றுதான் எண்ணினேன். ஆனால் நானதை லக்ஷியம் செய்யாமல், இந்தக் கோயிலுக்குள் காலைவைத்ததுதான் தாமதம்; உடனே பெரிய நண்டுதெறுக்காலோ, தேளோ கொட்டி உயிரே போய்விட்ட மாதிரியாகிவிட்டது. அதுமுதல் எனக்குபயம்தான். நான் இதில் திருவிழாக்காலந்தவிர காலையே வைப்பதில்லை. உனக்கு தைரியமிருந்தால் நீ உள்ளே சென்று சுற்றிப்பார்த்துவிட்டு வா.'' என்றான். இதைக்கேட்ட மற்ற இருவருக்கும் வெளிக்கு தைரியமாயிருந்தாலும் உள்ளுக்குள்ளே மாத்திரம் மனதில் உண்டான கிலியும் பயமும் கலந்து அப்போதே காலில் தேள் கொட்டுவதுபோல தோன்றுகின்றது. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், ஆனால் ஒன்று செய்வோம். வீணாக பயந்துகொண்டு உள்ளே சென்று விதிவலியால் தேள் கொட்டிவிட்டாலும் அது பிள்ளையார் சக்தி என்று தோன்றும். ஆதலால் இந்த மரக்கிளையை உடைத்து எடுத்துக்கொண்டு வருகிறேன். அந்தக் கிளையோடு கிளையாக நான் நிற்கிறேன். என்னை அங்கவஸ்திரத்தால் நன்றாகக் கட்டி விடுங்கள். பிறகு நீங்கள் இந்தக் கிளையை மெல்ல கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இந்தக் குட்டிச்சுவற்றின் மேலேறி நின்றுகொண்டு கிளையின் மேல்பாகத்தின் கொம்பை பிடித்துக்கொண்டு அப்படியே உள்ளே விடுங்கள். நான் கீழே கால் படாமலிருப்பதால் தேள் கொட்டாதாகையால் அங்கு சுற்று முற்றும் பார்த்து வருகிறேன். யாராவது இருப்பதுபோலத் தெரிந்தால் அப்படியே அப்பளாம் போல கொறுக்கி வெளியில் இழுத்துக்கொண்டு வந்து விடுகிறேன். இந்த யோசனை சரிதானே'' என்றான்.

இதைக்கேட்ட மற்ற இருவரும் வெகு ஆச்சரியத்தோடு ''ஆ! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். நாங்கள் நீசொல்லியது போலவே செய்கிறோம். ஆனால் ஒன்று. அவள் இங்கு இருந்தால் தான் அகப்பட்டுக் கொள்வாள். இங்கில்லாமல் இன்னும் எங்கேயாவது ஓடிப் போயிருந்தால் நாம் இங்கு யோசித்துக்கொண்டே இத்தனை நாழிகை நின்றுவிட்டோம். இதற்குள்ளாகவே கொஞ்சதூரம் போயிருக்கலாம். இன்னும் நீ சொல்லியது போல எல்லாம் செய்து உள்ளே சென்று பார்த்து இல்லாவிட்டால் பிறகு வெகு நேரமாகி விடுமே. அப்புறம் நாம் எப்படி அவளைத் தேடுவது? அதுதான் யோசனையாக விருக்கிறது. முதலாவது நாம் அவ்வளவு நேரம் கழித்துப் போவதற்குள் எந்த திக்கில் அவள் மறைந்தாலும் மறையலாமல்லவா? ஆகையால் நாம் ஒன்று செய்வோம். அதாவது இவ்விடத்

தில் அவளிருந்தால் இதைவிட்டு இனி தப்பமுடியாது. நாம் மூவராக இருக்கிறோமல்லவா. மூவரில் ஒருவன் இங்கேயே காவலாக விருக்கட்டும். மற்ற இருவரும் வெளியேசென்று இந்த தோட்டமுற்றும் பார்த்து வருகிறோம். அதற்குள் அவள் உள்ளிருக்கின்றவள் வெளியில் போகாதபடி பார்த்துக்கொள்ளலாம். அப்படி உள்ளே இராவிட்டால் வெளியில் போய்க்கொண்டிருந்தாலும் நாங்கள் இழுத்துக் கொண்டுவந்து விடுகிறோம். ஆகையால் நீ, இங்கேயே இருந்து ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். நாங்கள் ஒரு சுற்று பார்த்து வருகிறோம். என்ன வேகமாக நடந்திருந்தாலும் அவள் பெண்பிள்ளையாதலால் அதிக தூரம் சென்றிருக்க முடியாது. ஆகையால் இவ்விதம் செய்வதுதான் உசிதம். இதனால், இன்னொரு காரியமும் அநுகூலமாகும். அதாவது, நாங்கள் வெளியில்பார்த்துத் திரும்பி வருவதற்குள் பொழுதுவிடிந்து விடுமானால், நாம் இந்தக் கோயிலுக்குள் போகாமலேயே, அவளைக் கஷ்டமின்றிக் கண்டுபிடித்து விடலாம். எத்தனை நேரந்தான் இங்கிருக்க முடியும். எப்படியும் அவள் வெளியில் வந்துதானே தீரவேண்டும். நாம் கஷ்டப்படாமலேயேஇங்கு நன்றாய் பொழுது விடிகின்றவரையில் காவலிருந்தே தீருவோம். பிறகு என்ன நடக்குமென்பதைக் கவனிப்போம். நேரமாகி விட்டது. உஷார், நாங்கள் ஒரே ஓட்டம் எடுக்கின்றோம்" என்று கூறிக் கொண்டே அவர்களிருவரும் ஓடவாரம்பித்தார்கள்.

ஆஹா! விநாயகர் பின்புறம் அனுதையாய் உட்கார்ந்திருந்த நம் கற்பிற்சிறந்த காரிகையான வைதேகி உயிர்தத்தித் துள்ளிக்குதித்திருந்த சமயம் இந்த முரடர்களின் சம்பாஷணையை முற்றும் கேட்டுக்கொண்டிருந்த அவளது ஹிருதயம் வெடித்து ஆவி வெளிக்கிளம்பி விடும்படியான நிலைமையிலிருந்தது. "ஐயோ! இந்தப் பாவியினிடமிருந்து தப்பினேம் என்று எண்ணியிருந்த சமயம் மறுபடியவன் கையினாலேயே, நசுங்கி சாகவேண்டிய விதிவந்து வாய்ந்துவிட்டதே. ஐயோ! என்ன செய்வேன்? ஆ! ஆனைமுகத்தவனே! உன்னை அண்டியும் என்னை நீ கைவிட்டு விடுவாய்போலிருக்கின்றதே. ஹா! என்னைத் தேடிக்கொண்டு அந்தச் சண்டாளர் வெளியில் போயிருக்கின்றார்களே. அவர்களுக்கு நான் எங்கிருந்து கிடைக்கப்போகிறேன். இந்த இடத்திலிருப்பதை எப்படியும் அவர்கள் பேசியதிலிருந்து என்னைக் கண்டுபிடித்தே கொண்டுபோய் விடுவார்போல விருக்கின்றதே. ஐயோ! பொழுது விடிந்துவிட்டால் கட்டாயம் நான் இவர்கள் கையிலகப்படுவது திண்ணம். அதற்குள் நாம் எப்படி இந்த விடத்தைவிட்டுத் தப்பியோடுவது? எமகிங்கரன் போல இங்கு அவன் காவல் இருக்கிறானே. ஐயோ! இதென்ன அனியாயம்! போலீஸ் ஸ்டேஷனில் என்னை வைத்திருந்தும் அங்கும் இத்தகைய அக்ரமம் நடக்குமா? எவனோ சண்டாளன் அங்குவந்து நம்மிடம் சொல்லிய

வார்த்தை எல்லாம் வெறும் கட்டுக் கதை என்றல்லவா இப்பொழுது தோன்றுகின்றது. இப்போது இவர்கள் பேசிய மாதிரியையும் அங்கு நடந்த மாதிரியையும் ஒட்டிப் பார்த்தால் இவர்கள் போலீசார் அல்லவென்றே தோன்றுகின்றது. போலீஸாக விருந்தால் கேவலம் இத்தகைய அட்டூழியத்தைச் செய்வார்களா? மேலதிகாரிகளுக்காவது பயப்பட்டு நடக்கமாட்டார்களா? போலீஸ் ஜெயிலுக்குள்ளே லஞ்சம் கொடுத்து வந்த மனிதனுக்கு இங்குகூட சகபாடிகள் எப்படிச் சேர்ந்தார்கள். இவனை அயலார் கண்டால் இவன் மோசத்தை யறிந்து சட்டப்படி இவனையும் சிக்ஷிக்கவேண்டிய முறைமை தப்பி இவனுக்குத் துணையாக வந்திருக்கும் மாதிரியைப் பார்த்தால் இவர்கள் போலீஸார் அல்லாதவர்களாக இருக்கவேண்டும். அன்றேல் போலீஸார்களிலேயே சிலர் ஒரே கக்ஷியாக துன்மார்க்கர்களாக விருந்து ஒருவருக்கொருவர் துணைபுரிந்து அக்கிரமங்களைச் செய்து, அனியாயமாய் பெண்களின்மேல் குற்றத்தைச்சாட்டி அவர்களை சிறைபிடித்து கடைசியில் இவ்விதமான துராகிருதத்தில் இறங்கி எல்லோரையும் கெடுத்து அவர்களை நாசமாக்கும் மோசக்காரப்பாவிகளாக விருக்கவேண்டும். ஐயோ! இப்போதுதான் எனக்கு இதில் சந்தேகம் ஏற்பட்டது. இந்தச் சண்டாளர்கள் கையில் சிக்கி கற்பழிந்து பின் இவர்களால் நாம் தப்புவதைவிட கற்பழியாமல், காலனுக் கடிமையாதலே மெத்தவும் நலமானவேலை யல்லவா? சிச்சி! இந்தத் துட்டப் பதர்களின் கண்ணில் நம் சவம்கூடக் காணுதபடி நாம் இறத்தல்வேண்டும். அவ்விதம் செய்தால் தான் என் மனம் நிம்மதியடையும். நாம் இப்போதே அதற்கான வேலையைச் செய்யவேண்டும். அந்த முரடர்கள் வருவதற்குள் நாம் மெல்ல எவ்விதமாகிலும் தப்பிவிட வேண்டியது. இங்கேயே இருந்தால் கட்டாயம் அவர்கள் என்னைக் கண்டுவிடுவார்களாகையால் நாம் மெல்ல ஓசை செய்யாமல் இங்கிருந்து, விநாயகரின் துணியை விலக்கிக்கொண்டு, இந்த பின்புறமிருந்தே எவ்விதமாகிலும்தப்பிவிடவேண்டும் காருண்யமூர்த்தி! உம்மை நம்பி இத்துணை நேரம் இங்கிருந்ததால் அச் சண்டாளர்கள் உம்முயை சக்திக்குப்பயந்து உள்ளே வராமலும் என்னைக்காணுமலு மிருந்தார்கள். இனி பொழுது விடிந்துவிடுமானுல் அவர்கள் விடமாட்டார்கள். ஆகையால் மெல்ல நான் உம்மை நம்பி வெளியேறுகின்றேன். கடைசிவரையில் என் கற்பைக் காத்துக் கரை சேர்த்துவிட்டால் போதும். எனக்கு தற்சமயம் வேண்டியவரம் அவ்வொன்றே.'' என்று பலவாறுக எண்ணமிட்ட வண்ணம் மெல்ல ஓசை செய்யாமல் அந்த விநாயகரின் துணியை விலக்கிக்கொண்டு தலையை நீட்டி சுற்று முற்றும் மெல்லப் பார்த்தாள். வெளியில் நின்றிருந்தவன் இந்த கோவிலை சுற்றிச் சுற்றிப் பார்த்தவண்ணமாகவே நிற்பதை யறிந்த வைதேகி, ''ஐயோ! இப்பாவி நாலாபக்கமும் பார்க்கிறானே. நாம் குதிக்கும் தருணம் பின்பற்றி இழுத்துவிட்டால் என்ன செய்வேன்? ஆ! என் கால வித்தியாசத்தால் எல்லாம் இவ்வாறு வந்து

சேரவேண்டும்! ஐயோ! இப்பூவுலகில் நான் பெண்ணாய் ஜெனித்ததே துயரப்படுவதற்குத் தானோ? ஹா! என்னைப்போல அதிர்ஷ்ட ஹீனைகள் இந்த உலகத்தில் கிடைக்கமாட்டார்களென்றே சொல்ல வேண்டும். சீச்சி! என்ன பிறப்பு!" என்று தன்னைத்தானே வெறுத்துக் கொண்டு அந்த விடத்தைவிட்டுப் பின்புறம் பார்த்தாள். அங்கு இடிந்துகிடந்த குட்டிச் சுவரும் அதற்குப் பின்னால் நிறைய நாக தாளிப் புதருமாய்க் காணப்பட்டது. அதைக்கண்ட வைதேகி "ஹா! இந்த நாகதாளியில் விழுந்து இறப்பதைத் தவிர வேறு வழியொன்று மில்லை. கணநாதா! இதோ அப்பாவிமுன்புறமேசென்று அவர்கள்வரும் திக்கைக் கவனித்துக் கொண்டிருக்கிறான். இதுதான் எனக்கு நல்ல தருணம். இந்தக் குட்டிச்சுவர் மீதிருந்து ஒரே பாய்ச்சலாகக் குதித்து விடுகின்றேன். நாகதாளிப்புதரில் விழுந்து அதனால் உயிர் துறந்தாலும் சரி. அன்றேல் அதற்கும் சாகாமல் பிழைத்துக் கொண்டாலும் பின்பு நடப்பதைப் பார்த்துக் கொள்வோம். இதோ துணிந்தேன்." என்று கூறியவண்ணம் தனது ஆடையை தத்தாமல் இறுக்கிக்கட்டிக்கொண்டு மெல்ல குட்டிச்சுவற்றின் மேல் ஏறி அங்கிருந்து ஒரேகுதியாக தன் முழுபலம் கொண்டமட்டும் ஒரே எழும்பாக எழும்பி தபீரென்று குதித்துவிட்டாள். குட்டிச்சுவற்றிற்கு இப்புறமிருந்து பார்த்தபோது ஒரே வரிஞ்சலாக நாகதாளி படர்ந்திருந்தது தெரிந்ததேயல்லாமல் அந்தப் புதர் எந்தவரைக்கும் இருப்பதுஎன்பதுவெளிப் பக்கத்திலிருந்து தெரியவே இல்லை. மேலும் அங்கு பெரியதாக வளர்ந்து குடைபோல மறைத்திருந்த அரசமரத்தின் நிழலில் அங்கு அதிகமாக எதுவும் இப்புறத்தி லிருந்தவகளுக்குத் தெரியவில்லை. இருட்டில் திடீரென்று குதித்துவிட்டவள், தன் முழுப்பலம் கொண்டமட்டும் எம்பி குதித்ததால் அவள் சுமார் 6, 7 அடிக்கு அப்பால் திடீரென்று விழுந்தாள். அங்கு படர்ந்திருந்த நாகதாளி குட்டிச் சுவற்றிற்குமேல் ஒரு அடி உயரமே படர்ந்திருந்தமையால் அவள் எழும்பி குதித்தபோது, அவள் கொடிபோன்ற மெல்லிய தேகத்தை உடையவளாகையால், நாகதாளிக்குமேல் எழும்பி விட்டபடியால் அந்த நாகதாளி யவளது கையிலாவது கால் பாகத்திலாவது பொத்தாமலிருந்தது. அவள் திடீரென்று கீழே விழுந்தவிடம் வெல்வெட்டு போன்ற மெத்தென்று பச்சிலைகள் நிரம்பி இருந்த இடமாதலால் அதிகமாக ஓசையுண்டாக ஏதுவில்லாமல் போய்விட்டது. அவள், அங்கு விழுந்தவள், முன்னால் விழுந்து அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும், மனதில் உண்டான பயத்தினாலும் முற்றிலும் சோர்வடைந்து விழுந்துவிட்டாள் என்றாலும் நினைவு மாத்திரம் இருக்கிறதே யன்றி மற்றபடிக்கு அப்புறம் இப்புறம் அசைவதற்குக் கூட அவளால் முடியவில்லை. அவள் தபீரென்று விழுந்த விடத்திற்கு 2, 3 அடிக்குப் பக்கத்திலுள்ள கீரைப் பாத்தியில் கீரைபறித்துக் கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளை அங்கு

தபீரென்று விழுந்ததைக் கண்டு அப்படியே திடுக்கிட்டு "ஐயோ! இதென்ன பேயோ! பிசாசோ! தெரியவில்லையே! தபீரென்று விழுந்து விட்டது." என்று கூக்குரலிட்டுக் கையிலிருந்த கீரையை உதறிவிட்டு சரேலென்று 10 அடி தூரத்திற்கு ஓடிவிட்டாள். அவளுக்குத் தன்னையறியாமல் பயம்வந்து கப்பிக்கொண்டது. கால்கள் பின்னவிட வாரம்பித்தன. வயிற்றில் பெரிய இடிவிழுந்துவிட்டமாதிரியான குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அவள்முற்றிலும் பயத்தினால் தளர்ந்துபோய் "ஐயோ! இதென்ன தர்மசங்கடமா யிருக்கின்றதே. வயிற்றுப் பிழைப்பிற்காக விடியுமுன்வந்து கீரையைப் பறித்து வைத்தால் அதன்மேல் தபீரென்று எதுவோ விழுந்துவிட்டதே. ஐயையோ! என்ன செய்வேன்? அதனருகில் செல்வதற்கும் பயமாக விருக்கின்றதே. அத்தனை கீரையும் பாழாய்விட்டதே. ஹா? என்ன செய்வேன். வீட்டிற்குப்போய் விடுவோமென்றாலும் வயிற்றுக்குப் பிழைப்பில்லாமல் காலைவிடிந்தால் பட்டினியாகச் சாகவேண்டுமே. ஐயோ! கடவுளே! இதென்ன அனியாயம்! அன்றாடம் இந்தக்கீரையை விற்று ஜீவனம் செய்யும்படி எனக்குக்கட்டளையிட்டும் இன்று அந்தக்கீரையின் வாயிலும் மண்ணைப்போட்டு விட்டாயே. நான் என்ன செய்வேன்? கீரை இல்லாமல் வீட்டிற்குப்போனால் கணவன் கொன்று விடுவானே." என்று பலவாறாய்ப் புலம்பிய வண்ணம், மறுபடி மெல்ல இரண்டோரடி எடுத்துவைத்து "அங்குள்ள கீரைபோனால் போகட்டும். இந்தப் பாத்தியில் பறித்த கீரையை மாத்திரமாவது, மெல்ல ஓசை செய்யாமல் கொண்டுபோவோம்" என்று எண்ணியவளாய் வைதேகியைப் பார்த்தவண்ணம் பயத்தோடு மெல்ல அடிமேலடியாக வைத்துக் கொண்டு கீரைப்பாத்தியை யடைந்தாள்.

நமது மங்கையர் மாமணியாகிய வைதேகி, கீழே விழுந்த அதிர்ச்சியால் கையசைக்கல், காலசைக்கலின்றி படுத்திருந்தாளேயன்றி அவள் அங்கு கீரைக்காரி பயந்து ஓடியதை எல்லாம் பார்த்தவண்ணமே இருந்தாள். "ஐயோ! நம்மைக்கண்டு பயந்து ஓடுகின்றாளே பாபம். நம்மை பிசாசு, பேய்போல எண்ணிவிட்டாளே. எதற்கும் ஸ்திரீ துணையாகவிருப்பதால் அவள் பயத்தை நாமேமாற்றி அவள் உதவியைக் கொண்டே நாம் இனி வெளிக்கிள்ம்பல் வேண்டும். ஐயோ! நம்முடைய ஜென்மம்தான் என்ன ஜென்மம்! அங்கு விழுந்து உயிர்துறக்க வெண்ணினால், அது கிணறாகவந்து என்னை மறிக்கவிடாமல் மறைத்தது. அதற்குத்தான் தப்பி, வந்தவிடத்தில் மறுபடி அந்தப் பாதகன் கையிலகபபட்டுச் சாகாமலிருக்கவெண்ணி இந்நாகதாளிப்புதரில் விழுந்து உயிர் துறக்கலாம் என்றால், இங்கு வந்து கீரையா குறுக்கிடவேண்டும்! ஐயோ! அங்கிருந்து பார்ப்பதற்கு முற்றிலும் நாகதாளியே நிறைந்த புதர் என்றல்லவா எண்ணினேன். இதை இந்த பாத்திகளுக்கு வேலியாகவல்லவா படரவிட்டிருக்கிறார்

கள். ஐயோ! இதுவும் என்துரதிர்ஷ்டபலனே? இந்த நாகதாளி சுவர் போலவரிஞ்சலாகப் படர்ந்திருக்கின்றதே; அது குறுக்கிலும் படர்ந் திருக்கலாகாதா. ஆ! எல்லாவிதத்திலும் நாம் வெகு அதிர்ஷ்டஹீனே. என்னுயிர் பல இடர்களுக்கும் தப்பிப் பிழைப்பதைப் பார்த்தால் இன் னும் இந்தமண்ணுலகத்தில் என்னென்ன துன்பங்களனுபவிக்கவேண்டு மோ தெரியவில்லை. ஐயோ! பாட்டி! நீ காட்டிய கொடுமையின் கொடி யல்லவா என்னை விடாமல் தொடர்ந்து வந்து அடுத்தடுத்து வதைக் கின்றது. ஐயோ! சிச்சீ! என்ன பிறவி பிறந்தேன்! என்னை இவ் வித அல்லல் படுத்துவதற்காகவா ஈசன் சிருஷ்டித்தான். ஆ! இவ்வித அல்லல்பட்டுக் கடைசியில் ஒருக்கால் துன்பம் தொலைந்திருந்தாலும் என் ஜென்மம் எதற்குப் பிரயோஜனம்? பெண்ஜென்மம் எடுத்ததற் குப் பலனாக உலகத்தவரைப்போல எனக்கு ஏதாவது பலன் கிடைக் கக்கூடிய புண்ணியத்தைச் செய்து குலஸ்திரீயாகப் பிறந்தேனா? கேவலம் எல்லோரும் கண்டு ஏசிப்பேசும் தாசியின் வயிற்றிலல்லவா பிறந்தேன்! என் மனசாக்ஷிக்கு விரோதமின்றி நான் எவ்வளவுதான் ஒழுங்காக நடந்துகொண்டாலும் நான் பதிசிச்ருஷை என்ற பெரும்பாக்கியம் கிடைக்காத பாவியாகத்தானே காலம் தள்ளவேண் டும். நான் மனதில் வரித்த மணாளனையல்லாது இம்மையில் வேறு ஒருவனையும் கண்ணெடுத்தும் பாரேன். இது முக்காலும் சத்தியம். நான் அப்படிப்பட்ட பாக்கியம் செய்யாத அபாக்யவதியாகவல்லவா பிறந்துவிட்டேன். என் மனத்தை நான் எவ்வளவு சுத்தமாக வைத்து நடந்து காலத்தைக் கடத்தினாலும் பாழும் ஜனங்கள் என்னைப் பார்த் தால் "ஹா! இவள் தாசிப்பெண்ணாம்; என்ன அழகாகவிருக் கிறாள். இவளை ஒருகை பார்ப்போம்" என்ற வசைமொழியை தானே போக்கிரிப்பயல்கள் கூறுவார்கள். அந்தப் பாதகத்திற்கு என்ன செய்வேன்? பாழும் உயிர் இவ்விதமாகவா தப்பவேண்டும்? இந்தச் சமயம் நமக்கு வழிகாட்ட இந்தம்மாள் தோன்றி இருக் கிறார்கள் என்று எண்ணினாலோ அந்தம்மாள் நம்மைக் கண்டு பயந்து ஓடி ஒளிகின்றாள். இதுவும் நான் செய்த தீவினைதானே. ஆ! அதோ அந்தம்மாள் இந்தப் பக்கம் வருகின்றாள். அவளை மெல்லக் கூவியழைத்து நாம் பேயுமல்ல, பிசாசுமல்ல என்பதைத் தெரிவித்து அவளோடு நாம் தப்பித்துக்கொண்டால் தான் பிழைக்கலாம். ஒருக்கால் அந்தப்பாவிகள் இங்கேயும் வந்துவிட்டால் என்ன செய்வது? நேரமா னால் ஆபத்துதான். எப்படியாகிலும் அந்தம்மையை நாம் பயம் தெளிவிக்கவேண்டும்" என்று எண்ணியவளாய் மெல்ல தனது கையைக் காலையசைத்து கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்து, அந்தக் கீரைக் காரியைப் பார்த்து, "அம்மா! அம்மா! தாங்கள் சற்றும் பயப்பட வேண்டாம். நான் பேய், பிசாசல்ல: உங்களைப்போல பெண்பாவை தான். தாங்கள் இப்படி என்னருகில் வாருங்கள். ஒரு முக்கியமான விஷயம் சொல்லவேண்டும். பயப்படாமல் வாருங்கள் என்று கூவினா

மினிய குரலோடு கூவியதைக்கேட்ட கீரைக்காரிக்கு கொஞ்சம் பயம்
தெளிந்ததென்றாலும் உள்ளுக்குள் மாத்திரம் நடுங்கியபடியிருந்தது.
வைதேகியின் வார்த்தையை அவள் அப்போதும் முற்றும் நம்பமுடிய
வில்லை. ஒருக்கால் பிசாசுதான் இப்படிப் பேசுகின்றதோ என்று மறுபடி
பயந்து விழித்தாள். இதையறிந்த வைதேகி மறுபடியும் "அம்மா! அம்
மணி! இச்சமயம் தாங்கள் சற்றும் பயப்படவேண்டாம். கள்ளர் பயத்
திற்கு பயந்து இவ்விதம் குதித்தேன். ஒருக்கால் மறுபடி இங்கு கள்
ளர் வந்துவிடுவார்களோ என்னவோ பயமாகவிருக்கிறது. தயவுசெய்து
என்னை இந்த தருணம் தாங்கள் தான் காப்பாற்றவேண்டும்." என்று
மன்றாடிக் கேட்ட வண்ணம் தத்தித் தடுமாறியபடி எழுந்து நடந்து
கீரைக்காரி யிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தாள். கீரைக்காரிக்கு
இவளை அருகில் கண்டபிறகே சற்று பயம் தெளிந்து இவளது
பரிதாபகரமான வாத்தையைக்கேட்டு, மனமிரங்கி அருகில்
வந்து "அம்மா! நீ யார்? ஏன் இந்த ராத்திரி சமயத்தில் இங்கு
வந்தாய்? உன்னைப் பார்த்தால் பச்சைக்கிளிபோல விருக்கிறதே. நீ
ஒண்டியாக எப்படி வந்தாய் உனக்கென்ன ஆபத்து வந்துவிட்டது"?
என்று வெகு பக்ஷமாய்க் கேட்டாள். இதைக்கேட்ட வைதேகிக்கு
கண்ணீர் தானாகவே தாரை தாரையாகப் பெருகுகின்றது. அவள்
நாத் தடுமாற "அம்மா ! ....நான்.....கே....வல.....ம்....ப.....ர...
தே....சி....எ...ன்...வ....ர...ள்....ற்...றைக்....கே...ட்...டா....ல்,
க....ல்....லு...ம்...கரை...யு...ம்...அவை....க...ளை...சொல்...வ...
தற்...கு...பொ...ழு....தே.....வி...டி...ந்....து...விடு....ம்...அவை...
க....ளை...பி...ற...கு...சொ....ல்...கி...றே...ன்...என்...தா...யே...
அனு...தை...யா...கி...ய...எ....ன்...னை....இ...ச்....சம...யம்...தாங்
....கள்....தா....ன்...காப்.....பா...ற்....ற....வே...ண்....டும்....க...ள்...
ள...ர்.....க....ள்...பின்....னு....ம்...வந்....து. - விடு...வா...ர்....கள்.
ஹா...என்...னா....ல்...நி...ற்க ...முடி...ய...வில்...லை...அம்....மணி
...என்தாயே.....த...ய...வு...செ....ய்...து...எ....ன்...னை....த்...
தங்...களி...ல்...லத்....தி....ற்...கு...அ...ழை...த்...துக்....கொண்
டு....போக...வேண்...டுமா...ய்...உங்...களை...வேண்டு ... கின் ...
றேன்...அ...ம்...ம...ணி...தா...யே...இப்...பா....வி...யை...கை...
வி...டா...தீ...ர்...கள்...உ...ங்...க....ளு...க்... கு ... வந் .... த ...
ன...ம்...அ....ம்...ம....ணி"....என்று வெகு பரிதாபகரமாகக் கூறி
யதைக்கேட்ட கீரைக்காரி முற்றிலும் கலங்கிப்போய் இவள் கோர
மான நிலைமையைக் கண்டு சகியாதவளாய் கண்ணீர் பெருக வைதேகி
யைப் பார்த்து "அம்மா! உன் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு
சகிக்க முடியவில்லை. நானும் பிள்ளைகுட்டிக்காரிதான். எனக்கு உன்
வார்த்தையைக் கேட்கும் போதே மனம் பாகா யுருகுகின்றது.
கண்ணீர் தானாகவே வருகின்றது. அம்மா! உலகத்தில் மானிடப்
பிறவியாகப் பிறப்பது எதற்கு? ஒருவருக்கொருவர் உபகாரம் செய்வ

தற்குக்கூட உபயோகமற்ற கடையராகவா இருப்பது? பக்ஷி முதலியவை களும்கூட தமது இனத்திற்கு ஒரு ஆபத்து நேருமாயின் கும்பல்கூடி கத்துகின்றனவே. அப்படிக்கிருக்க எல்லாப் பிறவியிலும் உயர்தரமானி டப் பிறவி எடுத்தவர்கள் ஒரு ஆபத்துக் காலத்தில் மற்றவர்களைத் தாங்காமல் எதற்கு இருப்பது? என் மனம் அத்தகைய கொடூரமான தல்ல. அம்மா! இதோ இந்தக் கீரை பறித்த வரையில் போதும். இதை எல்லாம் கட்டாகக் கட்டி எடுத்துக்கொண்டு, இதோ அருகி லேயே என்வீடு இருக்கிறது, அங்கு உன்னை யழைத்துக்கொண்டு போகிறேன். என்னாலான உதவியை உனக்குச் செய்யநான் தயாராக விருக்கிறேன். நீ எதற்கும் பயப்படாதே. அம்மா! உன் சேலை முழு தும் ஏன் ஈரமாக விருக்கின்றது?" என்று வெகு உருக்கத்தோடு கூறிய வண்ணம் அங்குக் கிடந்த கீரைகளை எல்லாம் வாரி தான் கொண்டு வந்திருந்த கூடையில் வைத்து எடுத்துக்கொண்டு வைதேகியையும் அழைத்துக்கொண்டு மெல்ல நடந்தாள். வைதேகிக்கோ நடக்கவே முடியவில்லை. கால்கள் நடுங்க அடிமேலடியாக நடக்கிறாள். அவள் வயிற்றில் மாத்திரம் இடி இடிப்பது போல குழம்பிக்கொண்டே இருந் தது. அவள் பின்புறம் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்லலானாள்.

அங்கு பிள்ளையார்கோவிலில் காவல் நின்றவன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே சென்றவர் வழியை நோக்கி நிற்கும் சமயம் இவள் திடீரென்று குதித்து விட்டதும் அவனுக்கு ஏதோ சிறிது ஓசைகேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான். அப் போது நிலவின்வெளிச்சம் இலைகளின் வழியாய், பிள்ளையாரது கண்கள் உள்ள பாகத்தில் பளிச்சென்று தெரிந்ததைக் கண்ட அவன் "ஹா! விநாயகர் சக்தியை யறிந்தேன். கண்ணைத் திறந்துகொண்டு உக்ரகமாக சத்தம் செய்திருக்கிறார்" என்று எண்ணி மறுமுறை விநாயகரைப்பார்க்கப் பயந்து, அவர்கள் சென்ற திக்கில் இவனும் வெகு வேகமாக மூச்சுத்தணறும்படி ஓடவாரம்பித்தான். இவன் ஓடி வருவதைக்கண்ட மற்ற இருவரும் "ஆ! அங்கேயே அவள் அகப்பட்டு விட்டாள்போல விருக்கிறது. அதைத் தெரி விக்கவே அவன் ஓடிவருகின்றான். சரி, இனி நாம் சிரமப்பட்டு அங்கெல்லாம் செல்லவேண்டாம். திரும்புவோம்" என்று கூறிய வண்ணம் திரும்பி ஓடிவர வாரம்பித்தார்கள். பிள்ளையார் கோயிலிலிருந்து ஓடிவந்தவன் தலைகால் தெரியாமல் விநாயகர் கண் ணைத் திறந்துவிட்டார் என்ற பயத்தினால் எதிரில் அவர்கள் வருகிறார்கள் என்பதையும் பார்க்காமல் அவர்கள் மேலேயே விழுந் தடித்துக்கொண்டு ஓடினான். இதைக்கண்ட இருவரும் "இதென்ன ஆச்சரியம்! இவன் நம்மைதள்ளி யடித்துக்கொண்டு ஓடுகின் றானே. இவனுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதோ" என்று

வியந்து, இருவரும் அவன்கையை இழுத்து நிற்கவைத்தார்கள். அப்போதுமவன் நிலையறியாது 'விநாயகர் விநாயகர்' என்று கூறியவண்ணம் மறுபடி இவர்களைத் திமிறிக்கொண்டு ஓட வாரம்பித்தான். இதைக்கேட்ட அவ்விருவரும் "இதென்னடா இது விநாயகர்,விநாயகர் என்கிறானே" என்று பயந்து அவர்களும் அவனைத் துரத்தியோடிப் பிடித்துக்கொண்டார்கள். "என்னடா சேதி; ஏன் ஓடுகின்றாய்.? விநாயகர் கோயிலில் என்ன ? அந்தப்பெண் அகப்பட்டு விட்டாளா ?" என்றார்கள்.

இதைச் சற்றும் கவனியாத அவன் "ஐயோ ! ஐயோ ! பயம் பயம், விநாயகர். கணபதி.உம்உம்" என்கிறான்.மேலே சொல்வதற்குள் மறுபடி பயந்து ஓடுகின்றான். இதையறிந்த மற்றவர் "இதென்ன பெருத்த இழவா இருக்கின்றது? ஏன் நீ இப்படி ஓடுகின்றாய். உனக்கென்ன? விநாயகர் கோயிலில் என்ன கண்டாய்? சொல்லடா நேரமாய் விட்டது. அந்தப்பெண் அங்கு இருக்கிறாளா" என்று அவனை விடாமல் பிடித்துக்கொண்டு கேட்டதன் மேல் அவன் "ஆ ! பெண்ணு இல்லை. இல்லை விநாயகர் கண்ணுகண்ணு" என்று மறுபடி ஓட வாரம்பித்தபோது அவனை ஓடவிடாமல் தடுத்து மெல்ல நல்லதனமாகக் கேட்டதின் மேல் அவன் சற்று பயம் தெளிந்து "ஐயோ ! நான் இனி அங்கு வரவேமாட்டேன். நீ சொல்லியது சரியாகத் தானிருக்கிறது. அந்த விநாயகர் வெகு சக்தி வாய்ந்தவர் என்பதை நானறிந்து கொண்டேன். நீங்களெல்லாம் வந்துவிட்ட பிறகு நான் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே நின்ற சமயம் என்னவோ மாதிரியான ஓசைகேட்டது. இதென்னவென்று நான் திரும்பிப் பார்த்தபோது விநாயகர் கண்ணைத் திறந்துகொண்டு உட்கார்ந்திருந்தார். அவர்தான் அவ்விதம் ஓசையும் செய்திருப்பார் என்று எண்ணி பயந்து ஓடி வந்துவிட்டேன். அந்தப் பெண் அகப்பட்டாலும் சரி. இல்லையேல் அகப்படாவிட்டாலும் விநாயகர் கோயிலுக்கே இனி நான் வரமாட்டேன். என்னை விட்டுவிடுங்கள்" என்று கூக்குரலிட்டான். இதைக்கேட்ட இருவரும் "ஓஹோ! விநாயகர் இரவு வேளையில் கண்ணைத் திறப்பது வழக்கம்போல விருக்கிறது. சரி நீ அங்குச் செல்லவேண்டாம். வா நாம் போய்விடுவோம். நாங்கள் எங்கெங்கேயோ தேடினோம் அகப்படவில்லை என்று எஜமானனிடத்தில் சொல்லிவிடலாம்" என்று எண்ணிய வண்ணம் அவ்விடத்திலேயே சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு நேராக திரும்பி வீட்டைநோக்கி நடக்க வாரம்பித்தார்கள். வரும் வழியில் விநாயகரின் கோயிலை தாண்டிப்போக பயந்துகொண்டே தயங்கி தயங்கி நின்று கடைசியில் கண்ணைக் கெட்டியாக மூடிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார்கள். விநாயகரின் கோயிலைத் தாண்டி இந்தப்பக்கம் வந்து நின்ற சமயம் இவர்கள் காதிற்குப் பேச்சுக்குரல் கேட்டது.

அடே எந்தப்பக்கமடா பேச்சுக்குரல் கேட்கின்றது. ஒருக்கால் அந்தப் பெண்தான் யாரிடமாவது பேசுகின்றுளா பாருங்கடா என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டே நாலா பக்கங்களிலும் பார்த்தார்கள். அங்கு எதுவும் தெரியவில்லை. உடனே விஞயகர்தான் என்னவோ பேசுகின்றுப் போலவிருக்கின்றது ஒருக்கால் எழுந்து வந்தாலும் வருவார். வா நாம் ஓடிவிட்டால்தான் நல்லது. இல்லையேல் விஞயகர் வந்து நம்மை இரையாக விழுங்கிவிட்டாலும் விடுவார். ஆகையால் சீக்கிரம் வாருங்கள்'' என்று கூறிக்கொண்டே மூவரும் செல்கையில் அதில் ஒருவன் திரும்பிப் பார்த்தபோது அங்குள்ள நாகதாளி வேலிக்கு வெளியில் கீரைக்காரி நிற்பதைக் கண்டுவிட்டான். உடனே "அடேய் அடேய் அதோ பாரடா ஒரு உருவம் தெரிகின்றது. அவள்தான் அவள்தான் விடாதே. ஓடு அந்த நாகதாளியை எல்லாம் ஒரே வெட்டாகப் போடு'' என்று கூவிய வண்ணம் உடையில் சொருகி வைத்திருந்த கத்தியை எடுத்து நாகதாளிகளை ஒரே வெட்டாக போட்டுவிட்டு மூவரும் அந்த கீரைப்பாத்தியை நோக்கி ஓடலாஞர்கள். அப்போது கீரைக்காரி தலைமேல் பெரிய கூடையை வைத்துக்கொண்டு முன்ஞல் வைதேகியை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பின்ஞல்தான் சென்றதால் வைதேகி செல்வது அவர்களுக்குத் தெரியவில்லை யாஞலும் கீரைக்காரியையே வைதேகி என்று தீர்மானித்து விட்டார்கள். இவர்கள் நாகதாளியை வெட்டிவிட்டு வழி செய்துகொண்டு வருவதற்குள் அவர்கள்கொஞ்சதூரம் சென்றுர்கள். வைதேகி திரும்பிப் பார்த்தபோது பின்ஞல் வெகு தூரத்தில் வரும் ஆசாமிகளைக் கண்டுவிட்டாள். அவள்பாடு நடுநடுங்கி விட்டது. "ஐயோ! பாவிகள் பின்ஞல் வந்துவிட்டார்களே. அம்...மா...அதோ அவர்கள்...வந்···து விட்டார்களே. இனி என்ன செய்வேன்'' என்று மெல்ல கூறிஞள். மறுபடி வைதேகி அங்கு மரங்களடர்ந்தவிடத்தில் வருகையில் "அம்மணி! இங்கு மரங்கள் நிறைந்தவிடமாக விருக்கின்றது. இந்த மரத்தின் மீதில் எங்காவது ஒளிந்துகொண்டு நாம் தப்பிஞல் தப்பமுடியுமேயன்றி வேறு வழியில்லை. என்னசெய்வேன்? அதோ அவர்கள் அருகில் வந்துவிட்டார்களே'' என்று மெல்ல பதறப் பதறக் கூறியதைக்கேட்ட கீரைக்காரி திரும்பிப்பார்த்து "அதோ வருகிறுர்களே அவர்களா கள்ளர்கள்! ஐயோ! கஷ்டகாலமாக விருக்கிறதே; என்ன செய்வேன்? உன்னைக் காப்பாற்றுவதாகச் சொல்லியழைத்து வந்தும் ஆபத்து நீங்கவில்லையே. ஐயோ! அதோ வருகின்றுர்களே'' என்று பயந்துகொண்டே விசையாகச் செல்கையில் அங்கு ஓர் கால்வாய் போய்க்கொண்டிருந்தது. அதைக் கண்ட வைதேகி சரேலென்று ஒரு யோசனை தோன்றியவளாய் "அம்மணி! நான் இந்த மரத்தின் மேல் மெல்ல ஏறி உட்கார்ந்து விடுகிறேன். நீங்கள் இந்தக் கால்வாயில் கீரையைக் கழுவி

கட்டிக்கொண்டுபைத்தியம் பிடித்திருக்கிறதுபோல விருங்கள். நான் இருப்பதேதெரியவேண்டாம்.அவர்கள் இங்குவந்து என்னசெய்வார்கள் பார்ப்போம். இப்பொழுது உதயமாகும் நேரமாகிவிட்டது. ஆகையால் அவர்கள் அதிக நேரம் இங்கு தங்கவும் முடியாது! அப்படி அவர்கள் உமக்கு ஏதாவது கெடுதல் செய்ய எண்ணினால் நான் உடனே கீழே இறங்கி உமக்குத் தகுந்த உதவி புரிந்து நானே அவர்கள் கையில் அகப்பட்டுக்கொள்கிறேன். என்னைதான் அவர்கள் தேடிக்கொண்டு வருகிறபடியால் உம்மை ஒன்றும் செய்யமாட்டார்களென்று எண்ணுகின்றேன்.'' என்று சொல்லிக்கொண்டு ஒரே இலைகளாகவே அடர்ந்துகிடந்த மரத்தில் வைதேகி தொத்தித் தொத்தி மெல்ல ஏறி உட்கார்ந்தாள். இதற்குள் கீரைக்காரி கீரையை எல்லாம் போட்டுக்கொண்டு அடுத்த கால்வாயில் அலம்பிக்கொண்டே என்னவோ பேசுவதும் சிரிப்பதுமாக விருந்தாள். உடனே அடுத்த நிமிஷத்தில் அந்தச் சண்டாளர்கள் இங்குவந்து சேர்ந்தார்கள். இங்கு கீரைக்காரி தனக்குத்தானே பேசிக்கொள்வதும், சிரிப்பதும், உடனே பெரியதாக அழுவதுமாக விருப்பதைக்கண்ட அந்த முரடர்கள் "ஏ அம்மா! என்னசெய்கிறாய்? இப்போது உன்னோடு இங்கு பேசியது யார்? அந்த மனுஷ்யாள் எங்கே?'' என்றார்கள். இதைக்கேட்ட கீரைக்காரி ஹீ ஹீ ஹி ஹி கீரையை கூரசேசி திண்டே ஜோரா இருக்கும் பலே···ஆ...ஊ ஏக் ஏக் ஏக் அதான் அதான் அதான் ஆத்தோரத்திலே ரெண்டுமோம் ஹி ஹி'' என்று அர்த்தமில்லாமல் பேசியதைக் கேட்ட மூவரும் நகைத்து "அடே இவள் பைத்தியம்போலவிருக்கிறது. இவள் தானாகவே பேசி யிருக்கிறாள். அதனால்தான் நாம் இங்கு இன்னொருவர் இருக்கிறார்கள் என்று வந்தோம். இந்தப் பைத்தியம் இந்த ராத்திரி வேளையில் தன்னந்தனியாகப் பேசுவதைக் கண்டு நாம் மதி மோசம் போனோமே. இவள் இந்த மரங்களடர்ந்த இருளான சோலையில் இரவில் பயமின்றி போவதைப்பார்த்தால் இவள்தான் அந்தச் சாகசக்கள்ளி என்று எண்ணினோமே. இது பைத்தியம் இது பயமின்றி செல்கின்றது. இன்னும் என்ன பேசுகின்றது பார்ப்போம்'' என்று சொல்லிக்கொண்டே அதனருகில் வந்து நின்றார்கள்.

இதையறிந்த அவள் உள்ளுக்குள் நடுக்கத்தோடு மேலும் பலமாக ஓ, என்று ஒருகூச்சலிட்டு, எழுந்து குதிக்க வாரம்பித்து, தூத்தூ என்று காரி அவர்கள்மேல் உமியவாரம்பித்து விட்டதைக் கண்டமூவரும்,"சரி. இதுஅசல்பைத்தியம் வாநாம்போவோம்'' என்று அங்கு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவ்விடத்தில் வேறு யாரையும் காணாமையால் நேராகவந்த வழியைக்கண்டு திரும்பினார்கள். அவர்கள் தலை மறைகின்றவரையில் இவள் இவ்விதமே பெரிய பெரிய கூச்சலிட்ட வண்ணமிருந்து கடைசியில் அவர்கள் வெகுதூரம் சென்று மறைந்த பின்னர் இவள் எழுந்து "அம்மா! இந்தகண்டமும்

உனக்கு நீங்கிற்று. இறங்கு. இனி நாம் வெகுவிரைவாய் வீடுபோய்ச் சேரவேண்டும். வாம்மா" என்று அன்பொழுக அழைத்தாள். நமது ஆரணங்கு வயிற்றில் கலநெருப்பைக் கட்டியிருந்த மாதிரியான பீதியோடும் கலக்கத்தோடும் உட்கார்ந்திருக்கையில் அவர்கள் எங்கே தன்னை மரத்தின்மேலேறி கண்டு விடுகின்றார்களோ என்ன செய்வார்களோ, மறுபடி நாம் அவர்கள் கையிலகப்பட்டு என்ன இம்சை யனுபவிக்க வேண்டுமோ, "ஆ! சர்வேச்வரா! என்மேல் உன்மனம் இரங்காததேனோ தெரியவில்லையே. ஹா! நான் அவ்வளவு பாபம்செய்து பிறந்த பாபியா? ஐயோ! இந்த ஜென்மத்தில் எனக்குத்தெரிந்து நான் ஒருவித அக்கிரமமும் செய்யவில்லையே. போன ஜென்மத்தின் கர்மவினையோ இவ்விதமாக என்னை வதைசெய்து உயிரையும் நீக்கிவிடாமல் வருத்தி, வாட்டி, சித்திரஹிம்சை செய்கின்றது. ஐயோ! நான் எவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகி அதனால் அவர்கள் கையினாலேயே இறந்து விட்டாலும் எனக்குக் கவலையில்லை. என் பிராணன் போகிற வரையில் என் கற்பைக் காப்பாற்றிவிட்டால் அதொன்றே என் முக்கியமான விருதம். அதைக்காத்தல் ஒன்றே எனக்குச் சாதகம். என்னை எந்தச் சண்டாளன் இச்சை கொண்டுவந்து எவ்விதமான உபத்திரவம்செய்து கொன்றாலும் என் கற்புமாத்திரம் குலையாமலிருந்தால் அதே நான் இச்சென்மம் எடுத்ததற்குப் பலனும் சாதகமுமாகும். இருமுறை உயிரைத்துறக்க உயரத்திலிருந்து விழுந்தும் என் ஆவி நீங்காமலும், தேகத்தில் அதிகமாக காயம் படாமலும் என்னைக்காத்துவந்த கடவுள் என்கற்பைக்காத்துதவி விட்டால் போதுமானது. இந்தப் பாதகன் இதோடு என்னைவிட்டுச் சென்றுவிட்டால், இனிமெல்ல இந்தம்மையோடு சென்று எவ்விதம் பிறகு நடக்கவேண்டுமோ அப்படி பார்த்துக்கொள்ளலாம். பாவி இந்த மரத்தைப் பார்க்காமல் போய்விட்டால், என்னுயிர் இச்சமயம் நின்றமாதிரிதான்" என்று பலவாறாகச் சிந்தித்திருந்த சமயம் அவர்கள் அங்குவந்து கீரைக்காரியின் சாகசத்தைக்கண்டு நிஜமென்றெண்ணி போய்விட்டபிறகு, கீரைக்காரி "இறங்கம்மா" என்று சொல்லியதும்மெல்ல இறங்கி பயத்தோடு நாற்புறமும் திரும்பித்திரும்பி பார்த்தவண்ணம், அவள் அழைத்துச் சென்றவழியே சென்றாள். நமது வைதேகியினுடைய அப்போதிய மனநிலைமையில் ஓர் பெரிய காற்று அடித்து அதனால் ஓசையுண்டானாலும்கூட, அந்த ஓசையைக்கேட்டு திடுக்கிட்டு பின்புறம் மறுபடியவர்கள் வந்துவிட்டார்களோ என்று பயந்து, அந்த பயத்தினால், அவளை யறியாமல் திடும்திடும் என்று தூக்கிப்போடுகின்றது. அப்போது அவள் அங்கமுற்றும் வெலவெலவென்று உதரல் எடுத்துக் கொள்கின்றது. அவளது கால்விரல் முதல் சிரம்வரையில் குபீரென்று வியர்வை வெள்ளமாகப் பொங்கிவழிந்து ஆடையைமுற்றும் நனைத்ததேயன்றி, அவளது மனமாவது தேகமாவது, அவ்

வியர்வைத்தண்ணீரினால் குளிரவில்லை. அது அவளுக்கு அக்னி ஜ்வாலையாக விருக்கிறது. கண்கள் பயத்தினால் மங்கிப்போயின. அவள் மனமானது மாயமாய் மான்போல பறக்கின்றதேயன்றி, அவளது கால்கள் அடியோடு சீவனற்று, கேவலம் துணிபோலத் துவண்டுவிட்டன. மனதில் சொல்லற்கரியாத கிலியும், பயமும் கப்பியவளாய், மெல்ல ஆடிஆடி அசைந்து, அபலையான வைதேகி நடந்து சென்றாள்.

அவளை யன்புடன் வழிகாட்டி தன்கையால் பிடித்து அழைத்துக்கொண்டு சென்ற கீரைக்கார காமாக்ஷி, அவளுக்கு தேறுதல் மொழிகளைக் கூறியவண்ணம், "அம்மா! நீ சற்றும் இனி பயப்படாதே. இதோ நம்முடைய வீடு சமீபத்தில் வந்துவிட்டது. இனி அந்தக் கள்ளர் வருவார்களென்று பயப்படாதே. நான் உன்னை என் வீட்டில் வைத்து என் மகளைப்போலக் காப்பாற்றி நான் குடிக்கும் கூழையும் கஞ்சியையும் உனக்கும் வார்த்து வருகிறேன் பயப்படாதே. ஏன் நான் சொல்வதை கவனிக்கவே இல்லையே. உன் உடம்பு ஏனம்மா இவ்விதம் நடுங்குகின்றது. ஐயோ! இன்னும் உனக்கு அந்தப் பாவிகளின் பயம் விடவில்லைபோல விருக்கின்றது. நான் சொல்வதைக் கேளம்மா. அதோ தெரிகின்றதே அதுதான் நம்முடைய வீடு. இனியும் ஏன் பயப்படுகின்றாய். உன்னை வீட்டிற்கு அழைத்துச்சென்று வயிற்றுக்கு ஆகாரம் கொடுக்கிறேன். ஈரத்துணியை மாற்றிவிட்டு என் புடவையில் ஒன்றைக் கட்டிக்கொள். நீ நிம்மதியாக படுத்துக்கொண்டு நன்றாகத் தூங்கி தெளிந்தபோது எழுந்திரு. பிறகு உன் வரலாற்றை நான் தெரிந்துகொள்கிறேன். கவலைப்படாதே. என்னை நீ உன் சொந்த மனுஷி மாதிரியாக எண்ணிக்கொள்ளம்மா. இனி நான் வேறு; நீ வேறல்ல. என் வார்த்தையை நம்பு" என்று வெகு உருக்கமாகக் கூறிக்கொண்டே வந்தாள். இதற்குள் தனது வீட்டையடைந்தாள். வீட்டுக்கதவை வெளிப்புறம் சாத்திப் பூட்டிக்கொண்டு கீரை பறிக்கச் சென்றிருந்தாளாகையால், அவள் வந்தவுடன் வீதிக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று மறுபடி கதவை தாளிட்டுக்கொண்டாள்.

அப்போதும் நமது வைதேகியின் பயம் குறைந்தபாடில்லை. அவள் கிலிக்கு அடிமையாகிவிட்டாளாகையால், அவளை அதுவிட்டு இலேசில் செல்லமாட்டேன் என்கின்றது. அவள் ஒரு வீட்டையடைந்தும், அவள் மருள மருள விழித்து நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண்டே இருந்தாள். உடனே கீரைக்காரி வைதேகியைக் கண்டு "அம்மணி! இதோ இந்தப் புடவையைக் கட்டிக்கொள்ளம்மா. இது புதிதாக நேற்றுதான் என் கணவர் எடுத்துக்கொடுத்தார். இதை இன்னும் பிரித்துக் கட்டிக்கொள்ளவே இல்லை. இதை முதன் முதல் நீதான் கட்டிக்கொள்ளம்மா. ஈரத்துணியை முதலில் விலக்கு" என்று வெகு பக்ஷத்தோடு கூறினாள். இதைக்கேட்ட வைதேகி முற்றி

லும் சோர்ந்திருந்தமையாலும். உள்ளூர பயத்திற்கு அடிமையாகி விட்டபடியாலும் அவள் நிலையே தடுமாறி இருந்தது. அவள் பயமில்லாமலிருக்கும்படி கீரைக்காரி எவ்வளவு தூரம் சொல்லி யும் அவள் மனமென்னவோ சற்றும் சமாதான மடையவில்லை. மேலும் அன்று மாலைமுதல் அவள் பட்டுள்ள பாதையாலும், உயரத்திலிருந்து விழுந்ததாலும், பிள்ளையார் கோயிலிருந்து குதித் ததாலும் அவள் தேகத்தில் வலிமிகுதியாய் உண்டாயிருந்தும், அப் போது தான் எவ்விதமாகிலும் தப்பித்துக்கொண்டு தனது கற்பைக் காப்பாற்றிக்கொண்டால் போதும், எந்த சமயம் வந்துவிடுவானோ என்ற பயமே அவளைக் கப்பிக்கொண்டிருந்ததனால் அப்போது தெரிய வில்லை. இப்பொழுதோ அந்த வலி அவளை முற்றிலும் சோர்வடையும் படியாய் செய்துவிட்டது. அவள் கீரைக்காரியின் உதவியைக்கொண்டு மெல்ல தப்பித்துக்கொண்டு அவள் வீடு வந்து சேர்ந்ததும் சற்று அவளது உயிர் நிலையில்வந்து சேர்ந்ததென்று எண்ணும்படியாக விருந்தாலும் அவளுக்கு அடிக்கடி திடும்திடும் என்று தேகம் நடுங்கிக் கொண்டே இருக்கின்றது. அவள் மனதில் கொஞ்சம் தைரியம் உண் டாயினும் அவள் அங்கமெல்லாம் தாமாகவே சோர்ந்து நடுங்கும் நிலைமை யடைந்தன. கண்களோ சொருகி சொருகி மயக்க மாக மூடுகின்றன. சித்தமோ முற்றிலும் கலங்கிவிட்டதனால் கேட் பதற்கு பதிலே சொல்லமுடியாமல் விழிக்கின்றாள். இதை எல்லாம் கண்டகீரைக்காரி "ஐயோ! இவளுடையநிலைமையைக்கண்டால் மிகவும் பரிதாபகரமாயிருக்கின்றதே, இவள் அக்கொடிய கள்ளர்கையில் என்ன கொடுமைகளை யனுபவித்திருக்கிறாளோ தெரியவில்லை. அதே பயத் தினால் இவள் குன்றிவிட்டாள். இச்சமயம் வயிற்றிற்கு கொஞ்சம் ஆகா ரம் கொடுத்தால் தெளியுமோ பார்ப்போம்" என்று எண்ணிய வண்ணம் வெகு வாஞ்சையோடு பேசத் தொடங்கி, "என்னம்மணி! இனிமேல் உனக்கு பயமென்பதே வேண்டாமம்மா! இந்த சேலையை கட்டிக் கொள்" என்று அவள் கையில் வைத்திருந்த சேலையைப் பிரித்துக் கொடுத்தாள். வைதேகியோ தன் நினைவை முற்றும் துறக்கும் சமயமாகிவிட்டது. அவள் கிணற்றிற்குள் பேசுவதுபோல பேசத் தொடங்கி "அம்மா எனக்கு என்னையறியாமல்!மயக்கம் தலையைசுழட்டிக் கண்ணை இழுக்கின்றது. என்னிலை எனக்குத் தெரியவில்லை. என்னுயிர் தத்தளிக்கின்றது. நான் படுத்துக்கொள்ள ஒரு இடம் காட்டுங்கள் முதலில் நான் படுத்துக்கொண்டால்தான் என் தேகம் சற்று வழிக்கு வரும். இப்போது அதைத் தவிர வேறு எதிலும் மனம் செல்ல வில்லை யாகையால் நான் எழுந்தபிறகு இந்தச் சேலையைக் கட்டிக் கொள்கிறேன். எனக்கு இடம்காட்டுங்கள்" என்று மயங்கியபடி கூறிய தைக் கேட்ட காமாக்ஷி முற்றிலும் பயந்துபோய் அன்பொ ழுக வைதேகியைக் கட்டியணைத்து "அம்மா! உன்னிலைமையைக் கண்டு என்னால் சகிக்க முடியவில்லை. உன்னிஷ்டபடியே இதோ

இடம் காட்டுகின்றேன். நீ முதலில் ஈரத்துணியை விலக்கிவிட்டு இந்த உடையை தரித்துக்கொண்டால் தான் நல்லது. இதோ நானே பிரித்தும் வைத்திருக்கிறேன். நீ யப்படியே சுற்றிக்கொண்டு சிறிதளவு வயிற்றிற்கு ஏதாவது ஆகாரம் பார்த்துக்கொண்டு படுத்துக் கொள்ளம்மா’’ என்றுகூறிய வண்ணம் வைதேகியினுடைய முந்தாணையை விலக்கினாள். இதற்குள் வைதேகிக்கு முற்றிலும் மயக்கம் வந்துவிட்டது. அவளப்படியே திடீரென்று விழுந்துவிட்டாள். இதைக்கண்ட கீரைக்காரி மிகவும்கலங்கிபயந்து “ஐயோ! மெல்லிய தேகமாகையால் தாங்காமல் மயக்கம் வந்துவிட்டது. இப்போது என்னசெய்வது? ஈரத்துணியுடன் விழுந்துவிட்டாளே. நாம் எப்படியதை விலக்கி இதைக் கட்டுவது?’’ என்று எண்ணிய வண்ணவாக மெல்ல வைதேகியைத் தூக்கினாள். அவள் தேகம் சிறிய குழந்தையைப் போல விருந்ததால் சற்றும் கஷ்டமின்றி அவளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு ஈரத்துணியை விலக்கிவிட்டு தன் கையிலிருந்த சேலையை அவளுக்கு மெல்ல சுற்றிவிட்டாள். பிறகு அவளை குழந்தையைப் போல எடுத்துக்கொண்டு போய் அங்குள்ள ஓர் சிறிய அறையில் போடப்பட்டிருந்த நார்க் கட்டிலின்மீது அவளை படுக்க வைத்துவிட்டு, தான் சென்று குழந்தைக்காக வைத்திருந்த பாலை அன்றுக் குழந்தைக்குப் போட்டவில்லையாகையால் அது நன்றாகவிருக்கின்றதா என்று பார்த்து அதைக் கொண்டுவந்து வைதேகியின் வாயில் மெல்ல வார்த்துப் பார்த்தாள். அதில் சிறிதளவுகூட உள்ளே செல்லாமல் வழிந்து விட்டதாகையால் காமாக்ஷி “ஐயோ! பால் வழிந்துவிட்டதே என்ன செய்வேன்? பட்டினியாகக் கிடந்தால் களை வந்துவிடப் போகின்றதே. அப்புறம் முதலே மயக்கம் தெளியாதே. என்செய்வேன்?’’ என்று சிந்தித்துக்கொண்டே சற்று நேரம் அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். வைதேகி என்னவோ கண்களைத் திறக்கவில்லை. கலியுகத்தைப் பார்க்கவில்லை. ஓரே மயக்கமாக விழுந்து கோரமான படுக்கையாகப்படுத்திருந்தாள். கீரைக்காரி சற்று நேரம் கழித்து “ஆ! நாம் இவ்விதமே உட்கார்ந்திருந்தால் எப்படி? கீரையையெல்லாம் கட்டு கட்டிக்கொண்டு விற்கச் சென்றால் தானே இன்றைய ஜீவனம் நடக்கும். நம்தலைவிதி ஆயிசு பரியந்தமும் இவ்விதமே கீரை விற்றுக் காலத்தைப்போக்க எழுதிவிட்டான்.” என்று எண்ணியவாறு வெளியில்வந்து கீரையை எல்லாம் கட்டு கட்டிக்கொண்டு கூடையில் வைத்துவிட்டு, அதற்குள் குழந்தைக்கு பால்கொடுத்து விட்டுவிட்டு நித்திரை செய்துகொண்டிருந்த தனதுமூத்தப்பெண்ணை எழுப்பி, அவளிடத்தில் தான் கீரைக்குச்சென்றது முதல் இதுவரையில் நடந்தசேதியை உரைத்து வைதேகியைக்காட்டி “அம்மா! இதோ படுத்திருக்கிறாள். நீ இவளருகிலேயே உட்கார்ந்து ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். வீட்டு வேலையை உன் தங்கையைச்செய்ய சொல்லிவிட்டு, நீ இந்த அபலையைவிட்டு நகராமல் பார்த்துக்கொண்டிரு. இவ

ளுக்குத் தெளிந்து எழுந்தால் உடனே வயிற்றிற்கு ஆகாரம் கொடு. பக்கத்து வீட்டுக்காரி நமக்குக் கொடுக்கும் குழந்தையின் பாலை இவளுக்கு வார்த்துவிடு. குழந்தைக்கு என்பாலே போதும். நான் சீக்கிரம்வந்து விடுகின்றேன். உங்கப்பன் இங்குவராமல் பார்த்துக்கொள். "நீ ஏன் வேலைசெய்யவில்லை அந்த அறையிலிருக்கிறாய்?" என்று கேட்டால், திட்டு என்று சொல்லிவிடு. நான் சொல்லியதெல்லாம் நினைவிருக்கின்றதா. மறந்துவிடாதே, ஜாக்கிரதை. எனக்கு நேரமாகிவிட்டது. பொழுதும் நன்றாய் விடியும் தருணமாகிவிட்டது. நான் போய் என் தலைவிதியைத் தொலைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டு அவள் சென்றுவிட்டாள்.

அங்கு விடப்பட்ட கீரைக்காரியின் பெண்ணான கௌரி என்பவள் வைதேகியின் பக்கத்தில் உட்கார்ந்து அவளழகைக் கண்டு ப்ரமித்து, "ஹா! இத்தகைய அழகுவாய்ந்த பெண்மணிகள் கூட இப்பூவுலகிலிருக்கின்றார்களா? ஆஹா! இவள் படுத்திருப்பதைப் பார்த்தால் சாக்ஷாத் லக்ஷ்மியோ, அல்லது பார்வதியோ என்றுப்ரமிக்கும் வண்ணமிருக்கிறாளே! இவளுக்கா ஆபத்து நேர்ந்து அனாதையாகி அல்லல் பட்டாள்! அடடா! இவளது முகத்தில் விழித்தாலும் செய்த பாவங்கள் தொலையுமே. இப்பேர்ப்பட்ட மாதரசிக்கு இடுக்கண் உண்டாக்க எந்த தடியன் முன் வந்தானோ தெரியவில்லையே! இவள் எப்போது மயக்கம் தெளிந்து எழுந்து பேசுவாள்?" என்று எண்ணமிட்டவண்ணமே சென்று அவள் கூலக்கடன்களை முடித்துக்கொண்டு நெற்றியில் குங்கும மிட்டுக்கொண்டு மறுபடி வைதேகி யருகில் வந்து உட்கார்ந்தாள், இதற்குள் பொழுதும் புலர்ந்தது. நித்திரைசெய்து கொண்டிருந்த எல்லோரும் எழுந்துவிட்டார்கள். குழந்தை குட்டிகளெல்லாம் எழுந்து காச்சுமூச்சென்று கத்த வாரம்பித்துவிட்டன. கௌரி தனது தங்கையை யழைத்து அவளிடம் ரகஸியமாய் சேதியைத் தெரிவித்து "நான் இங்கு காவலிருக்கவேண்டும். நீ சற்று வீட்டு வேலைகளைச் செய்துவிடு. அதற்குள் அம்மாள் வந்துவிடுவாள்" என்றாள். அதைக்கேட்ட அந்த மடந்தை உள்ளே வந்து வைதேகியைக்கண்டு ஆச்சரியமடைந்து "ஆஹா என்ன அழகு! என்ன அழகு! நமது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இவளை நம்முடைய அக்காவாகபாவித்து நம் வீட்டிலேயே வைத்துக்கொள்வோம்" என்று ஆசையோடு கூறியவண்ணம் உள்ளே சென்றுவிட்டாள். வீட்டிலுள்ள மற்றவர்கள் தத்தம் அலுவல்மீது சென்று விட்டார்கள்.

காலை மணி சுமார் 9, 10 இருக்கும். அப்போதும் வைதேகிக்குத் தெளியவில்லை. கீரைவிற்கச் சென்றிருந்த கீரைக்காரியும் வந்துவிட்டாள். இன்னும் வைதேகிக்குத் தெளியவில்லை என்பதைக் கேட்க அவளுக்கு குடல் நடுங்க வாரம்பித்துவிட்டது. "ஐயோ!

இன்னுமா தெளியவில்லை. இன்னேரம் தெளிந்து நன்ருய்ப் பேசிக் கொண்டிருப்பாள் என்று வெகு சந்தோஷமாக எண்ணி பறக்கப் பறக்கக் கீரையை விற்றுக்கொண்டு ஓடிவந்தேனே. என்னதிர்ஷ்டமா இன்னும் தெளியவில்லை? ஆ! என்ன காரணத்தினுல் இவ்விதம் வந்துவிட்டது. என்ன செய்வேன்? நாமோ பிக்ஷைக்காரராகிவிட்டோம். நாம் எப்படி வைத்தியனையழைத்து இவளுக்கு சிகிச்சை செய்வது? ஐயோ! ரதிதேவிபோலப் படுத்திருக்கின்ருளே'' என்று மெல்ல அவளைத் தட்டி எழுப்ப அவளைத் தொட்டாள். அடடா! வைதேகியின் தேகம் நெருப்பாகக் காய்கின்றதைக் கண்ட காமாக்ஷி திடுக்கிட்டு "ஐயோ! கௌரி! இவளுக்கு நல்ல ஜுரம் வந்துவிட்டது. உடம்பு ஒரே நெருப்பு ஜ்வாலையாய்க் கொதிக்கின்றது. மார்பு தடதடவென்று அடிக்கின்றது! என்ன செய்யலாம்? இதற்கு ஏதாவது மருந்து கொடுத்தால் தான் தெளியும்போலவிருக்கின்றது. நமது கையிலோ காசு இல்லை. எப்படி வைத்தியனை அழைப்பது?'' என்று மிகவும் கண்ணீர்விட்டுக் கலங்குகின்ருள். கௌரி என்ன செய்வாள் பாவம்! இவர்கள் வைதேகியை முன்பின் கண்டிராவிட்டால் கூட, அவளுடைய முக வசிகரமும் ராசியும் அவளைக் காண்போரனைவரும் தாமாகவே அவளிடத்தில் பூர்ண விசுவாசமுள்ளவர்களாகச் செய்கின்றது. மேலும் காமாக்ஷி இயற்கையிலேயே தயாளகுணமும், பரோபகாரமும், பிறநல நோக்கமும், பச்சாத்தாபமும், கருணையும் நிறைந்தவளாகையால் அவளுக்கு வைதேகியை அனுதையாய்க் கண்டதுமே அவளிடத்தில் இவளுக்கு தானகவே ப்ரீதியும், கருணையும் தோன்றி எவ்விதமாகிலும், நாம் காப்பாற்றிவிடவேண்டும் என்ற தீரம் அவளது மனத்தில் விழுந்துவிட்டபடியால் அவள் வெகு பக்ஷத்தோடு அவளையழைத்துக்கொண்டு வந்து படுக்கவைத்தாள். இன்னும் மயக்கம் தெளியாமல் அதன்மேல் ஜுரமும் காய்வதைக் கண்டு அவளால் சகிக்க முடியவில்லை. அவள் மனமானது கலங்கிப் பொங்க ஆரம்பித்து விட்டது. இதைக்கண்ட கௌரி, தனது அன்னையை நோக்கி "அம்மா! இவ்விதம் நாம் கலங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தால் அக்கம்மைக்கு தெளிகின்ற வழிதான் எப்படி? சாக்ஷாத் ஜெகன்மோகினித் தாயைப்போல படுத்திருக்கும் இவளை நாம் முதலில் வைத்தியனிடம் காட்டி மருந்து கொடுத்துத் தேற்றி இவளிருப்பிடத்தைக் கேட்டறிந்துகொண்டு இவளை யங்கு கொண்டு விட்டுவிடவேண்டும். நீ முன்னல் சென்று நமது தெருக்கோடியிலிருக்கும் வீராசாமியை யழைத்துக்கொண்டுவா. அவன் வந்து பார்த்து மருந்து கொடுக்கட்டும். இன்று கீரை விற்று வந்த பணத்தை யவனுக்குக் கொடுத்துவிடுவோம். உள்ளே இருக்கும் பழைய அமுதை பசங்களுக்கு போட்டுவிடுவோம். அப்பா வந்தால் நீ எழுந்திராமல் படுத்திரு. நான் அதற்கு தந்திரமாக உன்னை மாடு முட்டித் தள்ளிவிட்டதென்றும், விழுந்தவிடத்தில் பெரிய

சாக்கடை இருந்ததென்றும் அதில் கீரை யெல்லாம் கூடை யோடு விழுந்துவிட்டதென்றும், பிறகு உன்னை யாரோ காப்பாற்றி இங்கு கொண்டுவந்துவிட்டார்களென்றும், நான் சொல்லி விடுகிறேன். அப்புறம் நமக்கு அன்னத்திற்கு அவர் ஏதாவது கொடுத்தால் இன்று சாப்பிடுவோம். இல்லை யென்றால் அன்னம், சுன்னம்; தண்ணீர், கண்ணீராகவே இருக்கட்டும். நமக்குப் பாதகமில்லை. அம்மா! நீ எழுந்திரு" என்று வெகு உருக்கமாகவும் பணிவாகவும் கூறியதைக்கேட்ட காமாக்ஷி மட்டற்ற மனமகிழ்ச்சி யடைந்து தன் புதல்வியின் புத்தி விசாலத்தையும், தயாளகுணத்தையும் கண்டு பூரித்துப் புளகாங்கித மடைந்து "அம்மா! நீசொல்லியது வெகு உசிதமாக விருக்கின்றது. உலகத்தில் மானிட ஜென்மமெடுத்தவர்களுக்கு தயாள குணமே முதன் முதல் அதியவசியமாய் வேண்டியது. அது உன்னிடத்தில் நிரம்பியிருப்பதைக்காண எனக்குப் பொங்குகின்றது; உம். பழைய குல வாசனை விட்டுவிடுமா. எல்லாம் கால வித்தியாசந்தான்" என்று கூறிய வண்ணம், தான் எழுந்து நேராக வைத்தியன் வீட்டை நோக்கி நடந்தாள். உடனே கால் நாழிகைக்கெல்லாம் காமாக்ஷி ஒரு வைதியனை யழைத்துக்கொண்டு வந்தாள். அவனைக் கண்ட கௌரி சந்தோஷத்துடன் தான் விலகி தூர சென்றுவிட்டாள். காமாக்ஷியுடன் கூட வந்த வைத்தியன் வைதேகி படுத்திருந்த அழகைக்கண்டு அப்படியே பிரமைகொண்டு "ஆ! இவள் உண்மையில் இம்மண்ணுலகத்தில் பிறந்த பெண்ணு அல்லது விண்ணுலகத்திலுள்ள மாதோ தெரியவில்லையே. அடடா! இவளுடைய அழகைக்கண்டு தான் இவளுக்கு யாரோ என்னவோ செய்துவிட்டார்கள். ஆஹா! நாம் இந்த குப்பைக்காட்டிலிருந்தும் என்ன தவம் செய்தோமோ இன்றுஇத்தகைய உத்தமியின் முகத்தில் விழிக்கக் கொடுத்து வைத்தோம்! ஈசனருளால் நன்றாக குணமடைந்து தீர்க்க ஆயுசுடனும், தீர்க்க சுமங்கலியாகவுமிருக்க வேண்டும்." என்று மனதிற்குள் எண்ணியபடியே வைதேகியின் கையைப் பிடித்துப் பார்த்தான். அப்போதே அவனுடைய முகம் சடக்கென்று மாறுபட்டது. அதைக்கண்ட காமாக்ஷியும் கலங்கினாள். உடனே அவள் வைத்தியரைக் கண்டு "என்ன ஐயா! உமது முகம் மாறுகின்றதே. என்ன சேதி! எப்படி இருக்கின்றது உயிரிருக்கின்றதா இல்லையா? உம்முடைய முகம் மாறியதைப் பார்த்தால் எனக்கு பயமாக விருக்கின்றதே. நாடி முதலியன சரியாகவிருக்கின்றனவா என்ன பேசாது இருக்கின்றீரே?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள். அதைக்கேட்ட வைத்தியன் மிகவும் கலங்கியவாறு "அம்மணி! நீங்கள் பயப்படுவதுபோல எனக்கும் சொல்வதற்குப் பயமாகவே இருக்கின்றது. என்ன செய்வேன்? இந்த மடந்தைக்கு என்னவோ உஷ்ண சீதளத்தின் மேல் ஜன்னி கண்டிருக்கின்றது. நாடி எல்லாம் விழுந்துவிட்டன. இப்போது இதைப்பற்றி யொன்றும் சொல்லமுடியாது. நாளை மத்தியானம் பன்னிரண்டு மணி தாண்டி

விட்டால் பிழைத்துக் கொள்வாள். அதுவரையில் சொல்ல முடியாது. இதோ இந்த மருந்தை கஷாயத்தில் உள்ளே செலுத்துங்கள். அது இறங்கினாலும் இறங்கும்; வழிந்து விட்டாலும் வழிந்துவிடும். எதற்கும் மெல்ல கஷ்டப்பட்டு செலுத்திப் பாருங்கள். பிறகு ஈசன்விட்ட வழியாகின்றது. இப்போது ஒன்றும் நிலையாய் நான் சொல்வதற்கே இல்லை. இப்போதிருக்கும் நிலைமையைக் கண்டால் பயமாக விருக்கின்றது. இப்படிப்பட்டாலும் படும். அப்படிப்பட்டாலும் படும். ஆகையால் ஈச்வரனை நம்பி இருந்தால் யாதொரு பயமுமில்லை. மேலும் இந்த மாதின் நிலைமையைப்பார்த்தால் பயந்திருப்பது போலவும் தோன்றுகின்றது. நான் மத்தியானம் 12மணிக்கு வேப்பிலை யடிக்கின்றேன். அப்புறம் பார்ப்போம். இதோ இந்தக் கல்கத்தைக் கண்ணில் போடுங்கள். கண்ணில் கண்ணீர் வருகின்றதாபார்ப்போம்'' என்று கூறி ஒரு மையை எடுத்துக்கொடுத்தான். காமாக்ஷியம்மாள் அதைவாங்கி வைதேகியின் கண்ணை நீக்கி அதில் போட்டாள். வைதேகி அந்த மையிட்டதனால் சிறிதுகூட அசையவுமில்லை. கண்ணிலும் தண்ணீர் வரவில்லை. அவள் ஒரே நிலையாய் சவம்போலப்படுத்திருந்தாள். இதைக்கண்ட வைத்தியன் "அம்மா! நான் போய் விட்டு மத்தியானம் வருகின்றேன்" என்று எழுந்துவிட்டான். இதற்குள் காமாக்ஷி தன் மடியிலிருந்த பணத்தை எடுத்து ஒரு ரூபாய் அவனிடம் கொடுத்து "ஐயா! நானோ ஏழை என்பதைத் தாங்களறிவீர்கள். இந்த பெண்ணோ கேவலம் அனாதை. ஆகையால் தாங்கள் தயவுசெய்து மனப்பூர்வமாய் இதைப் பெற்றுக்கொண்டு போகவேண்டுமாகக் கோருகிறேன்'' என்று வெகு வணக்கத்தோடு கூறினாள்.

அதைக்கேட்ட வைத்தியன் "அம்மா! தாங்கள் ஏழை என்பதையும், இந்த மாது அனாதை என்பதையும் நானறியவில்லையா! தாங்கள் பரோபகாரம் செய்து வருவதைப் பார்த்தும் நான் பணம் வாங்குவேனா? இந்தம்மா அனாதையாக விருப்பதை எண்ணி தாங்கள் ஆதரிப்பது உங்கள் பெருந்தன்மையைக்காட்டுகின்றது. நான் இவ்வமயம் உங்கள் மூலமாகவே வந்து மருந்து கொடுத்து பணம் வாங்கிக்கொள்வது தர்மமாகுமா? எனக்குப்பணம்வேண்டாம். நான் இந்தப்பெண்மணிக்கு மருந்து கொடுப்பதனால் நஷ்டப்பட்டு விடமாட்டேன். இந்த மடந்தை யாரோ என்னவோ ஒன்றும் தெரியவில்லை. ஈசனருளால் எப்படியானாலும் குணமடைந்து அவள் வீடு சென்றால் போதும். எனக்கு பணம் வேண்டாம். உங்கள் தயவினால் இந்த அபலை பிழைக்கட்டும் பாவம். நான்சென்று 12மணிக்கு வருகிறேன். நீங்கள் ஜாக்ரதையாக பார்த்துக்கொள்ளுங்கள்''என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார். பிறகு கௌரி அவ்விடம்வந்து "அம்மா! என்ன செய்வது வைத்தியர் இவ்விதம் சொல்லிவிட்டாரே! இன்னும் யாரையழைத்துக் காட்டுவது?'' என்று கண்ணீர்விட்டு "அம்மா! இந்தம்மாளுடைய முகராசி

யைப் பார். வைத்தியரும் பணம் வேண்டாமென்று சொல்லிப் போய்விட்டார். இந்த சமயமில்லாவிட்டாலும் அடுத்த சமயம் கட்டாயம் கொடுத்துவிடுவோம். எப்படியாகிலும் குணமடைந்துவிட்டால் போதும்.'' என்றாள். அதைக்கேட்ட காமாக்ஷியம்மாள் நிரம்பவும் விசனப்பட்டவண்ணம், அம்மா! உன் தந்தை வரும் நேரமாகிவிட்டது. நீ இந்தப் பணத்தை உன் தங்கையிடம் கொடுத்து வீட்டுக்கு சமையலுக்குவேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வரச் சொல்லி நீங்களிருவரும் சமையல் வேலையைச்செய்யுங்கள். நான் இங்கு இவள் பக்கத்திலே உட்கார்ந்து பார்த்துக் கொள்ளுகிறேன். உங்க அப்பா வந்தால் சாப்பாட்டைப் போட்டு விட்டு அனுப்பிவிடு. இங்கு இவளிருப்பதே ஜாடை தெரியவேண்டாம். எழுந்திரம்மா'' என்று சொல்லியவளை யனுப்பிவிட்டுத்தான் வைதேகியைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள். மணியும் ஏறிக்கொண்டே இருக்கின்றது. வைதேகிக்கோ கொஞ்சங்கூட குணமென்பதே தெரியவில்லை. காமாக்ஷி எப்போதுகண்ணைத் திறப்பாள், எப்போது பேசுவாள் என்று ஆவலாக எதிர்பார்த்திருந்தாள். அவளுடைய ஆவல் தணியும் வழியே பிறக்கவில்லை. மணியும் 12-அடித்துவிட்டது. வைத்தியன் வந்து வேப்பிலையடித்துச் சென்றான். அன்று முற்றும் காமாக்ஷியம்மாள் அன்னாகாரம் கொள்ளவேயில்லை. கௌரி ஏதோ சிறிதளவு ஆகாரம் செய்துகொண்டாள்; பொழுதும் போய்க்கொண்டே யிருந்தது. வைதேகி என்னவோ கண்ணையே திறக்க வில்லை. அன்று போட்டின மருந்துகள் கொஞ்சங்கூட உள்ளே செல்லவேயில்லை. நமது அபலையான வைதேகி தன்னிறை யழிந்து உலகையே மறந்து கடுமையான படுக்கையாகப் படுத்திருந்தாள். அன்று பகலும் சென்று இரவும் வந்துவிட்டது. இரவெல்லாம் ஓரேமாதிரியாகவே யிருந்தாள். காமாக்ஷியம்மாள் கண்ணை மூடாமல் இவளது பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். அன்று கீரை பறிக்கவும் செல்லவில்லை. காலையில் கௌரி சொல்லிய தந்திரத்தை நாளைக்கு உபயோகப்படுத்திவிடுவது தான் சரி என்று தீர்மானித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

* * * * * *

பொழுதும் விடிந்துவிட்டது. அப்போதும் வைதேகி கண்ணைத் திறக்கவில்லை. ''ஹா! என்ன செய்வேன்! நேற்று விடியற்காலை முதல் ஒரே நிலையாக இவ்விதம் கடுமையாகப் படுத்து விட்டாளே. நாம் ஒருவருக்கு உபகாரம் செய்ய எண்ணியது இவ்விதமாகவா உப்பு காரம் அற்று சப்பென்று போகவேண்டும்! ஐயோ! இவளுடைய பால் வழிந்த முகத்தினழகைக் கண்டால் இவளை எடுத்துச் செல்லவரும் எமனிடம் சாவித்ரிபோல வாதாடி அழைத்துக் கொண்டு வந்துவிடலாம் போலவிருக்கின்றதே. முன்பின்னறியாத எனக்கு இவளிடத்தில் ஏற்பட்டுள்ள வாஞ்சையைப்போலவே எம

னும் இவளிடம் வாஞ்சைகொண்டு எடுத்துக்கொண்டு போய்விடு வானோ? ஐயோ ! பச்சைக்கிளி போன்ற இந்த ரத்தினத்தைப் பெற்ற புண்யவதி யாரோ இந்த கஷ்டத்தை தற்சமயம் அனுபவிக் காமல், படுவதற்கு என்னை நியமித்துவிட்டார்களோ. ஆஹா! என்ன புண்ணியம் செய்து இந்த உத்தமியைப் பெற்றூர்களோ! பெற்றவர்களைவிடப் பத்துமடங்கு அதிகரித்த பாக்கியத்தைச் செய்த எந்த மஹானுபாவன் இவளை மனையாட்டியாக அடைந்தானோ. அடடா! அவர்கள் செய்த புண்ணியத்தைவிட அதிகமான புண் ணியம் நாம் செய்ததனுல்தான் இந்த மாதரசி இங்கு இந்த வீட் டில் காலடிவைக்க நேர்ந்தது. அந்த அதிர்ஷ்டம் குன்றுமலிருக்க இவள் உயிர் பிழைத்து எழுந்தால்தானே சந்தோஷமாக விருக்கும். ஏ ஜகதீசா! எவ்விதமாகிலும் இந்த வனிதாரத்தினத்தின் உயிர் பிச்சையை அளித்தால் போதுமே. எல்லாவற்றிலும் கொடுத்து வைக்காத பாவியாகிய நான் உதவிபுரிவதாக அழைத்து வந்ததனுல் தான் இவள் உயிருக்கும் ஹானி வந்துவிட்டதோ. ஏ பரம் பொருளே! இவள் யாரோ முகமறியாதவள்; நான் யாரோ அன்னி யள். இந்தப் பெண்ணினிடத்தில் ஒரு விநாடிக்குள் மனமுற்றும் பதிந்துவிட்டதுதான் ஆச்சரியமாக விருக்கிறது. இவளிடத்தில் அத் யந்த ப்ரேமையை எனக்கு ஊட்டிய நீதான் இவளுடைய உயிரைக் காக்கவேண்டும்'' என்று பலவாருய் எண்ணமிட்டவண்ணம் உட்கார்ந் திருந்தாள். அன்று பகல் பொழுதெல்லாம் தாண்டிவிட்டது. மாலை 5-மணி சுமாருக்கு வைதேகியின் தேகம் சற்று அசையவாரம்பித்த தைக்கண்ட காமாக்ஷி கட்டிலடங்காக் களிப்பையடைந்தாளென்றாலும் அவள் முற்றிலும் குணமடைந்து பேசும் காலத்தை எதிர்பார்த் திருந்தாள். மறுபடி சற்று நேரத்திற்குப்பிறகு கண்களை மெல்ல திறந்து பார்த்தாள். அவள் கண்கள் செவேலென்று கோவைப்பழம் போல விருக்கின்றன. கண்ணில் நீர் தாரை தாரையாக அருவி போல வந்துகொண்டே இருக்கின்றது. அவள் வாயைத் திறந்து ஏதோ பேச ஆரம்பிக்கின்றுள். அவளையறியாமல் துக்கம் தொண்டை யை அடைத்துக்கொண்டு போகின்றது. அவள் தன்னினைவை முற்றி லும் பெற்றுவிட்டாள் என்றாலும் பேசமுடியவில்லை. அவள் கண் ணைத் திறந்து பார்த்த சமயம் காமாக்ஷியும் அவளது மகளும் வெகு துக்கத்தோடு தன் பக்கத்தில் உட்கார்ந்து தன்னையே கவனித்துக் கொண்டு கவலையாக விருந்ததைக் கண்டதும், அவளுக்கு துக்கம் தாங்காமல் வந்துவிட்டது. "ஐயோ! நாம் பரதேசி என்பதை உணர்ந்து இவர்கள் நம்மைக் கட்டிக் காக்கின்றூர்கள். ஆஹா! இன் னுமா என்னுயிர் போகவில்லை. ஐயோ! பாவியிலும் கொடும்பாவி நானேயன்றி வேறல்ல. ஹா! நான் இவ்வளவு ஆபத்திற்கும் பிழைத்து உயிருடன் எழுந்துவிட்டதை எண்ண எனக்கே வெட்கமாக விருக்கின்றதே. பிறக்கும்போதே அன்னையை விழுங்கிய என

க்கு இந்த சமயம் அன்னையைப்போல என்னை பாதுகாக்கும் இந்தம்மைக்கு நான் என்னவிதமான பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்? ஐயோ! கேவலமான அபாக்யவதியான என்னை என் ஈசன் இப்பூவுலகில் சிருஷ்டிக்கவேண்டும்? நான் இவ்வளவு ஆபத்திலிருந்தும் பிழைத்துவிட்டேனென்பதைக் கேட்பவர்கள் சிரிக்கமாட்டார்களா? ஏ சர்வேச்வரா! இவ்வனுதையை உன்னடியில் சேர்த்துக்கொள்ள இன்னமும் உன் மனமிரங்கவில்லையா? ஹா! எனக்கு என்னிலைமையை நினைக்க நினைக்க துக்கம் மேலிடுகின்றது. என்னையறியாமல் என் கண்ணில் தண்ணீர் பெருகி வழிகின்றது?'' என்று பலவாறய் எண்ணமிட்டவண்ணம் மெல்ல கண்ணைத் திறந்து பார்த்தாள்.

இதைக் கண்ட காமாக்ஷி வெகு அன்பாகவும் கனிந்த பார்வையோடும், வாஞ்சைததும்ப வைதேகியைக் கண்டு, "என்னம்மா! உனக்கு உடம்பு எப்படி இருக்கின்றது? என் மனத்தைக் குளிரச் செய்தாயே! உனக்கு உடம்புக்கு என்ன பண்ணுகின்றதம்மா. இன்னமும் உன் பயம் உன்னைவிட்டு நீங்கவில்லையா? நீ மூன்று நாளாய் சுத்தப் பட்டினியாயிற்றே. இதோ இந்த பாலைப் பருகம்மா! சற்று களைதெளியும். நேற்று உதயமாகுமுன் உனக்கு மயக்கம் வந்து விழுந்துவிட்டாயே. பிறகு உன்னினைவே உன்னிடமில்லை. ஐயோ! நான் என்ன பயந்துவிட்டேன் தெரியுமா? அம்மா! நீ முதலில் இதைச் சாப்பிடு'' என்று வெகு வாத்ஸல்யத்தோடு அந்தப் பாலை மெல்ல அவள் வாயில் வார்த்தாள். வைதேகி மெல்ல அந்தப் பாலை நான்குவாய் குடித்தாள். அப்புறம் அது அவளுக்குப் பிடிக்கவில்லை யாகையால் கையால் சமிக்ஞை செய்து வேண்டாமென்று சொல்லிவிட்டாள். காமாக்ஷி பலவந்தஞ் செய்து வார்த்தால் வாந்தியாகிவிடப் போகிறதென்று அந்த மட்டோடு நிறுத்திவிட்டு சரேலென்று சென்று வைத்தியரை யழைத்து வந்தாள். வைத்தியர் வந்ததும் வைதேகி கண்ணைத் திறந்துகொண்டு படுத்திருப்பதைக் கண்டு சந்தோஷத்தோடு அருகில் சென்று "அம்மா! இனிபயமில்லை. ஜன்னி குதித்துவிட்டது. இன்னும் இரண்டு நாளில் முற்றிலும் குணமடைந்துவிடும். பயமே வேண்டாம், இதோ இந்த மருந்தைக் கொடுங்கள்.'' என்று ஓர் சூரணத்தைக் கொடுத்தார். அதை வாங்கி காமாக்ஷியம்மாள் வைதேகிக்கு தேனில் குழைத்து நாக்கில் தடவினுள். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் வைத்தியர் "நான் சென்று வருகிறேன். அதிகமாகப் பேசவேண்டாம். கண்ணைத்திறவாமல் படுத்திருக்கட்டும். நான் நாளைக்காலையில் வந்து பார்க்கின்றேன்." என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அப்போது தான் காமாக்ஷியின் உயிர் முற்றும் வந்தது. வைத்தியர் சென்றதும் வைதேகியைப் பார்த்து "அம்மா! நீ இனிமேல் வயிற்

திற்கு ஆகாரம் சாப்பிட்டால் தான் சீக்கிரம் பலம் வரும்; எழுந்திருப்பாய். இல்லாவிட்டால் பலஹீனமாகவே இருக்கும். நீ இந்த கஞ்சியைச் சாப்பிடு'' என்று கூறியவண்ணம் ஒரு பாத்திரத்திலிருந்த கஞ்சியை எடுத்து வைதேகியின் வாயில் வார்க்க அதையவள் பலவந்தமாக சிறிதளவு உள்ளே செலுத்தினுள். பிறகு காமாக்ஷி "அம்மா! நீ நிம்மதியாகத் தூங்கு. நன்ருக உடம்பு குணமான பிறகு நீ பேசலாம்'' என்ருள்.

அதைக்கேட்ட வைதேகி ஹீன குரலிலேயே பேசத்தொடங்கி "அம்மா! எனக்குத் தூக்கமே வரவில்லை, என் தேகமுற்றும் ரணமாகவிருக்கிறது. பாதை சகிக்க முடியவில்லை. இந்த சமயம் எப்படித் தூக்கம் வரும்? நான் பட்ட பாதையெல்லாம் எனக்கு இது வரையில் தெரியவில்லை. இப்போதுதான் பொறுக்க முடியாமல் மரணவலியாக எடுக்கின்றது. என்னல் சகிக்க முடியவில்லை. அம்மணி! தாங்கள் சொல்வதிலிருந்து நான் தங்களில்லம் வந்தபிறகு இப்போதுதான் கண்ணைத் திறந்தாற் போலவிருக்கின்றது. ஐயோ! நேற்று விடியற் காலைமுதல் தெளியாதிருந்த மயக்கம் இப்போது எதற்குத்தெளிந்தது? அப்படியேஎன்னைகொண்டு போயிருக்கலாகாதா! உம். பாவியிலும் கொடும்பாவி'' என்று கூறும்போதே கண்ணீர் கன்னத்தின் வழியாக வழிந்தோடிற்று. அதனைக்கண்ட காமாக்ஷியம்மாள் "அம்மா! நீ ஏன் கண்ணீர் விட்டுக் கலங்கவேண்டும்? வீணுக உடம்பு அதிரும். கவலைப்படாதேயம்மா''என்று உருக்கமாகக்கூறினுள். இதைக்கேட்ட கௌரி வைதேகியை நோக்கி "உன்னைக்கண்டது முதல் உன்னிடம் எனக்கு ஏற்பட்டுள்ளபற்றை சொல்லற் கரிதாகவிருக்கின்றது. என்கூடப் பிறந்த சகோதரியைவிட அதிக பாசம் உன்மேல் எனக்கு உண்டாவதால் நான் இனி உன்னை அக்காள் என்றே அழைக்கின்றேன். அதற்கு நீ தடை சொல்லமாட்டாயென்று நினைக்கின்றேன். அக்கா! நாம் வீணே கண்கலங்கி யழுதால் பயனென்ன. விதி என்பது விட்டதா? அதற்குத்தான்,

"அழுதாற் பயனேன்ன நோந்தாற் பயனேன்ன வாவதில்லை
தொழுதாற் பயனேன்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனேன்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படி வருமோ சலியாதி ரேன்னேழை நேஞ்சே!''

என்று பட்டினத்தடிகள் பாடி யிருக்கும் பாடலை நீ யறியவில்லையா? அத்தகைய மஹான்களெல்லாம் தமது மனத்தை பொறுமையோடு இருக்கவேண்டி யிருக்கும்போது, எதையுமறியாத எதற்கும் உதவாத பேதையரான மாதர் ஜென்மமெடுத்த நாம் வருந்திப் பயன் யாதுள்து? விதி என்பது மாந்தர்கட்கு உள்ள அங்கங்களில் ஒன்

றென்றல்லவா எண்ண வேண்டும்? அதிலும் மாதர்கட்கு முக்கிய மாக வந்து குறுக்கிட்டு நிற்பது முன்செய்த வினையே. அவர்களுக்கு அவ்வினை என்பது மாதராக ஜென்மமெடுத்தபோதே தெரியவில்லையா! ஆதலால், அக்கா! வீணாக வருந்தி யாது பயன்? வருந்தாதே. அப்பேர்பட்ட தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்,

"வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது"

என்று பாடி யிருப்பதைப் பார்க்கவில்லையா. உலகத்தில் மானிடப்பிறவி எடுத்தபிறகு விதிதான் எல்லாவற்றிற்கும் முதன்மை ஸ்தானம் வகித்து நிற்கின்றது. நல்லது வந்தாலும் அதுவும் நல்வினையே. தீயது வந்தாலும் அதுவும் தீவினையே. ஆதலால் எல்லாவற்றிற்கும் வினை என்பதுதான் நம்மைச் சூழ்ந்திருக்கின்றது. அதற்குத்தான் குசேலோபாக்கியானத்தில் தெரிவிக்கின்றார் பார்.

"நல்வினையடைந்தகாலை நனிநலந்திளைப்பர் நன்மை
யல்வினையடைந்தகாலை யல்லலிற்றுளைவரேல்லாந்
தொல்வினைவழியதாகுந் தோன்றனுபவங்கடந்தம்
புல்வினையா லென்றெண்ணல் புலமையோரிடத் தின்றுமால்"

அஃதேபோல நல்ல பதவி வரும் காலத்தில் நாம் நமக்குச் சமமில்லை என்று களிக்கின்றோம். அதேபோல தீவினையால் நேர்ந்த தீமை வருங் காலத்திலும் அதையும் அவ்விதம் தானே பாராட்ட வேண்டும். நாமின்றெல்லாம் வருந்திக் கண்ணீர் விட்டாலும் நமக்கு துன்பம் தொலைந்து இன்பம் வருமோ? அக்கா! இதெல்லாம் உனக்குத் தெரியாததன்று. கேவலம் அறிவிலியாகிய யான் இத்தகைய விஷயங்களைச் சொல்வதென்றால் சிறிதும் ஒவ்வாதன்றோ! ஏதோ பேச்சு பராக்கில் வந்துவிட்டது. பிழைகளைப் பொறுக்கவேண்டும்!" என்று கௌரி சொல்லி வாய்மூடுமுன் வைதேகி ஆநந்தத்தினால் நிரம்பப்பெற்றவளாய் ஆநந்தக்கண்ணீர் அருவிபோல ஓட தன்னிரு கரங்களினாலும் கௌரியைக்கட்டித் தழுவிய வண்ணம் "ஆஹா! என் தங்கமே! உன்னறிவை நான் என்னென்று கூறுவேன்? நீ முதலிலிருந்து பேசும்போதே உன் புத்தியின் நுட்பத்தைத் தெற்றெனத் தோற்றுவித்தாய். மேலும் நீபட்டினத்தடிகளின் பாடலைப்பாடியபொழுது எனக்குண்டான ஆநந்தத்திற்கு அளவே இல்லை. நீ நல்ல கல்வி பயிற்சியுள்ள காரிகை என்பதை நன்கறிந்தேன். ஊழ்வினைப் பயனால் நீங்கள் இவ்வாறு இருக்கின்றீர்களென்று நான் நன்றாய் முதலிலேயே உங்களுடைய அன்னையாரின் குணவிசேஷத்தைக் கண்டதும் அறிந்து கொண்டேன். "யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே" என்று கூறும் பழமொழிபோல உங்களுடைய தயாள குணத்தையும் பரோபகாரசிந்தையையும் பார்த்தபோதே உங்களுடைய யோக்கியதை

எனக்கு நன்றாக விளங்கிவிட்டது. ஒருவர் மற்றொருவருக்குச் செய்யும் உபகாரத்தைப்பற்றி நாலடியார் தெரிவிப்பதை நீ அறியாதவளன்று. ஆயினும் உங்களுடைய பெருமையை நீங்களே உரைப்பீர்களா? மாட்டீர்கள். வறுமை வந்தவிடத்தும் பொறுமையுடன் அருமையாய் இல்லறம் நடத்திப் பிறருக்குப் பெருமையாய் உதவி புரியும் உங்களது இடுக்கண் யாவும் நும் நல்வினைப் பயனால் இரவியைக் கண்ட பனிபோன்று பறந்து போம். மேலும் இவ்வுலகில் மாந்தர் புரியும் நற்செயல்கள் யாவற்றுள்ளும் கொடையே சிறந்ததெனக் கூறுமிடத்து

"கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கியதோர் யோசனையோர்கேட்ப
ரடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ்சொல்."

என நாலடி என்னும் நீதி நூலும் சாற்றுகின்றதன்றோ? உலகத்தில் எல்லாவிதமான நற்கிருத்தியங்களைவிட தானமே மேலானதென்றும் அதொன்றே மூவுலகிற்குங் கேட்கும் ஒலி என்றும் விளித்திருக்கின்றது. அத்தகைய தானத்திலும் வெகு சிரேஷ்டமாகிய மான தானத்தை எனக்குப் பிச்சையாக வளித்த உத்தமியின் வயிற்றுதித்த உனது அறிவைக் கேட்கவேண்டுமா? மானம் என்பது எனக்குத் தானமாக வழங்கப்பட்டதன்றி மற்று என் பிராணனையும் காத்த புண்ணியவதியின் புத்திரியாகிய உத்தம ரத்தினமல்லவா நீ? அந்த வயிற்றில் பிறந்தது பித்துக்குள்ளி யாகவும் இருக்குமோ. கல்வியைக் கசடறக் கற்றுளாய் என்பதற்கையமில்லை. உலகத்தில் பிறந்த மானிடப் பிறவிகளுக்குப் பல விஷயங்களையும் அறிவதற்கு முக்கியமாக வழி காட்டுவது கல்வியே. அக்கல்வியைக் கற்ற பிறகு முன்னோர்கள் கூறியுள்ள பல நீதி நூல்களையும் படித்தறிந்து கொள்வதே சாதகம்.

"நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலை யென்றுணர்வீர்கா
ளெல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காண வொண்ணாதே."

மேற்கண்ட "திருமந்திர"ச்செய்யுளில் விளங்கும் பொருளைப் பார்த்தனைபா? எல்லா உயிர்க்கும் முக்கியமான பொருள் இறைவனே யாயினும் கல்வியில்லாதார்க்கு அதை நுட்பமாக வறியும்தன்மை வாய்க்காதென்று கூறுகின்றார். நீயோ கல்வியில் நன்றாய்த் தேர்ந்திருக்கின்றாய். மேலும் சங்கீதஞானமும் நிரம்பி இருப்பதாக நீ பாடிய செய்யுட்களை ராகத்தோடு அமைத்து வெகு சேர்த்தியாகப் பாடியதி

விருந்து அறிந்தேன். உனக்கு எல்லா ஞானமும் நிரம்பியிருப்பதைப் பற்றி நிரம்பவும் சந்தோஷப்படுகின்றேன். இந்த காலத்திலோ ஆண் மக்கள்கூட படிப்பென்பதைக் கசடறக்கற்காத கசடராகவே இருக்கின்ருர்கள். உலகத்தில் வரவர அக்ரமம் அதிக்ரமித்து அநீதியே நீதியாக விளங்கும்போது எவ்விதம் நன்மார்க்கத்தில் கல்வி கற்று நன்னெறியில் நிற்பார்கள்? உலகம் கெட்டுவிட்டதென்பதற்கு நிதர்சனம் என்னுடைய வரலாறு ஒன்றே போதும். நிற்க, பெண்மக்கள் படிக்கக்கூடாதென்றும் படித்ததனல் கெட்டு விடுவார்களென்றும் எண்ணம் மேலிட்ட சிலர் தத்தம் வீட்டுப் பெண்களே அடியோடு கல்வியையே பயிலாமல் கேவலம் மட்டிகளாகவும் ஞானசூன்யைகளாகவும் வளர்க்கின்ருர்கள். நல்ல அறிவுடைய பெரியோர்கள் தம்முடைய மக்களுக்கு சிறு பிராய முதல் கல்வியில் பயிற்சியை ஊட்டி வளர்ப்பதால்தான், உன் போன்ற சிலர் சமயத்திற்கு ஏற்ற மாதிரியான ஞானத்தைப் பூண்டிருக்கிருர்கள். 'ஆண் பிள்ளேகளுக்கே படிப்பு அவசியம். அவர்கள்தான் கல்வி கற்க வேண்டும்' என்று பள்ளியில் 5 பிராயத்திலேயே சேர்த்துப் படிக்கவைக்கின்ருர்கள். அதில அறிவுள்ள பிள்ளேகளாக விருப்பவர்கள் ஏதோ கற்றுக்கொடுக்கும் படிப்பையாவது கற்றுக்கொள்கிருர்கள். அறிவில்லாதவர்கள் பள்ளியில் தம் தாய் தந்தையர் சேர்த்த காலமுதல் ஒரே நெறியாக பூனே குட்டித் தூக்குவதுபோலவும் அடிக்கடி வீடு விட்டு வீடு மாற்றுவது போலவுமில்லாமல் ஒரே வகுப்பிலிருந்து கெண்ணியமாக படித்துக் கொண்டே சென்று நாளடைவில் பள்ளியில் படிப்பதை மறந்து பள்ளி அறையை அடைவதே பள்ளியில் சேர்ந்து படித்ததற்குச் சாதனம் என்று எண்ணி பாடம் கற்றுவைத்த குருவை மறந்து பாடி வரும் தருணியையே சிறந்துக் கூறி மகிழ்கின்ருர்கள். அவ்விதம் செய்வது அவர்களுடைய அறியாமையே யன்றி வேறில்லே. ஆதிமுதல் கல்வியில் சிரத்தையாகப் படித்தால் அவ்விதம் செய்வார்களா? அதற்கும் நீ முன் கூறியது போல வினே தான் வந்து மறைத்து இவ்விதம் துர்க்கிருத்யங்களேச் செய்யும்படிச் சொல்கின்றது. நீ பிறவியில் பெண்மணியாகப் பிறந்தும், கஷ்டப்படும் குடியிலிருந்தும் நன்ருகக் கல்வி ஞானம் இருப்பது வெகு சந்தோஷமாயும், ஆச்சரியமாயுமிருக்கின்றது." என்று இவள் பேசிக்கொண்டே வருகையில் காமாக்ஷி யம்மாள்நடுவில் வந்து தடுத்து "ஹா! மோசம் வந்துவிட்டதே! என்ன இது கௌரி! நீயும் கொஞ்சங்கூட புத்தி யில்லாமல் அக்காளே சும்மா பேசவிட்டு விட்டாய். அவள் தேகம் இருக்கும் நிலேமையென்ன? இப்போது செய்துவரும் பிரசங்கமென்ன? நான் குழந்தை யழுததே என்று அதற்குப் பால் கொடுக்கச்சற்று வெளியில் சென்றது பெரிய அனர்த்தமாக முடிந்து விட்டதே. குழந்தை யழுதால் இவளுக்குத் தலேவேதனேயாக விருக்கும் என்று நான் வெளியில் சென்றேன். நீ ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளாமல் இவ்விதமாக நீயும் எதிரே

பேசி அவளுக்கு தேக அசௌக்கியத்தை அதிகப்படுத்துவது? சீச்சீ. நீ எவ்வளவு தெரிந்தவளா யிருந்து என்ன பயன்?'' என்று கடு கடுத்துக் கோபித்துக்கொண்டாள். அதைக் கண்ட கௌரி வெகு பக்தி வினயத்தோடு ''அம்மா! நான்வேண்டுமென்று பேசவில்லை. அக்காள் நான் எவ்வளவு சொல்லியும் கேளாமல் கண்ணீர் விட்டுக் கலங்கினுள். அதற்கு நான் விதி யாரை விட்டது கலங்காதே என்று சொன் னேன். அதற்குமேல் வார்த்தை வளர்ந்துவிட்டது. அக்காள் எடுத்து ரைத்த விஷயத்தைக் கேட்டுக்கொண்டே வருகையில் அவளுக்கு உடம்பு சரியில்லை என்பதையும் மறந்து ஆநந்தமாகக் கல்வியைப் பற்றி வேடிக்கையாக சொல்லிக்கொண்டே வந்ததை நான் கேட்டுக் கொண்டே மதிமயங்கி இருந்துவிட்டேன். இனிமேல் பேச விடுகின்ற தில்லை. நான் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்கிறேன். என்னை மன் னிக்க வேண்டும்'' என்றுவெகு வணக்கமாய்க் கேட்டுக்கொண்டதைக் கண்ட வைதேகி காமாக்ஷியம்மாளைக்கண்டு, ''அம்மணி! ஐயோ! எதற் காக அவளைத்தாங்கள் கோபித்துக்கொள்ள வேண்டும்? நானுக பேசிய திலிருந்துதானே அவளும் பேசினுள். மேலும் நான் வெறுமை படுத் திருந்தால் என்தேக பாதையைத் தாங்காமல் ஐயோ! அப்பா! அம்மா! என்று கூச்சலிட்ட வண்ணமாகத்தானே இருப்பேன். அதுவும் பேச் சில் சேர்ந்ததல்லவா? அதைவிட இவ்விதம் நல்ல சத் விஷயத்தில் பொழுது போக்குவதனுல் எனக்குண்டான வலியும் எனக்குத்தெரியா மல் சற்று மறைகின்றதுபற்றியே நான் பேசவாரமபித்தேன். தப்பிதம் என்மேல்தான். அவளை வீணில் தண்டிக்க வேண்டாம். தாங்கள் கோபிக்க வேண்டுவதெல்லாம் என்னையே சேர்ந்தது. ஆகையால் என்னை வையுங்கள்'' என்று சிரித்த முகத்தோடு கூறி, அவள் முகத்தை நோக்கினுள். இதைக்கேட்ட காமாக்ஷி வைதேகியை நோக்கி வெகு வாஞ்சையோடு பேசத் தொடங்கி ''அம்மா! நீ நேற்றுமுதல் இருந்த இருப்பென்ன? இப்போதிருக்கும் இருப்பென்ன? வைத்தியர் உன்னை அதிகம் பேசவிடலாகாதென்று சொல்லியதால் நான் அவ்வாறு கூறி னேன்'' என்றுள். இதைக்கேட்டவைதேகி ''அம்மா! வைத்தியர்சொல்லி யதுஎன்னகருத்தோடு தெரியுமா? என்னுல்பேசமுடியாமலோ, அல்லது பிடிக்காமலோ இருக்கும் சமயம் என்னை பலாத்காரமாகப் பேசவிடுவது கெடுதல் என்று தெரிவித்திருப்பார். நானே சுயேச்சையாக இஷ்டத் தோடு பேசும்போது யாதொரு கெடுதலும் உண்டாகாது. மேலும் எனக்கு நான் பட்டுள்ள பாதையாலும், அடைந்த துன்பத்தாலும், கொண்ட கிலியினுலும் உடம்பிற்கு வந்ததேயன்றி என் தேகத்தில் தானுகவே நோய் காணவில்லை. நான் இப்போது அவ்வாபத்தி லிருந்து தப்பித்துக்கொண்டபடியாலும், உங்களைப்போன்ற சத் சக வாசம் கிடைத்தனுலும், என் பிணி எல்லாம் கணப்பொழுதில் நீங்கி விட்டது. ஆகையால் இனி எனக்கு யாதொரு குறைவுமில்லை. நோயு மில்லை. அதைப்பற்றித்தாங்கள் வருந்தவேண்டாம். நான் இன்றுபடுத்

திருந்தால் நாளை உடம்பு சரியான நிலைமையை முற்றுமடைந்துவிடும். எனது பொழுது போவதற்காக சற்று பேசிக்கொண்டே இருந்தால் தான் எனக்கு வலி தெரியாமலிருக்கும். அம்மணி! அதைப்பற்றித் தாங்கள் பயப்படவேண்டாம்" என்று வெகு வணக்கமாயும், கனிந்த மொழியாகவும் கூறியதைக் கேட்ட காமாக்ஷி "அம்மா! நீ எல்லாம் தெரிந்தவள். உனக்கு நான் சொல்லவேண்டுவது ஒன்றுமில்லை. உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்வது உனக்கும் எனக்கும் முக்கியமாகையால் சொன்னேன். நீ தேகபாதை பொறுக்க முடியவில்லை என்று சொல்வதால் உன்னிஷ்டப்படியே நீங்களிருவரும் பேசிக்கொண்டிருங்கள். ஆனால் அதிகம் இரைச்சலிடவேண்டாம். உன்னுடைய வரலாற்றைக் கேட்க வெகு ஆவலாயிருக்கிறோம். உன் வரலாற்றை சொல்வாய் பார்ப்போம். உன்னைப்பெற்ற புண்ணியவதி இருப்பிடத்தைத் தெரிவித்தால் அவர்களையாகிலும் இங்கு வரவழைப்போம் அல்லது உன்னையாகிலும் கொண்டு விட்டு வருகிறேன். உனக்கு விவாகமாயிற்றா இல்லையா? என்ன சேதி? நீ எவ்விதம் ஆபத்தில் சிக்கிக்கொண்டாய் முதலியவற்றைச் சொல் பார்ப்போம்" என்றாள்.

அதைக்கேட்ட வைதேகிக்கு தன் வரலாற்றைச் சொல்லென்று கேட்டபோதே கண்ணில் நீர் பெருக வாரம்பித்துவிட்டது. அவள் தன்னை மெல்ல சமாதானப்படுத்திக்கொண்டு "அம்மணி! தாங்கள் என்னைக் காப்பாற்றியதற்கு ப்ரதிபலனாக எனக்கு நேர்ந்த தேகபாதையைக் கண்டு தாங்காமல் கலங்கி, கண்ணீர்வடித்து, கண்மணியைக் காக்கும் இமையைப்போலவும் காத்துவருகின்றீர்கள். இது போதாதென்று என் வரலாற்றையும் கேட்டுத் தாங்கள் அதனால் மனங் கலங்க வேண்டுமா? என்னுடைய வரலாற்றைக் கேட்டால் கேவலம் யாதையுமறியா மிருகங்கள் கூடக் கண்ணீர்விடும். அதைக் கேட்டுத் தாங்கள் வருந்துவதற்கு என்மனம் சம்மதிக்கவில்லையே. தங்களுக்கு அது சரியாக விருந்தால் நான் சொல்கிறேன்." என்றாள். இதைக்கேட்ட காமாக்ஷி "அம்மணி! உன்னைப் பார்க்கும்போதும் உன் தேக அசௌக்கியத்தால் பட்ட கஷ்டத்தையும் கிரைப்பாத்தியில் அனாதையாய் நின்ற காட்சியையுங்கண்டு வருந்தியதைவிட உந்தன் வரலாறு கேவலமானதாக விருக்கப்போகின்றதா? பாதகமில்லை. சொல்லம்மா. அதுபோலவே என் வரலாற்றையும் கேட்டவர்கள் எல்லாம் கலங்காதவரில்லை. என்ன செய்யலாம்? எல்லாம் காலவித்தியாசம். விதியின் பயன் எது வந்தாலும் அதை அனுபவித்துத்தானே தீரவேண்டும். கஷ்டத்தையே சதா இஷ்டத்துடன் அனுபவித்துவரும் எனக்குப் பாதகமில்லை. ஈரத்தையே கண்ணால் கண்டறியாதவர்களுக்கு ஈரம் பட்டவுடன் சில்லென்று குளிர் எடுக்கின்றது. சதாசாகரத்திலேயே - அதிலும் துக்க ஸாகரத்திலேயே - மிதப்பவளான

எனக்கு கஷ்டத்தில் அனுபவம் அதிகம் தானம்மா. அதைப்பற்றி நீ கவலைப் படாமல் சொல்லம்மா'' என்றாள்.

அதைக்கேட்ட வைதேகி அதற்கு மேல் மறுத்துக் கூற மாட்டாமல் தன் வரலாறு முற்றும் தான் கிரைக்காரியிடம் வந்து சேர்ந்தது வரையில் கண்ணீர் பெருக நாத்தடுமாறக் கூறினள். (மேல் வரலாற்றை நம் வாசகர்கள் அறிந்துளாராகையால் அதை இங்கு விவரித்துச் சொல்லல் மிகையாகும் என்று விட்டுவிட்டோம்) அவளுடைய வரலாற்றைக் கேட்ட காமாக்ஷியம்மாள் முதலில் பாதகமில்லை என்று சொல்லியதெல்லாம் மாறி வெகுவாய் விசனிக்கத் தொடங்கி கண்ணீரை காஞராக ஓட விட்டு விட்டாள். இதை யறிந்த வைதேகி தான் தாசி என்பதை எவ்விதம் கூறுவதென்ற எண்ணத்திலேயே அவள் முதலில் சற்று பின் வாங்கினள். பின்னும் கூறிய பிறகு காமாக்ஷி கண்ணிர் விட்டுக் கலங்குவதைக் கண்டு ஐயோ! நம்முடைய குலம் தெரிந்துவிட்டபடியால் இந்தம்மை வருந்துகின்றார்களோ? ஹா! என்ன செய்வேன்? என்று கண்ணீர் விட்டுக்கலங்கியதைக் கண்ட காமாக்ஷி ''அம்மா! உன் வரலாற்றின் கொடுமை யொரு புறமிருக்கட்டும். ஆஹா! உன்னுடைய ஜாதியின் தொழிலென்ன? உன் புத்தியின் விசாலமும், சத்குணமும், பரோபகார சிந்தையும், கற்பின் திறமும், திடமனதுடைய தீரமும் உத்தம லக்ஷணங்களமைந்த பத்மினி ஜாதிப்பெண்மணியாக விளங்கும் உன்னைக்கண்டால் எனக்கு இவ்வளவென்று சொல்ல சாத்யமில்லாத மகிழ்ச்சி யுண்டாகின்றது. அடடா! உன் ஜாதியின் தொழிலென்ன? நீ இருக்கும் மாதிரி என்ன? உன்னிடத்தில் எல்லா நற்குணங்களும் ஒருங்கே உருண்டுத் திரண்டு அமைந்துகிடக்கின்ற அதிசயமென்ன! ஆஹா! உன் ஒருத்திக்காகத்தான் ஊரில் மழை பெய்து செழித்து வருகின்றது என்றே சொல்லவேண்டும். உன் பாட்டிக்குள்ள துற் குணமோ உனக்குள்ள நற்குணங்களுக்கு நேர் விரோதமாக உள்ளது. இத்தகைய பத்தரை மாற்றுப் பசும் பொன் போன்ற குணத்தையுடைய மாற்றிலாமாமணியாகிய உன்னைப் பேத்தியாக அடைந்து உன்னை வளர்த்து உன்னேடுகூட சதா வாசம் செய்துகொண்டிருக்கும் கிழட்டுப் பிணத்திற்கு துற்புத்தியே ப்ரதானமாகக் கொண்டு உன்னையும் கற்பை விற்பனை செய்யும் துற்புத்தி யுடைய அற்ப மனுஷியாகச் செய்ய முன் வந்தாள் என்பதைக் கேட்க வியப்பிலும் வியப்பாக விருக்கின்றது. அந்தக் கிழவிக்கு நீ செய்தது வெகு நன்ருயிருக்கிறது. அதற்கும் அவளுக்கு புத்தி வருகின்றதோ இல்லையோ. ஏனம்மா! நடைத்திண்ணையில் படுத்திருந்த நோயாளி என்ன விதமாய்க் காணுமல் போய்விட்டார். எனக்கு அதைக்கேட்டதும் வெகு ஆச்சரியமாக விருக்கின்றது. அவருக்கோ நடக்கக்கால் கிடையாது. அவர் வேறெருவரின் உதவியைக்கொண்டு தான் வெளியில் சென்றிருக்கவேண்டும். அந்த சேதி பிறகு ஒன்றும்

தெரிவதற்குள் மறைய இடித்த இடி உன் மண்டையில் வந்து விழுந்து விட்டதே. இனிமேல் அதை எப்படி அறிவது ? அடடா! அந்த உத்தமரின் உதவியால் நீ தப்பலாம் என்று எண்ணி இருந்ததெல்லாம் வீணுய் விட்டதை எண்ண எனக்கு வெகு வருத்தமாக விருக்கின்றது. அடடா! உலகத்தில் நல்லவர்களும் உண்டு. தீயவர்களும் உண்டு. உன்னைப்போன்ற அருங்குண மமைந்த ஆரணங்கு வேறொருவருமிருக்க மாட்டார்கள். உன் பாட்டியைப்போல அற்ப புத்தி யுடையவளும் இவ்வுலகத்திலிராள். உன்னைக் கண்டால் எப்படித் தோன்றுகின்றது தெரியுமா? கற்பில் நளாயனி, சாவித்ரி போன்றும், அழகில் ரதிதேவியோ என்று ப்ரமிக்கும்படியாயும், சத்வகுணத்தில் ஸீதையைப் போன்றும் உன் நாமாவாகிய வைதேகி என்கிறதற்கு ஒற்றுப்போல எல்லாம் ஒருங்கே யமைந்து கிடக்கும் அருந்ததியே நீ என்று எனக்குத் தோன்றுகின்றது. அம்மா! நீ இவ்வளவு திக்கில்லாத பரதேசி என்று நான் எண்ணவில்லை. உனக்கு ஆபத்து நேர்ந்ததால் இவ்வித மிருக்கின்றுய் என்று எண்ணி யிருந்தேன். நீ கேவலம் அனுதையாக விருக்கிறே மென்று கவலைப்படாதே. நாங்கள் எல்லாம் உன்னுடைய சொந்த மனுஷ்யாள் என்றே எண்ணிக் கொள். எனக்கு உன் ஜாதியைப்பற்றி பாதகமில்லை. உன்னுடைய குணமும், நன்னடத்தையும்தான் ப்ரதானம். ஆகையால் உன்னை தக்க மனிதர் வந்து விவாகம் செய்துகொண்டு போகின்ற வரையில் நீ எங்கும் செல்லவேண்டாம். இங்கேயே இருந்துவா. வித்தியாசம் வேண்டாம். உன்னுடைய சொந்த வீடுபோல எண்ணிக்கொள்'' என்று வெகுவாய் உருக்கத்தோடும் தேனொழுகவும் கூறினள். இதைக்கேட்ட வைதேகிக்கு துக்கம் தாங்காமல் திணரிக்கொண்டே இருக்கின்றது. அவள் சொல்வதற்கெல்லாம் பதில்சொல்ல நாவெழாமல் மௌனமாகவே இருந்துவிட்டாள். பிறகு தன்னை யொருவாறு தேற்றிக்கொண்டு ''அம்மா! தாங்கள் என்னவோ என்னை பலமாகக் கொண்டாடுகின்றீர்கள். எது எப்படி இருந்தாலென்ன? நன்னடத்தை, நற்குணம் முதலியன பொருந்தியவர்களுக்கும், துற்குணம், தீயபுத்தியுடையவர்களுக்கும் சமமாக ஜாதியொன்றே எல்லாவற்றிற்கும் முதன்மையாக விலைமாதர் என்ற நிலையை நாட்டி பலபேர்களும் சலித்துக் கூறும் ஜாதியாகவல்லவா இருக்கின்றது. ஐயோ! அப்பேர்ப்பட்ட கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரே விலைமாதருடைய மனத்தைப் பற்றி

''தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியிற்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும் போற் பசையுமற்றதே.''

கேவலமான பாலைவனத்திற்கு ஒப்பாக மேலுள்ள பாட்டால் தெரிவித்திருக்கின்றார் பாருங்கள். அத்தகைய கொடிய பாபியாகிய என்னைத் தாங்கள் புகழ்வது தகுமா? ஒன்றில்லாவிட்டால் ஒன்றிலாவது இன்பமனுபவிக்கும்படியான புண்ணியம் செய்திருந்தால் சொல்லலாம். எல்லாவிதத்திலும் அதிர்ஷ்ட ஹீனையாகிய என்னையும் புகழ்வார்களா" என்று கண்ணீர்விட்டுக் கலங்கினாள். இதற்குள் கௌரி அவ்விடத்தில் தோன்றி "அம்மா! நேரமாய்விட்டது. சாப்பிட எழுந்து வாருங்கள்" என்று அழைக்க அதற்கு காமாக்ஷி எனக்குப் பசியே இல்லை. இவளுடைய வரலாற்றைக் கேட்டதும் எனக்கு ஓரே வியப்பும், திகைப்புமாக விருக்கின்றது. பசி என்பதே எடுக்கவில்லை. நீங்களெல்லாம் சென்று வேலையை முடித்துக்கொண்டு வாருங்கள். வரும்போது வைதேகிக்கு கொஞ்சம் கஞ்சிகொண்டுவா "என்று கூறியனுப்பிவிட்டு, வைதேகியைக் கண்டு மீண்டும் பேசத்தொடங்கி "என்னருமை வைதேகி! நீ சொல்லியபடி பசையில்லாத மனதுடைய விலைமாதர்களைப்பற்றி அவர் கூறியுள்ளது சரிதான். உன்னைப்போன்ற சகலமும் ஒருருவாயமையப்பெற்ற மரகதமணிக்கு அவர் சொல்லவில்லையே. அந்த ஜாதியில் பிறந்துவிட்டதனாலேயே எல்லோரும் கெட்டுவிட வேண்டுமென்று சாஸ்திரம் சொல்லியிருக்கின்றதா. எத்தனை பெண்மணிகள் தாசிகளின் வயிற்றில் பிறந்தவர்கள் நன்னடை, நல்லொழுக்கம், தெய்வபக்தி, பெரியோரிடத்து பிரேமை, கற்பு முதலியவற்றில் முதன்மையாக குல மாதர்களைப் போலவே விளங்கும் சிலரை நான் நேரில் கண்டிருக்கிறேன். நீ அவர்களையெல்லாம் விடப் பன்மடங்குஅதிகமாக இருப்பது வெகு சந்தோஷமாயிருக்கின்றது. ஜாதியைப்பற்றி நீ கவலைப்படாதே. தேவரடியார்கள் சாக்ஷாத் சர்வேச்வரனிடத்தில் அடிமைகள்.அவனையே நம்பியவர்கள் என்பதைத்தானே குறிக்கின்றது. சாக்ஷாத் ஈச்வரனையே மணக்க உரியவர்களல்லவா நீங்கள்? உங்கள் ஜாதியின் பெருமை உள்ளூர அறியாத சில அநாகரீகம் பிடித்த பேடைகள் ஒழுங்கீனமாய் நடந்துவிட்டமையால் அடித்ததுர்வாசனை அந்த ஜாதிக்கே வீசிவிட்டதேயன்றி தனியாக ஜாதியை எடுத்து அதன் உட் கருத்தையும் அதற்குண்டான மேன்மையையும் கண்டாராய்ந்தால் எவ்வளவு ச்ரேஷ்டமாக விருக்கின்றது. கடவுளுக்கே தொண்டுசெய்யும் மடமயிலல்லவா நீ! கண்மணி வைதேகி! மணி இரவு 8 இருக்கும் போலத் தோன்றுகின்றது. இனிமேல் சற்று தூக்கம் வந்தால் தூங்கு பார்ப்போம்" என்றாள். இதைக் கேட்ட வைதேகி "அம்மா! எனக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. உங்களுடைய ஊர் பேர் முதலிய வரலாற்றை எனக்கு எடுத்துரைக்கவேண்டுகின்றேன்" என்றாள். இதைக்கேட்ட காமாக்ஷி அம்மா "உன் துயரமே உன்னால் தாங்கமுடியவில்லையே. இன்னும் இந்தக் கேவலமான தேகநிலைமையில் என் வரலாற்றைக் கேட்டுக் கலங்கவேண்டுமா! பிறகு சொல்கின்றேன்" என்றாள். அதற்கு வைதேகி "அம்மணி! அதைப்பற்றி

ஏன் தாங்கள் கவலைப்படவேண்டும். சற்று முன் தாங்கள் தெரிவித்ததைத்திருப்பிக்கொண்டால் சரியாகிவிடுகின்றது'' என்றாள். அதற்குமேல் அவளால் தடுத்துச்சொல்ல முடியாமல்போய் விட்டபடியால் தனது வரலாற்றைச் சொல்லத் தொடங்கினாள். ''அம்மா வைதேகி! நான் சொல்லப்போகும் சேதியைக் கேட்டால் விளையாட்டாகச் சொல்லுகிறாள் என்று தோன்றலாம். காலவிதி அவ்விதம் செய்துவிட்டது. எங்கள் ஊர் தெற்கேயுள்ளது; அங்கு ஒரு சிறிய கிராமத்திற்கு எங்கள் மாமனார் ஜெமீந்தாராக விருந்தார். அவருக்கு என் புருஷர் ஒருவரே செல்வப் புதல்வனாக விளங்கினார். என் கூடப்பிறந்த ஓர் ஆண்பிள்ளை இருந்தார். அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பதுகூட எனக்கு வெகுநாளாய்த் தெரியவில்லை. ஒரு சமயம் என் தந்தைஎன் மாமனாருக்கு நேர்ந்த ஆபத்தை நீக்கி உதவிபுரிந்ததால் தன் மகனுக்கு என்னை மணம் புரிவிப்பதாக வாக்களித்துவிட்டாராம். அப்போது என் பெற்றோரும் நல்ல பதவியில் இருந்தார்களாம். பிறகு என் தந்தை தம் சொத்தெல்லாவற்றையும் அழித்து ஓட்டாண்டியாகி இறந்துவிட்டார். அப்போதும் என் மாமனார் வாக்குத் தவறலாகாதென்று தான் சொல்லிய படி எனக்கு வயது வந்தபிறகு என்னையே தன் புத்திரருக்கு மணம்செய்துவிட்டார். ஆனால் என்னை மணக்க என் புருஷனுக்கு இஷ்டமே இல்லை. தந்தையின் பலவந்தத்திற்காக என்னை மணந்தார். நான் சம்சாரத்திற்கு வந்தவுடனே கௌரி பிறந்துவிட்டாள். அவளுக்கு என் மாமனார் சிறியபிராயமுதல் பாட்டு, படிப்பு சகலமும் கற்றுக்கொடுத்தார். அவள் நல்ல புத்திசாலியாதலால் எல்லாவற்றையும் விரைவில் கற்றுக் கொண்டு விட்டாள். என் புருஷரோ என்னோடு என்றும் பேசுவது கிடையாது. குழந்தைதையைக் கண்ணால் காண்பதும் கிடையாது. கௌரிக்கு 5-ஆண்டு முடிவடைந்தபின் மற்றொரு குழந்தை பிறந்தது. அதற்குப்பிறகு மண்டைவிதியின் பயனால் ஆண்டுதோறும் ஒவ்வொரு குழந்தையாக நான்கு குழந்தைகள் பிறந்தன. பிறகு என் மாமனார் திடீரென விண்ணுலகமடைந்தார். அவர் உயிருடன் இருந்தபோதே என் கணவன் ஒரு வைப்பாட்டியை வைத்துக்கொண்டு, தந்தை அறியாமலேயே அவளுக்குப் பணத்தைக் கடன் வாங்கிக் கொடுத்துக்கொண்டே யிருந்தார். அதில் சில கடன்கள் மாமனாருக்குத் தெரிந்து அவைகளை அவர் கொடுத்துத் தொலைத்தார். காலத்திற்கேற்றவண்ணம் என் புருஷனிடம் பல அயோக்கியர்கள் நட்புகொள்ளலானார்கள், சில நண்பர்கள் எத்தகையோரெனில், கூட்டிக்கொடுக்கும் டாப்பர் மாமா ஒருவன்; வியாபாரி வியாபாரி என்று வேஷம்போடும் மோசக்காரப் பாபி ஒருவன்; அண்டப்புளுகன் ஒருவன்; முண்டச்சி வீட்டுத்தரகன் ஒருவன்; அநியாய வட்டிக்குக் கடன்வாங்கிக்கொடுக்கும் கங்கால் ஒருவன். இவ்விதக்கூட்டாளிகளுடன் இவர் சேர்ந்த பிறகு இவர் நிலைமையை என்னால் விவரிக்க இயலுமோ! செய்ய

வொண்ணாத பல அக்ரமங்களையெல்லாம் தந்தை இருக்கும் வரையில் வெளியிலேயே செய்துகொண்டு வந்தார். அவர் உயிர் துறந்தவுடன் அத்தனை சோதாக்களும் கூட்டங்கூடிக்கொண்டு வீட்டிலேயே த்வம்சம் செய்யவாரம்பித்துவிட்டார்கள். என் மாமனார் இருந்த வரையில் நான் ஒருவேலையையும் செய்து அறியேன். எல்லாவற்றிற்கும் பணி மக்கள் வைத்திருந்தார். அவர் இறந்த பிறகு, எல்லா பணி மக்களையும் எடுத்துவிட்டு எல்லா வேலைகளையும் நானே செய்யும்படியாகச் செய்துவிட்டார். அதுமுதல் வீட்டில் எத்தனை தடியன்கள் வரினும் விருந்து செய்வதும், ஆடம்பரமாகச் சாப்பிடுவதுமான பெருத்த அமர்க்களம் நடந்துகொண்டிருந்தது. இவ்விதமே, தினந்தோறும் ஒரு வைப்பாட்டியை வைத்துக்கொண்டு குதூகலமாகவிருந்தார். அதுவும் போதாதென்று ஒருத்தியை வீட்டிலேயே கொண்டு வைத்துக் கொண்டு என்னைப்படுத்தாத பாடுபடுத்தி என் கண்ணில் ஊசியை விட்டு ஆட்டி எவ்வளவு உபத்திரவம் செய்யலாகுமோ அவ்வளவும் செய்துவிட்டார். அந்தச்சமயம் நான் எத்தனையோ முறை உயிரைத் துறக்க எண்ணி செய்தமுயற்சி எல்லாம் வீணாகிவிட்டன. மேலும் இத்தனைக் குழந்தைகளையும் விட்டுச்செல்ல மனம் வராமல் உயிரைச் சுமந்து வந்தேன். கௌரி நல்ல புத்திசாலி என்று அவளுக்கு அவள் பாட்டனார் இருந்தபோது கல்வி கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்த உபாத்தியாயினி காசில்லாமலேயே நான் இவளுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன் என்று ஆசையோடு மேலும் கற்றுக்கொடுத்து வந்தாள். அவளையும் ஒருநாள் என் புருஷர் ஏதோ துராக்ரதம் செய்ய எத்தனித்தாராம். அதனால் அவள் கௌரிக்குப் பாடஞ்சொல்லுவதை உடனே விட்டுவிட்டாள். அதற்குப் பின்னர் கௌரி தன் சொந்த அறிவைக்கொண்டு கல்வியை விருத்தி செய்துகொண்டாள். நிற்க, என் புருஷன் வீட்டிலேயே ஒரு முண்டையைக்கொண்டு வைத்துக் கொண்டதை ஊரார் முற்றும் அறிந்து பலமாதிரியாகப் பேசவும், ஏளனஞ்செய்யவும் தலைபட்டு, எங்களை ஜாதி ப்ரஷ்டம் செய்துவிடுவதாகவும் கூறிப்பயமுறுத்தினர், கையிலுள்ள பொருளெல்லாம் இருளடைந்து பஞ்சாய்ப்பறந்துவிட்டன. என் புருஷன் பாடு மிரள மிரள விழிப்பாய்விட்டது. ஆசாமியின் கையில் பணம் இல்லை என்று அறிந்த எல்லா நேயர்களும் ஓட்டமெடுத்தார்கள். கடன்காரர்கள் வந்து, கட்டியிருக்கும் கந்தைதவிர, எங்களுக்குள்ள சர்வ சொத்து வீடுவாசல், நிலம் புலம் எல்லாவற்றையும் ஏலம்போட்டு எங்களை வீதியில் நிற்கவைத்துக் கோலம் காட்டினார்கள். முன்னால் சேர்ந்திருந்த மொட்டை கட்டைகளெல்லாம் இப்போது உதவுவார்களா? ஏனென்று கேட்போரில்லாமல் போய்விட்டது. அந்நிலைமையிலும் அவர் என்னோடு பேசுவதில்லை. நானாகவே பேசத்தொடங்கி "இனி மேல் ஒன்றும் பாக்கி இல்லையே. எல்லாம் தீர்ந்துவிட்டதல்லவா. உலகத்தில் மானிட ஜென்மமெடுத்ததற்கு இன்பம் துன்பம் சகல

மும் சமபாதியாக அனுபவித்தாய்விட்டது. என்னையும் தங்கள் மன திற்குத் தோன்றியபடி பந்தாடியாயிற்று. இனிமேல் குழந்தையும் குட்டியுமாய் நடுசந்தியில் நின்றுத் தவிக்கவேண்டுமா! அது பாக்கி வேண்டாம். இப்போதே புறப்பட்டு கண்காணுப் பட்டணத்திற்கு ஓடி தலைமறைவாய்ப் பிழைக்கலாம் வாருங்கள்" என்று அழைத் தேன். அதற்குப் பதிலே சொல்லாமல் வெளியேகிவிட்டார். உடனே நான் என் காதில் போட்டுக்கொண்டிருந்த கம்மலை (என் தாயார் செய்து போட்டதாகையால் அது மிஞ்சிற்று) விற்று, டிக்கட்டு வாங்கிக்கொண்டு இரயிலேறி நேராக நாங்கள் இங்கு வந்துசேர்ந்தோம். வந்ததும் என்னுடைய கைவளையல், காப்பு முதலியவைகளை விற்று, ஒரு சிறிய இடம் வாடகைக்கு வைத்துக் கொண்டு அதில் காலம் கழிப்பதும், இந்தக் கீரை வியாபாரத்தை அன்றுமுதல் கைப்பற்றி அதனால் வரும் வரும்படியைக் கொண்டு ஜீவிப்பதும், அக்ரகாரத்திலுள்ள ஸ்திரீகளுக்குப் புஷ்பம், மருதாணி முதலியன கொண்டு கொடுப்பதும் அவர்கள் புண்யத்தில் இப்படி என்காலம் நடைபெறுகின்றது. நிற்க, கௌரி தனக்குத் தெரிந்த பாட்டு, படிப்பு, பூவேலை இவைகளை நாலு சிறுமிகளுக்குச் சொல்லிக் கொடுத்து அதனால் வரும் வரும்படியையும் வைத்துக்கொண்டு காலம் தள்ளுகிறோம். கௌரிக்கு வயது 16 ஆகின்றது. அவளுக்கு புத்தி யறிந்து 3 வருஷமாகின்றது. இன்னும் கலியாணத்திற்கு வழி பிறக்கவில்லை. எல்லாம் விதியின் பயனன்றோ? இங்கு வந்த நாள் முதல் என்மகன் தினம் ஏதோ கைத்தொழில் வேலை செய்து அவன் கொண்டுவரும் காசையும் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி மிகுந் ததையுங்கொண்டு இந்தச் சிறிய வீட்டை வாங்கிக்கொண்டோம். இந்த ஊருக்கு வந்து சில வருஷமாகின்றன. இது பரியந்தமும் என்னோடுதான் சரி, கௌரியோடுதான் சரி, என் புருஷன் பேசு வது கிடையாது. வீட்டிற்கு என்ன செய்கிறீர்களென்று கேட் பதும் கிடையாது. தானும் தினம் சாப்பிட வருகின்றதில்லை. இன்னமும் அந்தச் சிற்றின்பச் சபலம் விடவில்லை என்றே நினைக்கின்றேன். தான் என்ன சம்பாதிக்கின்றாரோ என்ன செய் கிறாரோ ஒன்றும் தெரியவில்லை. எல்லாம் அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம். என்காலமென்னவோ இவ்விதம் தள்ளிக்கொண்டு வரு கின்றது. புத்தியறிந்த பெண்ணைக் கட்டுவதற்கு யாராவது வந்து கேட்டாலும் அவர்களுக்கு உடனே இந்த செய்தி தெரிந்துவிடுகின் றது. அப்பன் சரியில்லாப் பெண்ணை மணக்கமாட்டோம் என்று போய்விடுகின்றார்கள். எல்லாம் ஈனருள். எனக்கு வேறு திக்கில்லை. கட்டிக்கவிந்து விவாகத்தை நடத்துவதற்கு நான் பெண்பிள்ளை என்ன செய்வேன்? என்னபோ. என் குறையைச் சொல்லவாரம்பித்தால் இந்த யுகமே முடிந்துவிடும். என்னை நீ கேட்டதனால் சுருக்மாகச் சொன் னேன். சீராக வாழ்ந்தது மறைந்து கீரைக்காரியாக மாறவேண்டு

மென்று என் தலையில் எழுதியிருப்பதைப் பார்த்தாலே என் துக்கம் போதாதா. இனியும் அதை எல்லாம் நினைக்கவேண்டாம். வீண் கவலைப்பட வேண்டாம். உன்னை என் புருஷன் கண்ணில் படாமல் வைக்கவேண்டு மென்பதே என் கருத்து. இவ்வளவு ரூபவதியாகிய உன்னைக் கண்டால் ஒருக்கால் ஏதாவது துராக்ருதம் செய்ய எண்ணினால் என்ன செய்வதென்றே உன்னை மறைத்து வைக்க எண்ணினேன். ஆனால் மூன்று நாளாய் அவர் வீட்டு வழியே வரவில்லை. அதுவும் உன்னுடைய நல்ல காலம்தான். கௌரி புத்தி யறிவதற்கு முன் வீடுகளுக்குச் சென்று பாடம் கற்றுக் கொடுத்து வந்தாள். இப்போது புத்தியறிந்த பிறகு எப்படி வெளியில் போவது? ஏதோ சில பெண்கள்வந்து இங்கேயே கற்றுக்கொண்டு போகிறார்கள். இப்படித்தான் என் காலம் நடக்கின்றது. அது கிடக்கட்டும். இதைக் கேட்டு இதனால் நீ வருந்திக் கண்ணீர் விடாதே. இந்த பேச்சை இதோடு நிறுத்திவிடுகிறேன். இதெல்லாங்கூட எனக்குக் கவலையாக வில்லை. உன்னை இக்கதிக்குக் கொண்டுவந்த அந்தச் சண்டாள சாரங்கபாணியை என்னசெய்தாலும் தீராது. அப்படுபாவியை ஈசன் சும்மா விடமாட்டார். அவனை தண்டித்தே தீருவார். அதிருக்கட்டும். வைதேகி! நான் ஒன்று கேட்கின்றேன். அதற்கு உனக்கு கோபம் வருமோ! பதிலளிப்பாயா?'' என்று வெகு நயமாய்க் கேட்டாள்.

இவளுடைய வரலாற்றையும் கடைசியில் இவள் சொல்லியதையும் கேட்ட வைதேகி மிகவும் வணக்கத்தோடு ''அம்மா! உங்களைப் பார்த்தபோதே நீங்கள் கால வித்யாசத்தினால் தான் இவ்விதம்கிரை பறிக்கின்றீர்கள் என்பதை நான் நினைத்தேன். எல்லோரும் ஈசன் நிழல்லவா குடி. அவன் விட்ட வழியே நாம் நடக்கவேண்டியவர்களல்லவா? உங்களுக்கு இத்தகைய உன்னதமான புத்தியைக் கொடுத்திருக்கிறார். உங்கள் புருஷருக்கோ கேவலமான அற்ப புத்தியைக் கொடுத்திருக்கிறார். எல்லாமவனருளன்றோ? இன்பம் வருங் காலத்தில் இணையிலாமல் மகிழ்கின்றோம். துன்பம் வருங் காலத்தில் துயரப்பட்டால் தீருமோ? எல்லாவற்றையும் அனுபவிப்பது ஒன்று தான் மிஞ்சுகிறது......தாங்கள் என்னவோ கேட்பதாகச் சொன்னீர்களே அது யாது? தடையின்றிக் கேட்கலாம். பதில் விடுக்கத் தயாராக விருக்கின்றேன்'' என்றாள். இதைக்கேட்ட காமாக்ஷி, ''அம்மா! வைதேகி! நீ சொல்லிவந்த உன் வரலாற்றில் திண்ணையில் படுத்தவரைக் காணவில்லை என்று தெரிவித்தாயே. நீயும் விவாகமாகாத மங்கையாகவிருக்கின்றாய். அவரைத் தேடிப் பிடித்து நீ மணந்து சுகமாக வாழலாமல்லவா? நீ சொல்லியதிலிருந்து உன் மனம் அவர்மீது நாடியிருப்பதாக எனக்குத் தெரிகின்றது. நீயோ மகா புத்திசாலி. மகா பதிவ்ரதை. மஹா ச்ரேஷ்டமானவள். மஹா லக்ஷ்மியைப்போன்ற அழகு வாய்ந்தவள். உன்னைக் கண்டு அவர் மணக்கமாட்டேன் என்று சொல்வாரா? அவரிருப்பிடம் உனக்குத்

தெரியுமா? நீ யாரும் திக்கில்லா அனாதையாக விருப்பதால் ஏதோ என்னாலான உபகாரத்தைச் செய்கின்றேன். அதனால் தான் கேட்கின்றேன். 'நான் தாசியாயிற்றே. அவர் எப்படி என்னை மணப்பார்'' என்று நீ சொல்லுவாய். உன்னை நேரில் கண்டபிறகு தாசியாவது ஊசியாவது. எல்லாம் பறந்துவிடும். மேலும், நீ அவருக்குச் செய்துள்ள உபகாரத்தைக் கருதியாவது உன்னை யவர் வெறுக்கமாட்டாரென்று என் மனதில் தோன்றுகின்றது. நீ என்ன சொல்கிறாய்? நான் இந்த ரகசிய விஷயமெல்லாம் கேட்கிறேனே என்று வித்யாசமாக எண்ணாதே. அம்மா! நான் உன்மேல் கொண்டுள்ள பிரியத்தினால் கேட்கிறேனேயன்றி வேறல்ல'' என்று வெகு உருக்கமாகச் சொன்னாள்.

இதைக் கேட்ட வைதேகி வெகு மரியாதையுடன், வெட்கமும் துக்கமும் பாதிப்பதை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக்கொண்டு, ''அம்மணி! இதற்காகவா தாங்கள் அவ்வளவு மயங்கவேண்டும்? நன்மையைத்தானே எடுத்துரைத்தீர்கள். அதற்கு வித்யாசமாய் நான் எண்ணுவதற்கு என்ன இருக்கின்றது? அம்மா! நான் எல்லாவற்றிலும் அபாக்யவதி என்பதை யறிந்தும் நான் அவர்மீது ஆசைக் கொளல் நன்றோ? அவ்விதம் நான் கிட்டாத வஸ்துவின்மீது மோகங் கொண்டால், என்னைக் கண்டவர்கள் நகையார்களா? என்னம்மணி! தங்களையே என் பெற்ற அன்னையாக எண்ணிச் சொல்கிறேன். நான் பிறந்து இந்த 16 வயதளவும் எந்தப் புருடர்மீதிலும் என்மனம் சென்றதே கிடையாது. இதற்காக என் பாட்டி என்னைப் படுத்தியது கொஞ்சமல்ல. அதற்கெல்லாம் அசையாத என் மனமென்னவோ முற்றும் அந்தச் சுந்திரப் புருடன்மீது விந்தையாய்ச் சென்று லயித்துப் போய்விட்டதென்பது உண்மையே. ஹா! அவரைக் கண்டால் உயர்குல வீரரைப்போலிருந்தது. அவரா கேவலமான ஜாதியைச் சேர்ந்த என்னை மணப்பார்? அது ஒருக்காலும் நடக்காத காரியம். இருந்தாலும் நானென்னவோ இனி இந்த ஜென்மத்தில் அவரைக் காதலித்துவிட்டவள், வேறு யாரையும் கண்ணெடுத்தும் பாரேன். இது சத்தியம். கடவுளறிய இது முக்காலும் சத்தியம். ஆயினும் தாங்களென்னவோ மஹாலக்ஷ்மிபோல் எனக்கு எவ்வித உபகாரத்தையும் செய்ய முன் வந்திருப்பதால், எனக்கிருக்கும் இவ்வொரு வேட்கையை மாத்திரம் தீர்க்க வேண்டுகிறேன். அதாவது அவரை நான் மணக்க பாக்கியம் செய்யாமலிருந்தாலும் மறுமுறை கண்ணால் பார்க்க வேண்டுமென்ற அவா என்னை மிகவும் வதைக்கின்றது. ஆதலால் தாங்கள் எனக்கு ஒரு உதவிபுரியவேண்டும். நேற்று என் சங்கையையும், கிலியையும் தீர்த்த மங்கையர்க்கரசியாகிய தங்களுக்கு இதோ இந்த சங்கிலியை சன்மானமாகக்கொடுக்கின்றேன். இதைவிற்றுத் தாங்கள் சிலவிற்கு வைத்துக்

கொள்ளுங்கள். மறுக்கலாகாது. மறுத்தால் நான் வித்யாசமாக எண்ணி இந்த விடத்தைவிட்டுப் புறப்பட்டு இன்னும் எங்கேயாவது சென்று உயிரை விட்டுவிடுவேன். நானே மனப்பூர்வமாய்க் கொடுப்பதைத் தாங்கள் வாங்கிக்கொண்டே தீரவேண்டும்." என்று சொல்லிக் கொண்டே தன் கழுத்திலிருந்த சங்கிலியை எடுத்து காமாக்ஷியின் கழுத்தில் போட்டுவிட்டாள். அதை வேண்டாமென்று காமாக்ஷி எவ்வளவு தடுத்தும் அதைக்கேட்காமல் வைதேகி ஒரே பிடியாகச்சொல்லியதனல் மறுக்கமாட்டாமல் அதையொப்புக் கொண்டாள். பிறகு காமாக்ஷி வைதேகியைக்கண்டு "அம்மா! நீ என்ன சொல்கின்றாயோ அதைச்சொல் நான் உடனே செய்கின்றேன்." என்று வெகு வாஞ்சையோடு கேட்டாள். அதற்கு வைதேகி "அம்மணி! இப்பொழுது பொழுது விடிய ஜாமமிருக்கும்போலத் தோன்றுகின்றது. தாங்கள் சென்று கீரையைப் பறித்துக்கொண்டு வாருங்கள். அந்தக்கீரையை கூடையோடு வண்டியில் வைத்துக்கொண்டு சிந்தாதிரிப் பேட்டையில் சென்று அங்குள்ள தெருக்களில் கீரையை விற்றுக் கொண்டே அங்குள்ள எவர்களையாவது கண்டுபேசி 'பாழும்பட்டணத்தில் எழவெடுத்த மோட்டார்கார் உபத்திரவத்தை என்னவென்று சொல்லுவேன்? இப்போது நான் வரும்போது ஒருமோட்டார்கார் ஓர் பெண்ணின்மீது ஏறி அவள் இறந்துவிட்டாள். அனியாயக் கொள்ளையாக விருக்கிறது. ஊரே அக்ரமமாகிவிட்டது' என்று ஒவ்வொரு தெருவிலும் சிலரோடு சொல்லிக்கொண்டே சென்றால் அங்கு அவரிருப்பிடமாக விருந்தால் இங்குகூட நடந்ததென்பதைச் சொல்லுவார்கள். அதை நன்றாய் விசாரித்துக்கொண்டு வரலாம். எதற்கு அங்குபோக வேண்டுமென்றால் அந்த உத்தம புருஷர் என்வீட்டு நடைத்திண்ணையில் படுத்திருந்த காலத்தில் நான் அவருடைய விலாசத்தைக்கேட்டதற்கு அவர் 'சிந்தாதிரிப்பேட்டையில்' என்றுசொல்லிக்கொண்டே மயங்கிவிட்டார். பிறகு அவர் வாய்திறந்து பேசவேயில்லை. அவர் சொல்லிய அந்த ஒரு வார்த்தையிலிருந்து சிந்தாதிரிப் பேட்டையில் தான் அவர் ஜாகையிருக்கவேண்டும் என்பது என்னுடைய ஊகமாகையாலும் அன்னவர் பிழைத்து வீட்டிற்கு வந்தாரா இல்லையா? காணமல்போனவர் எப்படியானர் என்பதை அறிய என்மனம் பதைக்கின்றதாகையாலும், தாங்கள் அங்குச் சென்று விவரமாக விசாரித்துக்கொண்டு வந்தால் எனக்கு என் மானத்தையும், ப்ராணனையும் காத்ததைவிட அதிகமான புண்ணியமுண்டு. நான் அன்றுமுதல் இன்று வரையில் எனக்குற்ற ஆபத்தைக்கூடக் கவனித்து வருந்தவில்லை. அந்த மன்மதன் மீதே என நினைவு முற்றுமிருப்பதால்தான் அன்னவரை இன்னொருதரம் பாராமல் என்னுயிர் பிரியமாட்டேனென்று இத்தனை ஆபத்திற்கும் தப்பிப் பிழைத்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை. இன்று நீங்கள் விஷயத்தை யறிந்துகொண்டுவந்தால் மேலேயாகவேண்டியதை நாளைக்

குப் பார்த்துக்கொள்வோம். என்னம்மணீ! என்றால் தங்களுக்கு இவ்விதம் சிரமம் ஏற்படுவதற்கு மன்னிக்கவேண்டும்.'' என்று வெகு பணிவாயும் கனிவாயும் கூறியதைக்கேட்ட காமாக்ஷி மட்டற்ற மகிழ்ச்சியடைந்து ''என் கண்ணே! உன்னிஷ்டப்படியே செய்துவருகிறேன். நீ இனியாவது சற்றுதூங்குவாய். நான் சென்று கீரையைப் பறித்துக்கொண்டு வருகின்றேன். கௌரியை எழுப்பி இன்னமும் பேசாதே. நான் சென்று கீரையைக் கொண்டுவந்து பார்க்கிறேன். நீ தூங்கினால் எழுப்பவில்லை; இல்லையேல் சொல்லிவிட்டுப் போகிறேன்'' என்றுகூறி வெகு சந்தோஷத்தோடு சென்று கீரையைப் பறித்துக் கால்வாயில் கழுவிக் கட்டு கட்டிக்கொண்டு உதயமாவதற்குள் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அப்போதும் வைதேகி தூக்கமே பிடிக்காமல் படுத்திருந்ததைக் கண்ட காமாக்ஷி ''இன்னமும் நீ தூங்கவில்லையா? இனியாவது தூங்கம்மா நான் சென்று வருகின்றேன்.'' என்று சொல்லிவிட்டுக்கீரையை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். பிறகு நெடுநேரம் வரையில் வைதேகிக்குத் தூக்கம்பிடிக்காமல் என்னவோ ஏக்கம் பிடித்த வண்ணம் யோசனைசெய்துகொண்டே விடியும் சமயம் சற்று கண்ணயர்ந்தாள். பொழுதுவிடிந்ததும் வீட்டிலுள்ளவர்களெல்லாம் எழுந்து தத்தம் அலுவல்களைச்செய்யத்தொடங்கினார்கள். கௌரி வைதேகி தூங்குவதைக் கண்டு களிப்புற்று அவள் தானாகஎழுந்திருக்கிறபோது எழுந்திருக்கட்டும், என்று கதவை மூடிக்கொண்டு வீட்டு வேலையிலமர்ந்தாள். மணியும் முறையே சென்று 12 அடித்தது. கௌரிக்கு காமாக்ஷி சென்ற வரலாறு தெரியாதாகையால் இன்னும் அம்மா வரவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். வைதேகியும் நன்றாக அயர்ந்து தூங்கி எழுந்தாள். அவள் தூங்கும்போதெல்லாம் காமாக்ஷி சென்ற சேதியாதாகுமோ, வீடு தெரிந்ததோ இல்லையோ என்று யோசித்துக்கொண்டே நித்திரையிலாழ்ந்தாளாகையால் அவள் அதைப்பற்றியே இன்பக்கனவு கண்டு கொண்டு நெடுநேரம் தூங்கிவிட்டாள். பகல் 11-மணிக்கு மேல் அவள் தூங்கி எழுந்தாள். அப்போது அவள் திடுக்கிட்டு ''ஐயோ! நாம் கண்டதெல்லாம் கனவா? நினைவென்றல்லவா எண்ணி மயங்கினேன்—ஆ! நான் கண்ட கனவுபோலவும் இச்சென்மத்தில் எனக்கு நடக்குமா? அரிது; அரிது.......உம்..........கீரை கொண்டு சென்ற அம்மா வந்தார்களோ இல்லையோ தெரியவில்லையே. இங்கு யாரையும் காணவில்லை. கதவையும் சாத்தித் தாளிட்டிருக்கின்றதே.'' என்று சற்று நேரம் யோசித்துக்கொண்டே இருக்கையில் கதவைத் திறந்துகொண்டு காமாக்ஷி வெகு சந்தோஷத்தோடும், சிரித்த முகத்தோடும் மகிழ்ச்சியே மயமாய் மாறிப்போய் ''வைதேகி!'' என்று கூப்பிட்டவாறு உள்ளே வந்தாள். இவள் வரவையும் கொண்டு வந்துள்ள செய்தியையுமே வெகு ஆவலாய் எதிர் நோக்கிக் கொண்டிருந்த வைதேகி இவளுடைய வரவையும் இவள் முகத்தில் கண்ட மகிழ்ச்சி

யையும் கண்டு பெரிதும் ஆவலோடு எழுந்து காமாக்ஷியை வணங்கி "அம்மணி! வாருங்கள். போன சேதி என்னவா யிற்று, காயா? பழமா?" என்று வெகு ஆவலோடு கேட்டாள். அதைக் கேட்ட காமாக்ஷி "என்னருமை வைதேகி! உன் முகராசி யொன்றே இவ் வுலகை எல்லாம் கவரச்செய்துவிடுமே. அத்தகைய முகராசி யுள்ள நீ சொல்லியனுப்பிய காரியங்கூடக் காயாவதுண்டோ? நல்ல பழுத்த பழமாகவே கொண்டுவந்துவிட்டேன். நானிங்கிருந்து நேராக சிந்தாதிரிப்பேட்டையை உதயத்திற்கு அடைந்தேன். அங்கு இரண்டு மூன்று தெருக்களில் நீ சொல்லியதுபோல விசாரித்துக்கொண்டே போனேன். அங்கு ஒருத்தி போய்க் கொண் டிருந்தாள். அவள் பக் கத்தில் மோட்டார்கார் உராய்ந்து கொண்டே போயிற்று. அதைக் கண்ட அவள் அந்த வண்டியோட்டியைப் பலவாறுகத்திட்டி எழ வெடுத்த மோட்டார் எங்கய்யா காலிலும் இப்படித்தான்ஏறிவிட்டதோ என்னவோ என்றாள். அதைக் கவனித்த நான் அவளிடம் நெருங்கி நானும் மோட்டாரைப்பற்றி நன்றாய் வைதுவிட்டு நல்லதனமாகவே உங்கய்யா யாரு? அவர் எங்கிருப்பதென்று விசாரித்தேன். அதற்கவள் நான் பச்சத்துத் தெருவிலுள்ள பங்களாவில் வேலை செய்பவள். என் எஜமானர் இரண்டுநாளைக்கு முன் திருவல்லிக்கேணி பக்கமாகப் போய்க்கொண்டிருந்தபோது ஒரு பாழும் மோட்டார்கார் அவர் காலின்மேல் ஏறி கால் சதையைப் பிய்த்துக்கொண்டு போய்விட்டது. உம்....அதற்குமேல் அதுபெரிய ராமாயணம். எனக்கு நிற்கப்போ தில்லை", என்று சொல்லிக்கொண்டே போகவாரம்பித்தாள். நான் அவளை வெகு நல்ல தனமாகவே பேசச்செய்து நானும் அந்தப்பக்கம் தான் வருகிறேன். ஏனம்மா அவசரமாக ஓடுகின்றாய்? இந்தக் கீரை யைக் கொஞ்சம் வாங்கிக்கொள்" என்று சொல்லி ஒரு பெரிய கட்டு கீரையை எடுத்துக்கொடுத்துவிட்டு ஏனம்மா! உங்கள்எஜமானுக்கு இப் போது நன்றாய்குணமாகிவிட்டதா? கால் நடக்கவந்து விட்டதா? அவ ருக்கு கலியாணமாகிவிட்டதா? என்று பல கேள்விகளைக் கேட்டேன். கீரையைவாங்கி வைத்துக்கொண்டு அவள் "அம்மா! அதைஏன் கேட் டீர்கள்? எங்கய்யாவுக்கு கல்யாணமானதும் மனைவி இறந்துவிட்டாள். (ராமாம்ருதத்திற்கு கல்யாணமானதுமுதல் அவர் ஜெனரல் ஆஸ்பத் திரிக்குப்போய் வந்த வரையிலுள்ள கதை நம் வாசகர்களுக்கு தெரிந் ததாகையால் அதை இங்கு மீண்டு கூறுவது அனாவசியமென்று குறிப்பாக விட்டுவிட்டோம்.] என்று சகலமான வாலாற்றை யும் தெரிவித்து அம்மா! ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் துப்பறிபவ ருக்கு மூளை கலங்கிப் பைத்தியம் பிடித்துவிட்டதாம். அவரை பைத் தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டுவிட்டார்களாம். அவரை யாரா வது போய் பார்ப்பதற்கும் விடுகின்றதில்லையாம்" என்றாள். ஹா! அந் தம்மாள் உன்னைப்பற்றிக் கொண்டாடுவதுமட்டு மிதமன்று. அந்த யுவ னோசதா உன்னையே எண்ணி உள்ளம் உருகுகின்றாராம். அவருடைய

இனும் ! இனும் !!

## காதலின் வெற்றி !

யௌவனக் காதலர்கள் அவசியம் படிக்க வேண்டிய ஓர் இன்ப நூல். காதலின் மகிமையை நன்கு விவரித்துள்ளது. விலாசம் தெரியப்படுத்தினுல் ஒன்று இனும் !

## இனிய துப்பறியும் நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| சரோஜனி | 2 | 0 | அமரநாதன் | 1 | 4 |
| இளங்கோவன் | 1 | 12 | அமிர்தகுமாரி | 1 | 4 |
| ஆதிலட்சுமி | 1 | 12 | இந்திரஜித்தன் | 1 | 4 |
| அயாஷா | 1 | 12 | ரங்கநாயகி | 1 | 4 |
| கனகமணி | 2 | 12 | எமகாதகன் | 0 | 8 |
| பத்மாட்சி | 2 | 0 | தடிராமன் | 0 | 6 |
| கனகாங்கி | 2 | 0 | பச்சைமோதிரம் | 1 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | 8 | 0 | காதல் மையல் | 1 | 8 |
| மதனும்பாள் | 3 | 0 | கணவன்கடமை | 0 | 4 |
| மாணிக்கவல்லி | 1 | 0 | லோகநாயகி | 1 | 0 |
| திருக்கழுக்குன்றத்துக் கொலை | 1 | 8 | இந்திராபாய் | 2 | 8 |
| | | | பச்சையம்மாள் | 1 | 0 |

எம். எஸ். ராமுலு அண்டு, கம்பெனி.

புஸ்தக வியாபாரிகள் (ஜ)

ராயபுரம், மதறஸ்.

---

குறைந்த விலை ! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு !!

**English Self Instructor.** Rs. 1-8-0.




## இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

### இங்கிலீஷ் கற்கும் வழி.

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின்

முகவுரையுடன் கூடியது.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்களின் உச்சரிப்பு நன்ருக விளங்கும்படி வெளியிடப்பட்டிருக்கின்றது. உபாத்தியாயர் இல்லாமலே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,

3, இருசப்பன் சந்து, மின்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

# எங்களிடம் கிடைக்கும் புஸ்தகங்கள்.

## வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் B. A. யால் எழுதப்பட்டவை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விலாஸவதி | (2) | 3 | 0 | 0 | மதன கல்யாணி | (3) | 4 | 8 | 0 |
| மேனகா | (2) | 3 | 0 | 0 | பூர்ணசந்திரோதயம் | (4) | 7 | 8 | 0 |
| கும்பகோணம் வக்கீல் | (2) | 3 | 0 | 0 | சௌந்தர கோகிலம் | | 1 | 8 | 0 |
| | | | | | கனகாம்புஜம் | (2) | 2 | 12 | 0 |
| பாலாமணி | | 2 | 8 | 0 | மாணிக்க வாசகர் | | 0 | 8 | 0 |
| வஸந்த மல்லிகா | | 1 | 8 | 0 | திலோத்தமா | | 0 | 12 | 0 |
| வித்தியாசாகரர் | | 1 | 4 | 0 | | | | | |

---

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர்

சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்புப்புத்தகங்கள்

உரையுடன் கூடியன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **கம்பராமாயணம்.** | | | | **கம்பர்.** | | | |
| கிஷ்கிந்தா காண்டம் | 4 | 8 | 0 | சடகோபரந்தாதி | 0 | 10 | 0 |
| சுந்தரகாண்டம் | 5 | 0 | 0 | சரசுவதியந்தாதி | 0 | 3 | 0 |
| **வில்லிபுத்தூரார் பாரதம்.** | | | | **பிள்ளைபெருமாளையங்கார்** | | | |
| இராயசூயச் சருக்கம் | 1 | 4 | 0 | அஷ்டப்ரபந்தம் | 3 | 8 | 0 |
| சூதுபோர்ச் சருக்கம் | 1 | 12 | 0 | நன்னூற் காண்டிகை | 1 | 8 | 0 |
| உத்யோக பர்வம் | 2 | 0 | 0 | ஸ்ரீபட்டர் வைபவம் | 0 | 8 | 0 |

வத்ஸா அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

## ஆங்கிலம் தெரியாத அன்பர்களே!

**எங்கும் ஆங்கிலம் பாவிய இக்காலத்தில் இங்கிலீஷ் தெரியாமல் இருக்கலாமா? அதை இப்பொழுதே கற்றுக்கொள்ளுங்கள், எப்பொழுதும் சுகம் பெறுவீர்கள். உங்களுக்கு எளிதில் இங்கிலீஷைப் போதிப்பதற்கு அதிர்ஷ்டவசத்தால்,**

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

**640-பக்கமுள்ள அழகிய முழுகாலிகோ பைண்டுள்ளது**

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்கவும்.

விலை ரூபா **2**-தான்

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு ரூபா **1-8-0**.




இந்நூல், ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்குத் தமிழினாலேயே இலகுவாகப் போதிக்கும் அரிய போதனா முறைகள் அடங்கியது ஆங்கிலம் பயிலும் முறைகள் இதில் அதி அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன; இங்கிலீஷ் வார்த்தைகளைத் தமிழிலும் இங்கிலீஷிலும் அமைத்து ஆங்கில உச்சரிப்புகள் சரியாய் வரும்படி தமிழ் எழுத்துக்களுக்குக் குறிகள் இடப்பட்டிருக்கின்றன. அதனால் தமிழ் எழுத்துக்களில் அமைந்த இங்கிலீஷ் வார்த்தைகளை சப்ததோஷமின்றிச் சரியாக உச்சரிக்கலாம். இந்த அரிய முறை வேறெந்தப் புத்தகத்திலும் அமையவில்லை. இதன் உதவி கொண்டு, ஓர் உபாத்தியாயரைத் தேடி அலையாமலும், மிக்க பணச் செலவின்றியும், நெடுந்தூரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்குப் போகாமலும் எவரும் தங்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்தபடியே இங்கிலீஷ் பாஷையை எளிதில் கற்றுக்கொள்ளலாம். பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவிட்டுப் பத்து வருடங்கள் வரை ஆங்கிலம் பயிலுவதால் எவ்வளவு இங்கிலீஷ் தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு ஆங்கில ஞானம் 40-நாட்களில் இதனால் உண்டாய்விடும். கிராம உத்தியோகஸ்தர்கள், துரைமார்களிடம் வேலை செய்யும் பட்லர், மேட்டி, பாய், கூக், ஆயாள், கங்காணிகள் முதலியவர்களுக்கும் இங்கிலீஷ் தெரியாத மற்ற ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதலிய எல்லோருக்குமே இது இங்கிலீஷ் ஞானத்தை யுண்டாக்கிச் சீரும் சிறப்பும் தரும். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் அவசியம் வரவழைத்துக் கொள்ளவேண்டும்.

**"ஆனந்தபோதினி" ஆபீஸ்.**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரிவீதி, மதராஸ்.

எமது ரேஜிஸ்டர்ட் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும்
புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!!

# ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்ருய்த் திருத்தப்பட்டு 7-ம் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. உடனே எழுதுங்கள். ராமர் பட்டாபிஷேகம், சீதாகலியாணம் 2 ஆப்டோன் படங்களுடன் 700 பக்கங் கொண்டது. விலை ரூ. 2.




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் உபாத்தியாயரில்லாமல் தெரிந்து கொள்ளலாம். ஒரு இங்கிலீஷ் சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி கோடீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் அர்த்தமும் வெகு சுலுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டாயம் தேவை.

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். கேட்லாக் இனும்.

## ஆநந்த குணபோதினி.

ஒரு நூதன உயர்தர மாதப் பத்திரிகை.

பிரசித்த அனுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிருர்.

இத்தகைய நவீன சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப் படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குவதற் குரிய விஷயங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகீக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும் ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும்படியாயிருப்பது "ஆனந்த குணபோதினி", தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர் எவர்கையிலும் இப் பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய வாய்க்கினிய அலங்கார வசன மழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதைத் தங்களுடைய அனுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆநந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷசந்தா ரூபாய் ஒன்றே (ரூ. 1.) இன்றே எழுதுங்கள். உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

அன்னையும் சதா அந்தப்பெண் அகப்பட்டு விடமாட்டாளா என்று தெய்வங்களை எல்லாம் வேண்டிக்கொண்டே இருக்கின்றாளாம். அந்த மன்மதனுக்கு மூத்த மனைவி இறந்துவிட்டதிலிருந்து உண்டான விரக்தியெல்லாம் உன்னுடைய மதிமுகத்தைக்கண்ட வுடன் அதிவிரைவில் பறந்துவிட்டதாம். பார்த்தாயா அவரது குணத்தைப்பற்றியும் நடத்தையைப் பற்றியும் அந்தம்மாள் சொல்லியது கங்குகரையில்லை. அவ்வளவு தூரம்சொல்லியதும் எனக்கும் அவரைப்பார்க்க வேண்டுமென்றுதோன்றியது.நான் கீரையை அந்தப்பங்களாவிலேயேஒருமூலையில் வைத்துவிட்டு அந்தம்மாளின் உறவினள்போல கூடவே உள்ளே சென்ற சமயம் அந்தச் சுந்திரபுருஷர் ஓர் சாய்வான நாற்காலியில் ஏக்கமே வடிவாய் உட்கார்ந்திருந்தார். அப்போது அவரது அன்னை அவரைக்கெஞ்சி வேண்டி "அப்பா! என் ரத்தினமே! இப்படி பட்டினி கிடந்தால் என்னசெய்வது? கொஞ்சம் ஆகாரம் சாப்பிடப்பா. உன்மனத்தை நீ தளரவிட்டுவிட்டால் பேதையர்களான நாங்கள் என்ன செய்வோம்? என் துரையே! நீ கொஞ்சம் காப்பியாகிலும் சாப்பிடப்பா. உன்மனம் குளிர்ந்து என்வயிற்றில் பாலும் வார்த்து உன்மனத்தைக் கொள்ளைகொண்ட கோகிலம் அகப்பட்டுவிட்டால் நான் அதற்காக ஒருலக்ஷ ரூபாய் தனியாக எடுத்து தானதருமம், கோயில்களில் அபிஷேகம், ஏழை ஜனங்களுக்கு சமாராதனை முதலியனவெல்லாம் செய்து, இந்த சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள ஈச்வரனுக்கு ஒருபெரிய திருவிழாச்செய்துவைத்து, திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தஸாரதிப் பெருமாளுக்கு, வேதவல்லி அம்மனுக்கு, நரசிம்மருக்கு எல்லோருக்கும் அபிஷேகம் முதலியவற்றைச் செய்து ஆயிரம் ஆயிரம் ரூபாய் பாதகாணிக்கை சமர்ப்பித்து உங்களையும் தம்பதியாக அழைத்துச் சென்று அர்ச்சனை செய்து வைத்து அழைத்துக் கொண்டு வருகின்றேன்" என்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன். அப்பா? ஒருதெய்வமில்லாவிட்டால் ஒருதெய்வமாகிலும் கிருபை செய்யாதா? நீகவலைப்படாதே. உன்மனத்தைத் தேற்றிக்கொண்டு இந்தக்காப்பியை சாப்பிடு," என்று வெகு உருக்கமாய்க் கூறியதை நான் என்காதால் கேட்டேன். அந்தம்மாள் சொல்லியமாதிரி எனக்குக்கூட துக்கம் வந்து விட்டது. அப்போதே நீ இங்கிருப்பதைச் சொல்லிவிடலாமா என்று எண்ணினேன். பிறகு உன் அனுமதியில்லாமல்எப்படிச்சொல்கின்றதென்று வெறுமை இருந்துவிட்டேன். அந்தம்மாள் சொல்லியதற்கு அவர் எதுவும் அதிகமாகப் பேசாமல் "அம்மா! என்னை வீணாய் வருத்தாதே. எனக்கு எல்லாம் தீர்ந்து விட்டது. அந்தத் துப்பறியும் நிபுணருக்கு நேர்ந்த ஆபத்திலிருந்தே என்னதிர்ஷ்டம் தெரியவில்லையா? எனக்குப் பசியே இல்லை. அந்த உத்தம லக்ஷணங்களமைந்த பத்தரைமாத்துத் தங்கத்தை மறுமுறை என் கண்ணால் கணடாலன்றி எனக்கு எதுவும் வேண்டாம். நீங்கள் வேண்டுவதற்காக மத்தியானம் கொஞ்சம் ஆகாரம் சாப்பிடு

கிறேன். என்னை வற்புறுத்த வேண்டாம்" என்று ஒரே வார்த்தையில் சொல்லிச் சாய்ந்தார். அடடா! வைதேகி! அவர் உன் மீது கொண்டிருக்கும் மையலை என்னவென்று கூறுவது? அவர் அழகோ இனி என்னால் சொல்லவே சாத்தியமில்லை. உனக்கேற்ற மன்மதன் அவரா, அவருக்கேற்ற ரதி நீயா என்பது தான் விளங்கவில்லை. அவர் சாக்ஷாத் திருமால் என்று கூறலாமோ என்றால் சங்குசக்கரமில்லை.சிவபிரான்என்றுநினைக்கவோ முக்கண்ணில்லை. பிரமன் என்று எண்ணவோ ஒரே சிரத்தோடுவிளங்குகின்றார். மன்மதனே என்று சொல்வதற்கும் கையில்புஷ்பவாளி யில்லை. எவ்விதம் நினைத்தாலும் ரூபத்தில் எல்லாவற்றிற்கும் ஒற்றிருக்கின்றதேயன்றி அதற்கேற்ற அடையாளமில்லாமையால் அவர் வைதேகிக்கேற்ற ராமசந்திரனாக பூமியில்பிறந்துள்ள மானிடர்தான் என்று தீர்மானித்துக்கொண்டுவந்தேன். அவரது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு நான் உன்னிருப்பிடத்தைக் கூறாமல் வந்தது என்மேல் பாவமல்லவா? பார்த்தாயா வைதேகி! உனக்காக அவர்கள் எவ்வளவு பாடுபட்டு வருகின்றார்கள்?" என்று வெகு சந்தோஷமாகவும், சிரித்த முகத்தோடும் கூறினாள். இதைக்கேட்ட வைதேகிக்கு ஆநந்த வெள்ளத்தின் ஊற்று மனதில் சுரக்க வாரம்பித்துவிட்டது.

அவள் இன்னது பதில் சொல்வதென்பதை யறியாமல் விழிக்கிறாள். தான் எண்ணியிருந்ததற்கெல்லாம் மாறாக அவர்கள் தன் மேல் அவ்வளவு அன்புடன் செய்துவரும் காரியங்களைக் கேட்டதும் அவளது உள்ளம் ஆனந்தக் கூத்தாடியது. மற்றும் அம்மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது போன்று தன் விழிகளினின்றும் ஆநந்தக்கண்ணீர் சொரிந்தனள். சுருங்கக் கூறுமிடத்து அம்மடவரல் அளவற்ற இன்பம் நிறைந்த வனிதையாக மாறினாள். காமாக்ஷியும் வைதேகியினுடைய அப்போதைய நிலைமையை முகத்திலிருந்து அறிந்துகொண்டு, "அம்மா! என்ன நீ ஒன்றும் பேசாது வாளாவிருக்கின்றாய்? உன்னுடைய நிலைமை எனக்கு நன்றாய் விளங்கிவிட்டது. இனிமேல் என்ன செய்வதென்பதைக் கூறுவாயாக. அங்ஙனமே செய்வோம். அவர் படும்பாட்டைக் கண்டால் நாம் இனி சற்று நேரங்கூட சும்மாவிருப்பது தகாது. அவர் உன்னை நினைத்து உள்ளம் உருகித் தவிப்பதை நீ நேரிற் கண்டால்தான் தெரியும்." என்று நயமாகக் கூறினாள்.

இதைக் கேட்ட வைதேகி "அம்மணி! தாங்கள் எனக்குப் போன ஜென்மத்தில் ஈன்ற தாயாக இருந்திருக்கவேண்டும். இல்லையேல் நம்மிருவருக்கும் பரஸ்பரம் இத்துணைப்பாசம் ஏற்பட நியாயமில்லை. என்னால் தங்களுக்கு அதிக அலைச்சலும் மிதமற்ற கஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. இப்பிறவியில் உற்றவர் உண்டோ எனப் பலகாலும் எண்ணி ஏங்கித் தவித்திருந்த எனக்கு உங்கள் நட்பு

கைகண்ட பலனைக் காட்டியதன்றி ஈன்ற தாயினும் இனிய பிறிதொரு தாயையும் அளித்தது. ஆகவே தாங்கள் கிடைத்தது என் முன்னோர் செய்த புண்ணியவசத்தாலன்றி வேறல்ல. தாங்கள் என்னைக் காப்பாற்றியது போதாதென்று இந்தப் பெரிய காரியத்தையும் கண்டு ஜெயித்து வந்துவிட்டீர்களே. இனி எனக்கு யாதொரு குறைவுமில்லை. என் காதலரை என் கலிதீர ஒரு முறை பார்த்துப் பின் என் பிராணனைவிட எண்ணியிருந்தேன். அவ்வெண்ணமும் உங்கள் தயவால் நிறைவேறியது'' என்று அவள் சொல்லும்போது காமாக்ஷி பெரிதும் மனமுருகினவளாய் தன் கண்ணில் நீர்பெருக, ''என் கண்ணே! உன்னிடமும் எனக்கு அவ்விதப் பாசம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணத்தை என்னால் கண்டறிய முடியவில்லை. எனக்கு முதன் முதல் பிறந்த குழந்தை கௌரிக்குப் பெரியது. அதிருந்தால் இப்போது உன் வயதிருக்கலாம். அது திடீரென்று காணாமற் போய்விட்டது. எங்கு தேடியும் காணவில்லை. பிறகு மூன்று நாள் கழித்துக் குளத்தில் மிதந்ததாகச் சொல்லி எடுத்து அடக்கம் செய்தார்கள். அந்தக் குழந்தை இருந்தால் உன்னைப்போலவே அழகாயிருக்கும். ஏற்கெனவே துன்புற்றிருக்கும் உன்னிடம் இவ் விசனகரமான விஷயத்தைச்சொல்ல அப்போது என் மனம் துணியவில்லை. இப்போது என்னவோ திடீரென்று அந்த நினைவு வந்துவிட்டது. என்னையுமறியாது சொல்லி விட்டேன். சரி; அதிருக்கட்டும். அந்த உத்தமருக்கு என்னசொல்லப் போகின்றாய்?'' என்றாள். அதைக்கேட்ட வைதேகி ''அம்மணி! அவர் என்னை மணக்க மாட்டாரென்பது திண்ணம். ஆயினும் அவரை ஒருதரம் நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவலிருப்பதால் உங்களுக்கு மறுபடியும் கஷ்டம் கொடுக்க வேண்டிவருகிறது. நாளைக்காலையில நீங்கள் அவ்விடம் சென்று யாருமில்லாத சமயம் பார்த்து நான் எழுதிக்கொடுக்கும் கடிதத்தை அவரிடம் சேர்ப்பீர்களாகில் அது எனக்குப் பெரிய உபகாரமாகும். பிறகு நடப்பதைப்பார்ப்போம்'' என்றாள். அதுகேட்ட காமாக்ஷி மிகவும் பூரித்தவளாய் ''அடடா என்ன புத்திசாலியம்மா நீ! உன்னைப்பெற்ற புண்ணியாத்துமாக்கள் உன்னிட மிருந்து இந்த ஆநந்தத்தை யனுபவிக்கக் கொடுத்து வைக்காத பாவிகளாய்ப் போய் விட்டார்களே. எல்லாவற்றிற்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா! சரி; நீ சொல்லியபடியே செய்வோம். நீ இப்போது கொஞ்சம் ஆகாரம் சாப்பிடுகின்றாயா? கஞ்சியே வேணுமா. சாதம் சாப்பிடுவாயா? என்ன உன் தேக நிலை என்னவாயிருக்கிறது?'' என்று கேட்டாள். அதற்கு வைதேகி, அம்மணி! எனக்கு இன்னும் நன்றாக கலகலத்துப் பசி எடுக்கவில்லையாதலால் கஞ்சியே கொடுங்கள்'' என்றாள். உடனே காமாக்ஷி சென்று வைதேகிக்குக் கஞ்சி கொணர்ந்து கொடுத்துவிட்டுத் தானும் ஸ்நானம் செய்து, உண்டு பிறகு சற்று களைப்பாறப் படுத்துறங்கினாள். வைதேகி மனதில் இன்னதென்று விவரிக்க இயலாத ஓர்வித உணர்ச்சி தோன்றியது.

அது இன்பமோ, துன்பமோ, சுகத்தினுலானதோ துக்கத்தினு லானதோ தெரியவில்லை. சிறிது நேரங் கழித்து காமாக்ஷியும் எழுந் தாள். பகற் பொழுதும் கழிந்து இராவும் வந்தது. அன்று வேறு விசேஷமின்றி இராப்பொழுதும் போயது.

* * * *

காமாக்ஷி விடியுமுன்னமே எழுந்து வைதேகி யருகில் வந்து பார்க்க வைதேகி கண்ணைவிழித்த வண்ணமிருந்ததைக் கண்டு, "அம்மா! இதோ காகிதம், இறகு, மசிக்கூடு கொண்டுவந்திருக் கிறேன் சீக்கிரம் எழுது." என்ருள். உடனே வைதேகி எழுந்து உட்கா ர்ந்து வெகு அழகாயும், மணிகளைவரிசையாகக்கோத்ததுபோலவும்எழு த்துக்களை விரைவில் சுருக்கமாக எழுதி முடித்து உரையில் போட்டு காமாக்ஷியிடம் கொடுத்தாள். காமாக்ஷி அதை வெகு பிரியத்தோடு வாங்கிக்கொண்டு "கண்ணே, வைதேகி! "நான் சென்று வருகின்றேன். நீ எழுந்திருக்க முடிந்தால் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித் துக்கொண்டு உடம்பு குளித்து வேறு ஆடை அணிந்துகொள். நான் சீக்கிரமே வந்துவிடுகிறேன்." என்று கூறி வெளியில் சென் ருள். வைதேகி மெல்ல தட்டுத் தடுமாறி எழுந்து, பல் தேய்த்து, முகங் கழுவிக்கொண்டு, குளித்து, ஆடையுடுத்துக் குங்குமமிட்டுக் கொண்டு, காபி கொஞ்சம் பருகிவிட்டு காமாக்ஷியின் வரவை எதிர் பார்த்திருந்தாள். மணி 9 ஆயிற்று. அப்போது வீதியில் ஓர் மோட் டார் வண்டி வந்து நின்றது. அதையறிந்த வைதேகிக்கு சொல்லொணு மன வெழுச்சி யுண்டாயது. அப்போது காமாக்ஷியம்மாள் "இதோ இந்த அறையில்தான் இருக்கிருள். இப்படி வாருங்கள்" என்று கூறிய வண்ணம் வைதேகி படுத்திருந்த அறையின் கதவைத் திறந் தாள். அதே சமயம் வெகுகாம்பீரமாயும், அழகே வடிவாயும், ஆவலே மயமாயும், கனிந்த பார்வையோடும் ராமாம்ருதம் அந்த அறையில் பிர வேசித்தார். ஆஹா! அவரைக்கண்டதும் வைதேகி சிட்டுக்குருவி போலப் பறந்து எழுந்து ஓர் மூலையாக நின்று அவரைக் கடைக்கண் ணுல் பார்த்தவண்ணம் அடடா!

"நிரந்தர வுரோம ரேகை நீலமும் வயிறு மார்பும்
புரந்தர சாப மொத்த புருவமு நுதலும் பட்ட
மரந்தழைத்திட நகைக்கு முறுவலு மாயன் றன்பாற்
கரந்தவார முதச் சொல்லும் கந்தற்கு மில்லை யன்றே."

அரிச்சந்திர புராணம்.

இவருடைய அழகை அன்று இருந்த நம் நிலைமையில் நன்ருகக் கவ னிக்கவில்லை. இப்பொழுது பார்த்தால் இவருடைய எழிலை எடுத்து இன்ன தன்மையாக விருக்கின்றதென்றே சொல்லற்கரியாத அபூர்வ

ஜெகன்மோகன சிங்காரரூப லாவண்யத்துடனல்லவா இருக்கின்றார். ஏ கண்காள்! நீங்கள் செய்த புண்ணியமே புண்ணியம்'' என்று பலவாறாய் எண்ணிய வண்ணம் நின்றாள். அவளுடைய அப்போதைய நிலைமையை விவரிக்க இயலாததா யிருந்தது. புரண்ட ஆநந்த வெள்ளத்தில் மிதப்பவள் போல மாறினாள். அவளது மெல்லிய தேகம் புளகாங்கிதமடைந்தது. அதை வெளிப்படுத்துவது போன்று ஆனந்த பாஷ்பம் அந்தமன்மத சுந்தராங்கதனைக் கண்டதும் அவ்வனிதாரத்னம் மடவார்க்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் அணிகளால் மூடப் பெற்றவளாய் தலை கவிழ்ந்து நின்றனள். அம்மகடூஉக் குணங்கள் நான்கும் தத்தம் வேலையைச் செவ்வனே செய்யவாரம்பித்தன. அளவுமீறிய வெட்கத்தாலும், அவள் சிற்றிடையின் நுண்ணிய தன்மையாலும், அவள் தேகம் ஒருநிலையில் நிற்காது தள்ளாடித்தவித்தது. அக்காக்ஷி ஓர் மயில் தன்தோகையை விரித்து ஆடுவதுபோலவும், பல புஷ்பங்களைத்தாங்கி நிற்கும் மெல்லியதொரு பூங்கொடி காற்றினால் உந்தப்பட்டு அசைவதுபோலவும் தோன்றியது. எவ்விதம் எழில்வழிந்து விளங்குமோ அம்மாதிரி அவள் பூங்கொடிபோலும், அவளது கன்னமானது வெள்ளைரோஜா போன்றும்,செவிகள் வள்ளை என்ற ஒருவகைக்கொடியின் இலைபோன்றும், உதடுகள் பட்டு ரோஜாக்களைப்போன்றும், பல் வரிசைகள் முல்லைமலரைப்போன்றும், அவளது நாசியானது, சண்பக புஷ்பம்போன்றும், அவளது கைகளானவை தாழைமடல்களைப் போன்றும், விரல்களானவை ராமபாண புஷ்பத்தைப் போன்றும், அவள் கட்டியிருந்த சேலை பச்சையானதால் அது, அந்தப் புஷ்பச்செடிகளின் இலையைப்போன்றும், அந்தச் செடிகள் எல்லாம் கும்பலாக ஒன்றோடொன்று சுற்றித்தாவிப்படர்ந்து பூத்திருப்பது போலவும், அவளது நேத்திரமலரானது அப்புஷ்பத்திலுள்ள மதுவைத்தாவியுலாவும் வண்டுகள்போலும் தோன்றுகிறது. மற்றொரு சமயம் பார்த்தால், அந்தப் புஷ்பச்செடிகள், ஓர் தடாகத்தின் கரைமீது இருப்பது போலவும், அவளது சிகரத்தின் கேசமானது, வாவியின் கரேலென்ற தண்ணீரைப் போலவும், நெற்றியானது துல்லியமாயுள்ள கரையைப்போலவும், மற்றொரு சமயம் அவளது கண்கள் அக்குளத்தில் வசிக்கும் கெண்டை மீனைப்போலத் தோன்றுகின்றன. ஒரு சமயம் பார்த்தால் அதேவிழிகள், அக்குளத்திலுள்ள தாமரை புஷ்பத்தின் இதழ்களைப்போலவும், கண்ணின் நீலவிழிகளானவை அக்குளத்திலிருக்கும் நீலோத்பலம் போலவும், மறுசமயம் பார்த்தால் அவளது முகத்தில் சுருண்டு சுருண்டு தொங்கும் கேசமானது அவளது, மதிபோன்ற முகத்தில் பாதி மறைத்திருப்பதைப் பார்த்தால் அவளுடைய முகம் மதிபோன்றும் கேசம் மேகம் போன்றும் தோன்றி, அவை இந்த தடாகத்தில் ப்ரதிபிம்பிக்கின்றதுபோலத் தோன்றுகின்றன. மொத்தத்தில் அவ

ளைப் பார்த்தால் பூங்கொடியோ; பொன்னந்தழையோ, வாவியோ அல்லது உலகத்திற்கெல்லாம் ஆவியாய் விளங்கும் மஹாலக்ஷ்மியோஎன்று ப்ரமிக்கத்தக்கவிதமாய் அவள் ஜொலிந்த காக்ஷி தோற்றுகின்றது. "அவளுடைய அழகிய திருவுருவத்தையும் கண்ணால் காணப்போகிறோமா? அந்த பாக்யம் நமக்கும்வருமா" என்று ஆவலே வடிவாய் ஆவியைப்போக்கிக் கொண்டிருந்த! அந்த உத்தமபுருஷருக்கு அவளுடைய தரிசனம் கிடைத்துவிட்டதுதான் தாமதம். ஆஹா! அவர் மனம் அப்போதடைந்த ஆநந்தத்திற்கும் ஓரெல்லைசொல்லக்கூடுமோ? அந்த அறையில் அவர் கால்வைத்தபோதே தன் ஆவியாகிய பாவை வைதேகி எங்கிருக்கின்றாள் என்று அவருடைய விழிகள் நாலாபக்கமும் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தன. அக்கண்களுக்கு ஆகாரம் கிடைத்த மாதிரியாய் த்ரிலோகமோகநாங்கியோ, ஜெகன்மோகினித் தாயோ, அல்லது மதன மனோகரசிங்காரியோ என்று ஐயுறும்வண்ணம், அவள் கட்டிலிலிருந்து சடக்கென்று புள்ளிமான்போலத் துள்ளி எழுந்து, ஆநந்தவெள்ளத்தை யவர்மீது அள்ளி வீசிவிட்டு உள்ளம்மகிழ மெள்ள ஓர்மூலையில், நின்ற காக்ஷியைக்கண்டதும் நமது ராமாம்ருதத்திற்கு உண்டான மனவெழுச்சியும், வரம்புகடந்த களிப்பும், அவரை ஒருங்கே கப்பிக்கொண்டன. அவர் கண்கள் வைத்த குறியைமாறாமல், ஒரே நோக்காக வைதேகியை நோக்கியவாறே அந்த பார்வையினால் உண்டாகும் பரமாநந்த சுகத்தைப் பானம் செய்துகொண்டே தான் இன்னதுசெய்வது இன்னது சொல்வதென்பதை எல்லாம் மறந்து, அந்த அதிரூபலாவண்யம் நிறைந்த ஆரணங்கின் அழகிலொன்றிலேயே ஈடுபட்டு மனமுற்றும் லயித்துப்போய், அப்படியே அவர் பூரித்துப் புளகாங்கிதமடைந்து, ச்வர்ணப் பதுமைபோல நிற்கும் பஞ்சவர்ணப் பூங்கொடியாளை இமைகொட்டாது நோக்கிய வண்ணம், "ஆஹா! என்னவென்று தானியம்பக்கூடுமிவள் எழிலை. சாக்ஷாத் ஸ்ரீ மஹாலக்ஷ்மியைப்போல விளங்கும் இவளுக்கு ஒரு உபமானமும் சொல்லக்கூடுமோ.

"வில்லொக்கும் நுதலென்றாலும் வேலொக்கும் விழியென்றாலும்
பல்லொக்கும் முத்தென்றாலும் பவளத்தை யிதழென்றாலும்
சொல்லொக்கும் பொருளொவ்வாவாற் சொல்லலா முவமையுண்டோ?
நெல்லொக்கும் புல்லென்றாலும் நேருரைத்தாகவற்றே!"

கம்பராமாயணம்.

அன்று நமக்கு ஏற்பட்ட தேகபாதையினால், இவளின் எழிலை நன்றாய்கண்டு களிக்கவிடாமல் இடைஇடையே மயக்கம்வந்து உபத்திரவித்தபடியால் பார்க்கக்கூடாவாறு போயிற்று என்றாலும், என் கண்ணான கண்மணி அம்ருதவல்லியைப் போலவே எல்லாவிதத்திலுமிருக்கின்றாள் என்றி ஒரு எண்ணம்மாத்திரம் தோன்றியது. இப்போது நேரில்கண்ட பிறகல்லவா இவளுடைய எழில் பூர்ணசந்

திரபிம்பம்போன்று ப்ராகாசித்துத் தெரிகின்றது. இவளுடைய ஒவ்வொரு உறுப்பையும் உற்றுநோக்குங்கால் இவள் என் அம்ருதவல்லியைவிடச் சிறந்த எழில்வாய்ந்த கருணீமணி என்றே விளங்குகின்றது. ஆகா! இவளது பார்வையோ, அழகிய மானின்விழியைப் போன்று விழிக்கும் ஓரழகே, இந்த உலகத்தை எல்லாம் ஆட்டி வைக்கத்தக்க மாத்திரைக்கோல் போன்று நீண்டு காதளவோடியுள்ளது. ஆஹா! ப்ரம்மதேவா உன்தன் கைத்திறத்தை உன் பிதாவாகிய திருமால்கண்டு களித்து உனக்கு நல்ல பட்டமும் பரிசும் அன்புடன் அளிக்கும் பொருட்டு இந்த வனிதாரத்தினத்தை உன் முழுத்திறமையையும் காட்டி உன் கைவல்லமையை முற்றும் இவளுடைய விழியின் எழிலிலேயே ஒருங்காக உருட்டித் திரட்டி ப்ரம்மதேவனே கையாளன் என்ற பட்டத்திற்கு இந்தக் கண்ணுளின் கண்கள்தான் சிலாக்கியமாகக்கூறும் தன்மை வாய்ந்துள்ள புகழைப் பெறுக்கும் பொக்கிஷம் என்பதை யறிந்து இவளது விழியை அவ்வளவு அழகாய்ச் சிருஷ்ட்டித்துள்ளாயா! ஆஹா! இவளது விழியை உற்று நோக்குங்கால் அதில் கற்பு, பொற்பு ஆகிய இரண்டும் நன்றாய் ப்ரகாசிக்கும் காட்சியை காணக்காண என்மனம் பாகா யுருகி இவளிடம் தானாகவே ஓடுகின்றதே. ஆஹா! இவள் சாக்ஷாத் லக்ஷ்மிதானோ என்பதற்கும் லக்ஷ்மி பதும மலரின் மீதல்லவா அவதரித்து நிற்கின்றாள். இவள் பாதமோ பூமியில் படிந்திருக்கின்றது. அப்பதுமமலர் கண்களாக மாறி இருப்பதால் அதையும் சொல்வதற்கில்லை. ஒருக்கால் வாணியோ என்று எண்ணினாலும் அவள் கரத்தில் வீணை வைத்திருக்கிறாள். இவள் கரத்திலோ ஒன்றையும் காணவில்லை. அவ்வீணையை தனது குரலில் வைத்திருக்கிறாள். ஆகையால் அதையும் சொல்வதற்கில்லை. பார்வதி என்று சொல்வதற்கோ பார்வதி கையில் சர்பத்தைக் கங்கணமாக அணிந்திருக்கின்றாள்: இவள் கையிலோ அது இல்லை. அச்சர்பத்தின் சீற்றத்தை எல்லாம் சேர்த்து கற்பாக மாற்றி இவள் மனதில் அடக்கி இருக்கிறாள். ஆகையால் இதற்கும் சொல்வதற்கில்லை. ரதிதேவி என்றாலோ அவள் தன் கணவனுடைய புஷ்பவாளியைக் கரத்தில் ஏந்தி இருக்கிறாள். இவள் கரத்திலோ யாதுமில்லை. அப்புஷ்பவாளியை இவள் தனது நுதலாக அணிந்திருக்கின்றபடியால் அதற்கும் சொல்வதற்கில்லை. ஆஹா! இவள் அழகை எதற்கும் ஒப்பிட்டுக் கூற சாத்யமற்றதாகவல்லவா இருக்கின்றது என்று'' எண்ணி ஆநந்தமயமாய் மாறி ஒரே நிலையாக நிற்பதைக்கண்ட காமாக்ஷி "நாம் இனி இங்கு நிற்கலாகாதென்று உணர்ந்து பிறகு பேசிக்கொள்ளலாம்" என்று எண்ணி மெல்ல வெளியில் சென்று கதவை மூடிக்கொண்டாள். ஆஹா! தனியாக உள்ளே இருக்கும் இளவலும் இளங்குமரியும் என்னபேசுவது யார்முன்னல்பேசுவது என்பதையறியாது நின்றார்கள். அப்போது அவர்களுடைய நிலை [illegible] எவ்விதமிருந்த

182828

தென்றால் கடலையே குறித்ததாகத் தோன்றுகிறது. அதாவது கடலில் அலைகள் வெகு சந்தோஷத்தோடு கொந்தளித்துக்கொண்டு கரையை நோக்கி மோதியடித்துக் கொண்டு வேகமாக ஓடிவரும் காட்சியானது கரையை எட்டிப்பிடித்து நனைத்துவிடலாம்; கரையிலுள்ள வற்றை தொட்டுவிடலாம் என்ற நோக்கத்தோடு வருவது போலவிருக்கும் சமயம் மத்தியிலேயே சடேரென்று உடைந்து சிறிது தூரம் கூட வராமல் திரும்பி ஓடிவிடுகின்ற மாதிரியாக ராமாம்ருதத்தின்மனதில் ஆனந்த சாகரத்தில் ஆசை என்னும் வெள்ளமானதுவெகு வேகமாக எழுந்து கொந்தளித்துக் கடலைப்போலப் புரண்டு கரையாகிய வைதேகியைப் எட்டிப் பிடித்துக் கட்டியணைத்துக் கொள்வோமா என்று மோதிவரும் காலை பின்னாலே வெட்கமென்னும் எதிர் அலையால் தடுக்கப்பட்டு அடங்கி வருகின்றது. அதே அலைகள் வைதேகியினுடைய மனப்பான்மைக்கு எவ்விதமுள்ள தென்றால் அவளது மனத்தில் எண்ணறியாத விதமான எண்ணங்கள் கடலை போன்று ஒன்றன் பின்னொன்றாய் "ஐயோ! நாம் தாசி என்பதையறியாமல் இந்த மன்னர் என்மீது இவ்வித கடுமோகங் கொண்டிருக்கின்றார். அவருக்கு நம்முடைய உண்மை தெரிந்துவிட்டால் நம்மைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாரே. ஐயோ! இவ்வித அனுதையான ஜாதியிலா என்னைப் பிறப்பிக்கவேண்டும்" என்ற எண்ணங்கள் கொந்தளித்துப் புரண்டு புரண்டு மனதில் அலைமோதி அது கண்களின் வழியாக...முத்து முத்தாய் தாடைகளின் மேல் புரண்டு ஓடுவது அலைகளைப் போலவே ஒருவிதத்தில் காணப்படுகின்றது. எவன்சதாத்பர்யம் இருவர்களுடைய மனத்திலும் கடலைப் போலவே கரைகாணாத அன்பு ஏற்பட்டிருப்பதால், கடலையும் அலைகளையும் குறிக்கின்றது. வைதேகி இவ்விதமே எண்ணிய வண்ணம் தன்னைச் சற்று தேற்றிக்கொண்டு கண்ணீரை துடைத்துக்கொண்டு மெல்ல அன்னம்போல நடந்துவந்து ராமாம்ருதத்திற்கு மண்டியிட்டு வணங்கி எழுந்து தேனோ, பாகோ, திகட்டாவமுதோ, குழலோ, யாழோ, கோகிலத்வனியோ என்று ஐயுறும் வண்ணமான குரலால்மெல்லபேசத் தொடங்கி தலைகுனிந்த வண்ணம் "ஐயா! காலில் பட்டகாயம் எவ்விதமிருக்கின்றது? உடம்பு சரியான நிலைமைக்குவந்துவிட்டதா என்று அஞ்சுகம்போன்று கொஞ்சியவாறு வஞ்சியும் வினவி இந்தக் கட்டிலின்மீது உட்காருங்கள் என்று தான் முன்பு படுத்திருந்த மஞ்சத்தைக்காட்டினாள். யார் முதலில் பேசுவது என்பதை யறியாமல் ராமாம்ருதம் திகைத்துக்கொண்டே நின்றசமயம் அவர் எதிர்பாராவிதமாய் தன்னருகில் வந்து வைதேகி வணங்கி, வணக்கமாய்க் கூறியதைக் கேட்டதுதான் தாமதம். இவருக்குண்டான ஆநந்தமானது வெள்ளம்போலப் பொங்கி கரைபுரண்டு ஓடும் வண்ணமாய்விட்டது. அந்த வெள்ளத்தை அவர் தன் கண்ணினால் காட்டி அந்தக் கட்டிலின்மேல் உட்கார்ந்துகொண்டு வைதேகியைப் பார்த்தவண்

ணம் புன்சிரிப்போடு, "பாவாய்! என்கால் குணமாக விருக்கின்றது. தேகத்தில் பிணியாது மில்லையாயினும் மனத்தில்தான் பிணி ஏற்பட்டு வதைத்துக்கொண்டு வந்தது. அதுவும் இன்று காலை 7-மணிக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஆஹா! உன்னுடைய கனிந்த குணமும், பரோபகார சிந்தையும், ஜீவகாருண்யமும் ஒருங்குகூடி யமைந்துள்ள அற்புதத்திற்கு எவ்வளவு கூறினாலும், அளித்தாலும், இவ்வுலகத்தையே அதற்கு ஒப்பாகப் பரிசு கொடுத்தாலும் போதாதென்றே சொல்லவேண்டும். ஆஹா! அன்று நான் உன்னாலல்லவா பிழைத்தேன்! நீ காப்பாற்றாமலிருந்தால் நான் எக்கதியாகி இருப்பேனோ, அந்த ஈச்வரனுக்குத்தான் தெரியும். உன்னுடைய மேன்மையான குணத்தையும், நுட்பமான புத்தியையும் நான் அன்றே அறிந்துகொண்டேன்" என்று இவர் துதியாகப்பேசிக்கொண்டே வருகையில், வைதேகி இடையில் மறுத்து, "ஐயா! கேவலம் எதற்கும் உதவாத அசேதனமாகிய என்னைத் தங்களைப்போன்ற பெரிய மனிதர்கள் புகழ்வது சற்றும் ஒவ்வாததாகவல்லவா இருக்கின்றது. நானென்ன அதிகமாகச் செய்துவிட்டேன்? மானிட ஜென்மமெடுத்து பூமிக்கு பாரமாக வளர்ந்து தின்பதும், துயிலுவதுமாக விருப்பதைத் தானே நான் செய்துவருகிறேன். அதைவிட இந்தப் பாவி ஜென்மத்தில் வேறு வேலை கிடையாது. என்னவோ ஆபத்து நேர்ந்து நம் வீட்டுவாயிலில் வந்து விழுந்துவிட்டவர்களுக்கு நான் செய்தது ஓர் பெரிய உபகாரமோ. கேவலம் மனிதர்களால் செய்யக்கூடியதைத் தானே நான் செய்தேன். அவ்விதம் கூடாதவற்றைச் செய்திருந்தால், தாங்கள் புகழ்வதற்குப் பாத்திரமாக விருக்கலாம். என்னதிர்ஷ்டம் எல்லாவற்றிற்கும் ஏற்றாப்போல நான் வைத்தியரை அழைத்து வந்து பார்க்கும்போது தங்களையே காணவில்லை. எவ்விதம் மாயமாய் மறைந்து போய்விட்டீர்களோ தெரியவில்லை. அந்த அதிசயத்தைக்கேட்க ஆவலா யிருக்கிறேன். நானறியக் கூடுமோ" என்று வெகு வணக்கத்தோடு கேட்டாள்.

ராமாம்:—மாதர்கரசியே! பூவினுடைய வாசனையைப் பிறர் அறிந்தால் தெரியுமேயன்றி அந்தப் பூவிற்கே தெரியுமா. அதேபோல உன்னுடைய குணம் உனக்கே தெரியாமலிருப்பது சகஜமேதான். அதை அறிந்த பிறருக்குத்தான் அந்த மகிமை தெரியும். ஆஹா! என் பொருட்டு அன்று நீ பட்டபாடும் அடைந்ததுன்பமும் என்தேகத்தை சாம்பலாக்கும் வரையில் மறக்கக் கூடுமோ, ஒருநாளும் மறவாது. நான் உன் வீட்டு வாசலில் விழுந்த பிறகு நடந்ததை எல்லாம் நானறியமாட்டேன் என்று எண்ணவேண்டாம். அப்போது என் தேக பாதையாலும், அடிக்கடி மயக்கமேற்பட்டு வருத்தியதாகையாலும் பதில் பேச சாத்தியமில்லாமல் போய்விட்டதே யன்றி என் நினைவுமாத்திரம் நீ செய்தது, சொல்லியது, என்னை அன்பா யழைத்து உபசரித்தது,

உனது இலவம் பஞ்சுபோன்ற கரத்தால் என் பாதத்தைத் தீண்டி மருந்துவைத்துக் கட்டியது எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொண்டேதானிருந்தேன். என்னால் உனக்கு மார்வாடியாலும், போலீஸ் சேவகராலும் ஏற்பட்ட அவமானத்தையும் துன்பத்தையும் கேட்டவுடன் எனது மனம் தவித்த தவிப்பிற்கு ஓரளவும் கூற முடியுமா! அதற்குப் பதில் சொல்ல எனக்கு முடியாமல் துக்கம் தொண்டையையடைத்துக்கொண்டு என்னை ஊமைபாகவாக்கிவிட்டது. முதன் முதல் உன்னைப் பார்த்தபோதே எனக்கு பழைய நினைவு உண்டாகி வருத்தம் ஏற்பட்டது அதோடு தேக பாதையொன்று, உன் கஷ்டம் டம் ஒன்று எல்லாம் கூடி ஏககாலத்தில் ஆயிரம் வாள்கொண்டறுப்பதுபோல என் மனதில் கப்பிக்கொண்டு நான் கண்ணீர் பெருக்கிய தருணம் வீதிக் கதவைத்திறந்துகொண்டு ஒரு மனிதர் வந்து என்னை மெல்ல எழுப்பி "ஐயா! நான் செய்த அபராதத்திற்குத்தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் அதை கேட்டுக்கொள்ளும்பொட்டே இப்போது வந்தேன். வண்டிக்குச் சொந்தக்காரன் நான்தான். என்னுடைய வண்டியோட்டிவண்டியின்விசையை அதிகமாகத்திருப்பிவிட்டபடியால் அதை சமயத்தில் அடக்கமுடியாமல் போய்விட்டது. அந்த முட்டாள் தடியனின் வேலையால் தங்களுக்கு அடி பட்டுவிட்டது. அப்போதும் அந்த வண்டியை நிறுத்தமாட்டாமல் போய்விட்ட படியால் வண்டி வெகுதூரம் சென்று பிறகு அதைச் சரிப்படுத்தி நிற்கவைத்தான். மறுபடி இங்கு வண்டியோடு வருவதற்கு அந்த மடையன் பயத்தினால் வரமாட்டேனென்று சொல்லிவிட்டபடியால், நான் ஒரு குதிரைவண்டி வைத்துக்கொண்டு தங்களைப் பார்த்து விஷயத்தைத் தெரிவித்துவிட்டுப் போகவந்தேன். ஐயா! தாங்கள் என்னோடு கூட வாருங்கள். நான் உங்களை டாக்டர் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அப்படியே தங்களுடைய வீட்டு விலாசத்தைச் சொன்னால் அங்கு கொண்டுவிட்டு விடுகிறேன்" என்று கேட்டார். அப்போது எனக்கு அவ்விதம் செய்வதே உசிதம் என்றும் இவ்வளவு கஷ்டத்தை என்னால் அனுபவித்ததே போதும் என்றும், நீ இனி சுகமாகவிருக்கட்டும் என்றும் எண்ணி, நான் அவரோடுகூட போய்விட்டேன்" என்று கூறி முடிக்குமுன் வைதேகி ஆச்சரியத்தோடு "ஆ! தங்களை அந்த வண்டிக்காரரேயா வந்து அழைத்துச்சென்றார். அடடா அதை யறியாத பேதையான் தங்களைக் காணாமல் பட்ட கஷ்டத்தை நினைத்தால் இன்னமும் எனக்கு சகிக்கக் கூடவில்லை. நோயாளியாகிய தாங்கள் பிறருடைய உதவியின்றி வெளி யேற முடியாதே. யார் வந்து அழைத்துக்கொண்டு போயிருப்பார்கள்? ஒருவேளை நம்முடைய சத்துருவாகியவர்கள் என்னவாவது செய்துவிட்டார்களா என்று என் மனம் பதறிவிட்டது. நல்லது போனவர்கள் எனக்கு ஒரு அடையாளமாவது வைத்துவிட்டு, ஒரு சீட்டிலாவது எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கலாகாதா. அதுவும் இல்லை." என்று

கூறிக்கொண்டே வருகையில், ராமாம்ருதம் இடைமறுத்து "எனக்கும் இது எண்ணம் தான். ஆனால் நான் வேறு யோசனையாலும், அப்போது சந்தர்ப்பப்படாமல் போய்விட்டபடியாலும், கூடவிருந்தவர் முகமறியாத அன்னியராகையாலும், நான் பேசாது போய் விட்டேன் என்று தன்னை பாதி ராத்ரியில் கொண்டுவிட்டது முதல் அப்போது நடந்த சேதிவரையில் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறினர். அதை நம் வாசகர்கள் அறிந்திருக்கின்றபடியால், மேலே நடப்பதைக் கவனிப்போம். ஆஹா! பெண்மணி! உன்னைக் கண்டது முதல் உன்னிடத்தில் என் மனமெல்லாம் ஒரு நொடியில் பதிந்துவிட்டது. எனது மூத்த மனைவியாகவந்த அம்ருதவல்லியேதான் நமக்கு தருணத்தில் உபகாரம் புரியவந்துவிட்டாள் என்று எண்ணிவிட்டேன். பிறகு ஐயோ! அவள் இறந்துவிட்டாளே அவள் எவ்விதம் வருவாள். அவளைப்போன்ற இன்னொரு அம்ருதவல்லியை ஈசன் இங்கு நமக்கென்று தான் சிருஷ்டித்திருக்கிறன் என்று எண்ணி, அன்று எனக்கேற்பட்ட பாதையை எல்லாம் மறந்து உன்மேலேயே என்னுவியை வைத்துக்கொண்டு என்தாயும் நானும்வந்து உன்வீட்டில் இறங்கிய போது, அடடா அங்கு கேட்ட செய்தி, என்மனத்தை இன்று காலை ஏழுமணிவரையிலும் வதைத்து உயிரைக்குடித்துவிட்டது. இப்போது தான் என்னுயிர் சற்று நிலைத்தது. உன்னையார்வந்து பிடித்துக்கொண்டு சென்றார்கள்? உன்னுடைய வரலாறுயாது? அதை யான் அறிய ஆவலாய் இரவுபகலாகத் தூக்கமில்லாமலிருக்கின்றேன். தயவு செய்து கூறுவாய்." என்று வெகு அன்பாகக்கேட்டான். அதைக் கேட்ட வைதேகிக்கு மனதில் தாங்கமாட்டாத துக்கம்பொங்கி எழுந்து வதைக்கின்றது. "ஐயோ! நம்முடைய வரலாற்றைக் கேட்கின்றாரே அதைச் சொல்லாமலிருக்கவோ முடியவில்லை. சொன்னாலோ நம்முடைய ஜாதியின் தன்மை தெரிந்துவிடும். இப்போது கண்ணிற்குக்கிடைக்கும் இன்பம்கூட அற்றுவிடுமே. ஐயோ! பாவி என்ன செய்வேன்?" என்று எண்ணும்போது கண்ணில் தாரைதாரையாகக் கண்ணீர்ப் பெருக வாரம்பித்ததைக்கண்ட ராமாம்ருதம் பதறப்பதற எழுந்து வைதேகியின் அருகில்சென்று "ஆ மாதே! ஏன் கண்ணீர்விட்டுக் கலங்குகின்றாய்? நான் உன்னைக்காதலித்தேன் என்று கூறியதற்காகவா வருந்துகின்றாய். ஐயோ! காலையில் நீ அனுப்பிய அம்ருதகலசம் போன்ற லிகிதத்தைக் கண்டபின், நான் உன்கருத்தை அதிலிருந்து ஒருவாறு அறிந்துகொண்டேன். அதனால்தான் நான் தாராளமாய்க் கூறினேன். அது உன்மனதிற்கு விரோதமாக விருந்தால் நான் உடனே அதனைமாற்றி விடுகின்றேன். அவ்விதம் சொல்லவில்லை. செலவு பெற்றுக்கொள்கிறேன். ஆயினும் உனக்குப் போலீஸாரால் யாது ஆபத்துக்கள் நடந்ததென்பதை யறிந்துகொண்டு நான்போய் விடுகின்றேன்" என்று வெகு பரிதாபகரமாக மொழிந்தான். இதைக் கேட்ட வைதேகிக்கு இன்னும் துக்கம் தாங்கமாட்டாமல் வந்துவிட்

டது அவளுக்கு ஒருவிதத்திலில்லாமல் பலவிதத்திலும் துக்கமாகவே வந்துவிட்டது. தன்ஜாதியைப்பற்றி யொன்று; தான்பட்டகஷ்டங்களைப் பற்றி ஒன்று. இந்த உத்தம புருஷர் வெறுத்துக் கூறியது ஒன்று; எல்லாம்சேர்ந்து அவளை முன்னிலும் அதிகமான துக்கத்திற்கு ஆளாக்கிவிட்டன. அவள் எதைச்சொல்ல வாயெடுத்தாலும் நாத்தடுமாற்றமடைந்து குழறுகின்றது, இனி தான் சொல்லாமலிருந்தால் அவர் இவ்விடத்தை விட்டுப் போய்விடுவது திண்ணம் என்பதையுணர்ந்த வைதேகி மெல்ல தழ தழவென்று நாக்குளறியபடியே தான் அன்று வைத்தியரைசினேகிதையின் உதவியால் அழைத்துக்கொண்டு வந்தது முதல் காலையில் கடிதமனுப்பிய வரையில்நடந்ததைச் சொல்லிமுடித்தாள். இதைக்கேட்ட ராமாம்ருதத்திற்கும் துக்கம் தாங்காமல்கண்ணீர் அருவிபோலப் பெருகிற்று. அதை அடக்கிக்கொண்டு, "ஆ! நான் அன்று எல்லாபோலீஸ்டேஷன்களிலும் விசாரித்ததற்குபெண்களையே முதல் நாள் இரவில் அரெஸ்ட்டு செய்யவில்லை, என்று கூறியபொழுதே இது போலீஸாரல்ல. போலி போலீஸார் என்று நான் ஒருவாறு உணர்ந்தேன். அவ்விதமே நீ சொல்லியதிலிருந்தும் அவர்கள் யாரோ போலீஸார் மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு இவ்விதம் உன்னைச் செய்திருக்கின்றார்கள். ஐயோ! இதைக் கண்டுபிடிக்க துப்பறியும் நிபுணர் ராஜாராம் நாயுடுவை ஏற்படுத்தினேன். என்னுடைய துரதிர்ஷ்டத்தால் அவருக்கு எதிர்பாராத ஆபத்து சேர்ந்து மூளை கலங்கி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அவரைக்கொண்டு போட்டிருக்கிறார்கள். ஆஹா! அவரிருந்தால் அந்தச் சண்டாளர்களைப் பொடியாக்கி விடுவாரே. என் அதிருஷ்டம் தான் அவருக்கு இவ்வித ஆபத்து வந்து சேர்ந்துவிட்டது...உம்...எவ்விதமாகிலும் அந்த விநயகரின் அருளால் நீ தப்பி வந்துவிட்டாயே அது போதும். துஷ்டர்களுக்கு உலகத்தில் எல்லா வஸ்துவும் துஷ்டமாகவே தோன்றும். நல்லவர்களுக்கு துஷ்ட ஜெந்துக்கள், துஷ்ட வஸ்துக்களெல்லாம் எல்லாம் நல்லதாகவே இருக்கும். இதோ திருஷ்டாந்தமாய் உன்னுடைய ஜீவகாருண்ய குணத்திற்கும், பதிவிரதா லக்ஷணத்திற்கும், புத்திவிலக்ஷயணத்திற்கும், தெய்வபக்தி, பெரியோரிடத்து பிரேமை, 'பரோபகாரம் முதலிய அம்ருதம் போன்ற அருமையான குணங்களுக்கும் நீ இருப்பிடம் என்பதை அறிந்தே தான், நீ அவ்வளவு உயரத்திலிருந்து கீழே விழுந்தும் அங்கு கிணறு ஒன்று தோன்றி அடிபடாமலிருக்கும் பொருட்டு கொஞ்சம் தண்ணீரையே கொண்டு உனக்கு உதவி புரிந்தது. அதே கிணறுகள் எத்தனைப் பெயரைக் கொல்லுகின்றன. அதே கிணறு உனக்கு உபகாரமாக ஏற்படுவானேன்? அதிலிருந்தே உன்னுடைய பெருமையும் புகழும் தெரியவில்லையா? சப்பாத்திப் புதரென்று எண்ணி அங்கேயும் உயிர் துறக்க வெண்ணிய உனக்கு அது வேலியாக மாறி கீழே நிறைய கீரைப்பாத்திகளாகவும், தருணத்தில் மஹாலக்ஷ்மி போன்றகீரைக் காரியின் உதவி

யால் கீரை மெத்தையைப் போலத் தாங்கியதும், பின்னர் அவ்வம்மை உனக்கு அருந்துணையாக ஏற்பட்டுள்ளதும் உன் சிறப்பைக் காட்டவில்லையா? வனிதையே! இன்னும் உனக்கு அந்தப் பாவிகளின் பயம் வேண்டாம். போலீஸாரிடத்தில் சொல்லி நான் அதற்குத்தகுந்த ஏற்பாடு செய்கின்றேன். ஆமாம்! உன் பாட்டி தேனும்பேட்டைக்குச்சென்றிருப்பதாகத் தெரிவித்தாயே. அந்தம்மாள் பிறகு வந்திருப்பார்களல்லவா அவளை நீ கொலைசெய்ய எண்ணி அடித்துப் போட்டதாக வீண்குற்றம் சாட்டியதாயும், நீ வீணையை விற்றுவென்றும் உன் வீட்டிற்குப் பக்கத்திலிருப்பவர்கள் கூறினார்களே. அந்த சூதுவிஷயம் நானறியக் கூடுமோ" என்றார். அதைக்கேட்ட வைதேகி திடுக்கிட்டு "ஐயோ! நாம் நம் ஜாதியைத் தெரியாமலிருக்கும் பொருட்டு தந்திரமாகச் சொல்லியும் அவர் உண்மையை அறிந்துக்கொண்டாரே. இந்த சங்கடத்திற்கு என்ன செய்வேன்? நான் தாசி எனபதைக் காட்டிக்கொள்ளாமல் அன்றுமாலையிலிருந்துநடந்த சேதியை மாத்திரம் கூறுவோம்." என்று தீர்மானித்துக்கொணடு "ஐயா! என்னுடைய பிழைப்பைக் கேட்டால் நகைப்பாகவிருக்கும். முதலில் என்பாட்டியே எனக்குச் சத்துரு. அவளாலேதான் இவ்விதம் விபத்து நேர்ந்தது என்று அன்றுமாலை 4 மணி முதல் நடந்த சேதியை எல்லாம்விடாமல் கூறினாள். அதைக் கேட்ட ராமாம்ருதம் வியப்புமயமாய் மாறி "ஹா! உன் பாட்டியா உன்னை கெடுக்கவெண்ணினாள் ? இத்தகைய பதிவ்ருதா சிரோன்மணியையா அவள் துர் எண்ணங்கொண்டு இவ்விதஞ் செய்தாள். பேஷ் வெகு அழகு வெகு அழகு. கேவலம் தாசிகளாக பிறந்தவர்களேகூடக் இவ்விதம் துராக்ருதம் செய்ய எண்ணமாட்டார்களே. அங்ஙனமிருக்க கற்பில் சர்ப்பம் போன்ற உன்னையா இவ்விதம் செய்யத்துணிந்தாள்" என்று சொல்லும்போதே வைதேகியின் கண்ணில் நீர் அருவிபோலப் பாய்ந்தது. அதைபறிந்த ராமாம்ருதம் "பெண்மணி! நீ கண்ணீர்விட்டுக் கலங்காதே நெடுநேரமாய் நின்றுகொண்டே இருக்கின்றாய். நீயும் இப்படி உட்காரு. நீ இவ்விதம் சுத்தமான அபலை, மனிதாரற்ற மங்கை என்பதையறியவில்லை. உன் பாட்டிக்கு நீ செய்த தண்டனைகள் எல்லாம் வேணும். அதைப்பற்றிக் கவலையே கொள்ளவேண்டாம். நான் முன் சொல்லியது உனக்கு நினைவிருக்கலாம். என் உயிர் பிழைத்தது உன்னாலல்லவா என் உயிரை கடைசிவரையில் துறவியரைப் போல் வெறுப் படைந்திருந்த என் மனமுற்றும் ஒரு வினாடியில் உன் முகதரிசனத்தைக் கண்ட பின்னர் என் அமிருத வல்லியைவிட பதின்மடங்கு அதிகமான விஷேமுள்ள உன்னிடத்தில் சென்று லயித்துப் போய்விட்டது. என் உயிர் இந்த இடையில் கழிந்த சொல்ப தினத்திற்குள் பாதியும் வதைபட்டே போயிற்று. போன உயிரும் உன்னை மீண்டும் கண்டதனால் என்னிடமே திரும்பிவிட்டது. நான் உன்னையே காதலிக்கிறேன். உன்னையே என் ஜீவாதாரமாக எண்ணுகிறேன். அன்று என்மேல் மோட்டார் ஏறியதற்கு உடனே

என மனம் பரம சந்தோஷத்தை யடைந்தது. எதனுல் என்ருல், என்கண்மணிபோன்ற அம்ருதவல்லி சென்ற விடத்திற்கு நாமும்செல்லும் அருமையான சந்தர்ப்பம் வாய்த்துவிட்டதே என்று பெருதும் மகிழ்ந்திருந்த தருணம், என்னுயிர் போகாமல் அம்ருதவல்லியைவிட அம்ருதகலசமாகிய உன்னிடத்தில் கொண்டுவிட்டது. இந்த காரணத்தினுல்தான் பகவான் எனக்கு அந்த எண்ணத்தைக் கொடுத்தாரோ என்று நான் அப்போதே, உன்னைக் கண்டபோதே, எண்ணிவிட்டேன். என் மனத்தையும் உயிரையும் கொள்ளை கொண்ட மாற்றிலாத்தங்கமே! உன் வாய்மொழிக்கு நான் எதிர்நோக்கி நிற்கின்றேன். என்னைக் காப்பாற்றுவாயா கண்மணி?'' என்று மிகவும் பரிதாபகரமாய் கெஞ்சி இறைஞ்சி அவளுடைய முகத்தை நோக்கிய வண்ணம் கேட்டார். இதைக்கேட்டதும் இன்னதென்று சொல்லற்கறியாத விதமான இன்பமும் துன்பமும் ஒன்ருகச்சேர்ந்து அவளைக் கவ்வவாரம்பித்தன. "இவரிடம் எப்படி நான் தாசிஎன்று சொல்வது? ஐயோ ஈஸ்வரா! என்னை ஏன் படைத்து இந்த இகழ்ச்சியான குலத்தில் தள்ளவேண்டும்? தள்ளதான் தள்ளினுயே எனக்குற்ற ஆபத்தில் என்னை ஏன் காக்கவேண்டும்? எல்லாவற்றையும்விட என்மேல் அந்த சுத்தவீரருக்கு என் ஆசையை யுண்டாக்க வேண்டும்.? ஆஹா! அவருடைய பரிதாபகரமான வார்த்தையைக்கேட்க என்மனம் தவிக்கின்றதே. ஏ, அம்ருதவல்லி! நீ ஏன் இறந்து உன்பதியைக்கைவிட்டு அவரைப் பரதேசிபோல அலையவிட்டுச் செல்லவேண்டும்? உன் நாயகரின் பரிதாபகரமான நிலைமைக்கண்டு யாராலும் சகிக்கமுடியவில்லையே. ஏ மாதர்கரசியே! நற்குலத்தில் பிறந்தவளினலோ சனியே! நீ மீண்டும் அவரைக் காக்க வந்துவிடேன். நான் உனக்குப் பதிலாக எமனிடம்சென்று விடுகின்றேன். அவர் தாசி என்பதை யறியாமல் என்மேல் இவ்விதமாக கடுமோகம் கொண்டிருப்பதை நான் எவ்விதம் தீர்ப்பேன். என்னுல் இந்த தர்ம சங்கடத்தை சகிக்க முடியவில்லையே'' என்று தனக்குள் எண்ணி வருந்தினுள். இவளிடமிருந்து பதிலை எதிர்பார்த்தும் யாதும் வராமையால் மறுபடி ராமாம்ருதம் வைதேகியை நோக்கி, 'என்ன யோசிக்கின்ருய் மாதே! உன்னை நான் கேட்ட கேள்விகள் உனக்குப் பிடித்தமில்லையா. என்மனதை நான் வெளியிட்டதுபோல உன் மனத்தை நீ வெளியிட்டுச் சொல்லிவிட்டால் நான் இப்போதே என்னுடைய நிரந்தரமான விடத்திற்குச் சென்றுவிடுகின்றேன். உன் பொருட்டே இனி என் உயிர் வாழ்க்கை. நீ அதற்கு மறுத்துவிடுவதானுல் நான் இனிச் செய்வது என்னுயிரைத் துறப்பதே. அவ்விதம் உயிர் போகாவிடில் எங்காகிலும் வனத்தில் சென்று யோகியாக விடுவேனேயன்றி இங்கிருந்து நேராகத் திரும்பி இனி வீடு செல்வதில்லை. இது உண்மை. என்னுவி உன்கையிலிருக்கின்றது. என் உயிர் எமனுலகிற்கும் இங்குமாக ஒருவருஷமாக ஊசலாடிக்கொண்டிருக்

கின்றதை அன்று உன்தரிசனம் கிடைத்த மாத்திரத்தில் இனி நம்முயிருக்கு ஒருகால் வழிபிறக்குமோ என்று எண்ணினேன். இப்போது உன் வாயிலிருந்து யாதொரு பதிலையும் காணவில்லை. உன மனப்போக்கும் எனக்குத் தெரியவில்லை. என் கண்ணே என்னைக் கைவிட்டுவிடாதே.

கரமலர் தந்தேனைக் காத்தலே யன்றியித்
தருணம்நீ கைவிடல் தகுதியோ ! தருமமோ !
திருவளர் நின்மனத்தீரதைத் தேர்ந்தபின்
தெரிவை நின் குறைகளைச் சிறிதும்நான் எண்ணிலேன்.

இத்தருணம் நீதான் என்னுயிருக்கு வழி காட்டவேண்டும். என் ஒரு உயிர் போய்விடுமானால் கூட மூன்று உயிரும் நீங்கிவிடும். அந்த பாபத்திற்கெல்லாம் நீதான் காரணம். என் மனோரஞ்சிதமே! ஆசைக்கிளியே! என்னை முற்றிலும் உனக்கு அடிமையாக்கிக் கொண்டாய். என்னை அநாதையாகவிடாதே. உனக்கும் உற்றார்பெற்றார் யாருமில்லை. ஆகையால் ஒண்டியாக அலையவேண்டாம். எனக்கு நல்வாக்களித்துக் காப்பதைக்கவனிப்பாய். என் கர்பகமே. என்னுயிரானது அன்று உன்னைக்கண்டது முதல் இதுவரையில் பட்டபாட்டை விவரிக்கக்கூடுமோ? தாமரை இலைநீர்துளிபோல தத்தளித்து அகமுருகிக் கருகி பாகாயோடி என்னை உயிரற்ற வெற்றுடலாக்கிவிட்டதே யன்றி உயிருள்ள ஜீவனுக வைக்கவே இல்லை. இவ்விதமான பாதையை நான் அனுபவித்தே அறியமாட்டேன். உன்னுடைய அழகிய சந்திரபிம்பம்போன்றும், அன்றலர்ந்த தாமரையைப்போன்றுமுள்ள முகத்தினழகையும், மான்விழிபோன்ற விழியின் எழிலையும் கண்டதுதான் என் உயிர் பூராவாய் உன் கண்ணிடையே பதிந்துவிட்டது. மறுநாள் உன்னைக்காணுமல் என்மனம் பட்டபாடும், தவித்த தவிப்பும் காவில்பட்ட அடிகாயமெல்லாம் கொடியில் பறந்து என்னை சித்திரவதை செய்துகொண்டே வந்தது. அவ்வதையானது இன்று உதயமானதும் உனது திவ்யலிகிதத்தைக் கண்ட பின்னும், பிறகு இங்கு வந்ததும்

பொற்பு நிறைந்த புகழ்க்கோடி நல்லோய்
கற்பை யணிந்துள காரிகையே நின்
சொற்கனி யுண்டபின் சோக்கிய வுள்ளம்
கற்பகமலருறு களிவண் டோத்ததே.

உன்முகார விந்தத்தின் தரிசனத்தாலும் உன் இனிமையான சொல்லமுதம் உண்டபின்னும் சற்றுக்களித்து தனது சுயநிலையை அடைந்ததென்று எண்ணினேன். இப்போது உன்வாயிலிருந்து பதிலே வராமையால் என்மனம் பதைக்கின்றது. என்னசெய்வேன்? மோகனுங்கி! உன்னுடைய மோகத்திலீடுபட்ட நான் சாவது உன்னுடைய

தர்மகுணத்திற்கு ஒவ்வுமா? ஏ. மாதர்க்கணிகலமே! என்ன யோசிக்கின்றாய்? நான் சொல்வதெல்லாம் உனக்கு அசம்பாவிதமாகவிருந்தால் சொல்லிவிடு. நான் இதோ போய்விடுகின்றேன். இதற்காக நீ வருந்தவேண்டாம். சுந்தராங்கி! நான் சொல்வதற்கெல்லாம் நீ பதில் கூறாமல் இவ்விதம் கண்ணீரைப் பெருகவிடுவது தகுமா? எனக்கு அதை என்னவென்றறியக் கூடவில்லையே. உன்செங்கனி வாயைத் திறந்து ஓர் வார்த்தை செப்புதல் உனக்கரிதா· வேண்டாம்? விசனப் படவேண்டாம். என் கண்ணிருகருமணியே. உன் வாயிலிருந்து வரும் மொழியாகிய அம்ருத தாரையைப்பருகுவதற்கு நான் காத்திருக்கின்றேன். அதனை எனக்கு அளிக்கச்செய்து என்னைக்கணிக்க விடமாட்டாயா. என்மனம் அளிந்த புண்ணாய்த் துடிப்பது உனக்கு தருமமா? என்கோகிலமே! உன்பதிலையே நோக்கும் எனக்கு ஒரு திருவாய்மலர்ந்தருளி மறுவாய்மொழி ஈந்து என் பரிதாபத்தைப் போக்காயா" என்று வெகுவாய் கெஞ்சிக்கேட்டதை உற்ற வைதேகிக்கு துக்கம் தாங்கமாட்டாமல் வந்து தொண்டையை அடைத்ததை சற்றுதேற்றிக் கொண்டு பரிதாபகரமான பார்வையோடு நாத்தடுமாற குரல் நடுங்க...ஐ...யா···நா...ன்···இந்...த...ஜெ···ன்...மத்...கில்.....ம....ஹா...பாபி....யா....ய்....ப்....பி...ற...ந்···து...விட்...டே···ன். இப்பேதை ஜென்மமெடுத்து இதுபரியந்தம் எவ்வளவு துன்பப்படலாகுமோ அவ்வளவும் அனுபவித்துவிட்டேன். இனி பாக்கியில்லை. இந்த பதினாறு வயதாக நான் தங்களைத்தவிர வேறு புருஷனைக்கண்ணெடுத்தும் பார்த்ததில்லை. எனக்குத்தங்களைக் க···ண்டதும்....உ....ண்டான....மா....தி...ரி...யா...ன...நூதன உணர்ச்சி...யு....ம்···ஏற்···பட்டது....கி...டை···யாது...பாவி...யா...ன்...முத...ன்மு...தல்...உங்···களையே...கா...த...லித்...தும்....கலிதி...ரா...த....ச....ண்டா···ளியாக...வி...ருக்...கின்...றே....ன்... இந்த அ....னு...தை···யை....ப்....பா···ர்த்....து...த் தா....ங்...க...ள்... இ···வ்வித......ம் ..ஆ...சை.ப்.படு...வது த.. கு···மோ···நா...ன்.. ப····ரமஅதி····ர்....ஷ்ட···ஹீ···னை......ஏ......தற்கு...ம்....உ....தவ····த····அனி....ஷ்...டமா···ன...வஸ்....து.எ...ன்ப.....தை...த்தா...ங்...கள்...அ ..றி···யா...மல் ..இவ்...வித···ம் மோ..கம்கொண்...டிடல்...ஏ...ற்...கு...மோ··· என்று சொல்லி முடிக்குமுன் அவளையுமறியாமல் தொண்டையை அடைத்துக்கொண்டு துக்கம் வந்துவிட்டதால் அப்படியே நிறுத்திவிட்டு தன்தேகம் குலுங்க அழுதுவிட்டாள். அதைக்கண்ட ராமாம்ருதம் திடுக்கிட்டு இன்னதென்று தெரியாமல் துடிக்கின்றார்; தவிக்கின்றார். அவள்சொல்லிய வார்த்தையையும் சொன்னமாதிரியையும் கேட்டபோதே அவருக்குத் தாங்கமுடியாத வருத்தமும், வியப்பும், திகைப்பும் உண்டாகிவிட்டது. மேலும் சொல்லாமல் வைதேகி அழுவதைக்கண்டதும் அவர் முற்றிலும் ப்ரமிப்படைந்து அழும் வைதேகியைக்கண்டு பரிகாரமாக

என் அபரஞ்சித் தங்கமே! உன் கண்ணீர் பெருகுவதைக்கண்டும் நீ கூறிய வார்த்தையைக் கேட்டும் என் உயிர்நிலை கலங்கித் துடிக்கின்றதே. ஏ மாதர்க்கரசியே! உன் மனம் இவ்விதம் கலங்கித் தவிக்க வேண்டிய காரணம் எனக்குத் தெரியவில்லையே. என்ன சேதியுரைக்க மாட்டாயா? நீ சொல்வதிலிருந்து, நான் உன்னை நேசிப்பதுபோலவே நீயும் என்னை நேசிப்பதாகத் தெரிகின்றது. என்னைக் காதலித்தும் களிக்காத பாவியானேன் என்று கூறுவதுதான் எனக்கு விளங்கவில்லை. என் ரத்தினமே! உன் மனதிலுள்ள மர்மம் தான் யாது உரைக்காயோ? என்னிடம் உன் மனம் சென்றிருக்கும்போது, உனக்கு என்ன சொல்லவேண்டுமோ அதைச் சொல்வதற்கு என்ன பேதம்? என் இன்பமே! நீ கலங்காதே; உன்வாயிலிருந்து சரியான மொழிகள் வராமையால், உன்னைத் தீண்டவும் என்மனம் சற்று யோசனை செய்கின்றது. என்ன சேதி? அதனைச் சொல்வாய். என்கண்ணின் கருமணியே!" என்று கூறியதைக் கேட்ட வைதேகி சற்று தேற்றிக்கொண்டு, என்...ப்...ரா...ணப...தி...யே....ஆ....நான் என் வாயினுல் தங்களை ப்ராணபதி என்று அழைப்பதற்குக்கூட அருகமற்ற அரும்பாவியாயிற்றே. என் மதியீனத்தினுல் சொல்லிவிட்டதற்கு மன்னிக்க வேண்டுகின்றேன். ஐயா! என்மேல் தாங்கள் ஆசை கொண்டிருப்பது, இலவம்காத்த கிளிபோலவும், விழலுக்கிறைத்த நீர் போலவும், கானல் நீரைக்கண்டு ஓடும் மானைப்போலவும், தண்ணீரில் ப்ரதிபிம்பிக்கும் சந்திரனைக்கண்டு அதனைப் பிடிக்க ஓடும் சிறிய குழந்தைகளைப் போலவும், விளக்கைக்கண்டு பழமென்று எண்ணி அதன்மேல் பறந்து வருந்தும் விட்டில் பூச்சியைப் போலவும், கேவலமான மண்பொம்மையைக் கண்டு ஆசைப்படுவதைப் போலவும் இருக்கின்றதேயன்றித் தங்களுக்கு அதனுல் பலன் கிடைக்காது. நான் பாவியிலும் படுபாவியாயிற்றே. என்னைக்கண்டு தாங்கள் இச்சை கொள்ளல் தருமமா?" என்றாள்.

இதைக்கேட்ட ராமாம்ருதம், இடியோசையைக் கேட்ட நாகம் போல நடுங்கி, "ஆ......ஆ...என்காதல் கிளியே! உன் வாயிலிருந்து இத்தகைய சொல்லாவந்தது! நான் உன்னைக்கண்டு காதலுற்றதில் என்ன குற்றம்? உன்னைவிட சிரேஷ்டமான வஸ்து எனக்கு இவ்வுலகில் உண்டோ? நீயே என்குலதெய்வம், நீயே என்களிதெய்வம்; நீயே என்னுயிர்நிலை; எல்லாம் நீயாகவே நான் என்பஞ்சபூதமறிய கடவுள் சாக்ஷியாக முக்காலும் சத்தியமாக நம்பிவிட்டேன். என் அன்பின் ஆலயமே! நீ எதற்காக உன்மேல்ஆசைகொள்ளல் தகாதென்று அத்தனை உபமானங்களையும் எடுத்துக் கூறினுய்? ஐயோ! நீ அவ்விதம் சொல்லும்போது என்னை அப்படியே தூக்கு மரத்தில் ஏற்றுவது போலிருக்கின்றதே. நீ அவ்விதம் சொல்லியதற்குக் காரணம் யாது? அதை நானறியச் சொல்லவேண்டும். உன் வாயிலிருந்து இவ்வித

மொழிகள் வருமென்று நான் கனவிலும் கருதவில்லையே. நீ காலையில் எழுதிய கடிதத்தில் தேவரீருடைய திருவடித் தாமரைகளாகிய புஷ்பங்களை எனது மனதில் சதா வைத்திருக்கிறேன். ஆயினும் அவற்றை நேரில் காணும் பொருட்டு இந்த ஏழைக்கு தரிசனம் கிடைக்குமோ என்று சுருக்கமாக அதில் எவ்வளவோ அர்த்தம் அடங்கி இருக்கும்படியாக நுண்ணறிவுடன் எழுதியனுப்பிய உன் வாயிலிருந்தா இவ்விதமொழி வந்ததென்று என்னுள்ளம் தள்ளாடுகின்றது. ஏ தருணீமணி! உன்னுடைய உள் கருத்துதானென்ன? அதைக் கூறிவிட்டால் பிறகு நான் போய்விடுகிறேன்" என்று இறைஞ்சி கேட்டான்.

அதைக்கேட்ட வைதேகி "ஹா! என்னசெய்வேன்? என்னுடைய சண்டாள ஜென்மத்தை என்வாயினால் சொல்வதற்கு வெட்கமாகவிருக்கிறதே. என் மனம் பதைக்கின்றதே; என் நாத் தடுமாறுகின்றதே. ஹா! ஐயா! நான் தங்களுக்கு அருகமற்றவள் என்பதைச் சொல்லிவிட்டேன். இனி என்னால் பேச முடியவில்லையே! என்னுயிர் பறக்கின்றதே; என்தேகம் பற்றி எறிகின்றதே! என்னசெய்வேன்?" என்றாள். இதைக்கேட்ட ராமாம்ருதம் முற்றும் ப்ரமித்து வியப்பே வடிவாய் மாறி "ஏ அருங்குண பூஷணமே! நீயா எனக்குத்தகாதவள்? ஒருக்கால் உன்னுடைய சகலமான அம்சத்திற்கும் நான் தகாதவனாக விருக்கலாம். எனக்கு நீ தகாதவளென்று கூறுவது ஒப்புமா? உன் வார்த்தையிலிருந்து உன் வாழ் நாளில் ஏதோ மர்மம் இருப்பதாகத் தோன்றுகிறது. அதை நானறியும்படி சொல்வாய். கண்ணே! அதுஎத்தகையதாயிருந்தாலும் நானுன்னை நேசித்ததை மாத்திரம் மாற்றமாட்டேன். நீ பயமின்றி அதைவெளியிட்டுவிடு. என் கற்பகமே!" என்று வேண்டியதைக் கேட்ட வைதேகி "ஐயா! தாங்கள் சொல்லியதுபோலவே என் வாழ்நாளில் ஒரு ரகஸியமுள்ளது. அதை நான் எவ்விதம் கூறுவேன்? அதை யறிந்தபின்னர் தாங்கள் என்னைக் கண்டு காதலித்ததை எண்ணி வருந்திக் கலங்குவீர்கள். ஆகையாலதைக் கேட்காமலேயே நீங்கள் என்னை வெறுத்து மறந்துவிடுவது நலம்.

ராமாம்ருதம்:—என்ன! என்ன! உன் வாழ்நாளில் ரகசியமா உன்னை நான் வெறுப்பதா?

வைதேகி:—ஆமய்யா நான் கேவலம் படுபாவி.

ராமாம்ருதம்:—ஆ! என் கண்மணி! உன்னை படுபாவி என்று சொல்லாதே. உன்னை வெறுக்கும்படியும் மறக்கும்படியும் சொல்கின்றதைக் காதால் கேட்டவண்ணமிருக்கும் நானே படுபாவி. ஆ! என் மனதைக் கொள்ளைகொண்ட மாதர்கரசியே! இனி இந்த ஜென்மத்தில் உன்னை என்னுவி யுள்ளவரையில் மறக்கமாட்டேன். என்னுயிரை நான் துறப்பேனேயன்றி உன்னை வெறுக்கவும் மறக்கவும் மாட்டேன். உன்னையே வேண்டி யான் உயிர்வாழ எண்ணியது

கிட்டாவிடில், உயிரைத் துறந்து, மறு ஜென்மத்திலாவது உன்னையே மணந்து உன்னுடன் களித்து, உயிர்துறக்க வேண்டுமென்ற வரத்தைப் பெற்று வருவேன். என் இன்பத்திற்கிருப்பிடமே! உன் ரகஸியத்தை எனக்குக் கூறலாகாதா? அதில் எவ்விதமான மர்மமிருப்பினும் நானதற்குப் பரிகாரம் தேடுகின்றேன். என்னை நீ முற்றிலும் நம்புவாய் கண்ணே! நான் உன்னை எவ்விதம் காதலித்துள்ளேன் என்பதை நீயறியாயா? உனக்கு அதைச் சொல்லவும் வேண்டுமோ? நீயோ படித்த விவேகி. உனக்குத் தெரியாதது யாதுளது. என்னுருயிரே! உன் மர்மத்தை உரைத்துவிடு" என்று கெஞ்சிக் கேட்டார்.

இதைக் கேட்ட வைதேகி "ஐயா! நான் சொல்வதைக் கேட்டபின் தாங்கள் வருந்தி என்னை மறப்பதைவிட என் அபலைத்தன்மையைக் கேட்டறியாமலேயே மறந்துவிடுவது நலமாயிற்றே. தங்களுடைய பெருமைக்கும் என்னுடைய சிறுமைக்கும் களிக்கும் நரிக்குமாகவல்லவா இருக்கின்றது. அத்தகைய அபாக்யவதியான என்றன் மீது தாங்கள் கொண்டுள்ள ஆசையை மறந்துவிடுங்கள். அதற்காக உங்களை மிகவும் வேண்டுகின்றேன்" என்றாள். இதைக்கேட்ட ராமாம்ருதம் முற்றிலும் பதறிப்போய், தான் இன்னது பதிலளிப்பது என்பதை மறந்து, சற்றுநேரம் ப்ரமைகொண்டவர்போல விருந்தார். "ஆஹா! ஒரே பிடிவாதமாய் இவள் இவ்விதம் தன்னை மறக்கும்படி கூறுவதன் மர்மம் தெரியவில்லையே. ஒருக்கால் இவள் தன்னை இகழ்ச்சியாகவே சொல்லிக் கொள்வதனுல், இவளுக்குப் பணமில்லை என்ற குறை இருக்குமோ. அல்லது இவள் என்னைப்போல சுத்த சைவ முதலியார் ஜாதியில்லாமல் சற்றுகுறைந்தமட்ட ஜாதியாக விருக்குமோ, அதனுல் இவ்விதம் கூறுகின்றுளோ. இதையும் விசாரித்து விடுவோம். ஏ பெண்கள் நாயகமே! நீ உனக்கு பொருளில்லை என்று வருந்துகின்றுயா? அல்லது என்ஜாதியைப்போல அவ்வளவு உயர்ந்த ஜாதியல்லவா நீ. எனக்கு நீ தாழ்ந்த ஜாதி முதலியாராக விருந்தாலும் பாதகமில்லை. நான்

ஜாதியை நோக்கிலன் சஞ்சலங் கோண்டிலேன்
கோதிலா நின்னுடைக் குணமதே கோண்டுளேன்
பூதலந் தன்னிலோர் போன்மணி போன்றுள
மாதர் தந்திலகமே! வருந்திடேல் நீயினி.

பிரியே! இதற்காக நீ வருந்தவேண்டாம். உன்னையும் உன் புத்தியையும் பார்த்தால், நீ என்னைவிட மேலான குலத்திலுதித்தவள்போலவே தோன்றுகின்றது. ஆயினும் நீ உன்னை நொந்து இகழ்ச்சியாகக் கூறுவதைக் கேட்டதாலும், எனக்குத் தகுந்தவள் நீயல்ல என்று சொல்வதாலும் அவ்விதமிருக்குமோ என்று எண்ணுகிறேன். ஒருக்கால் அவ்வித மிருந்தாலும் அதை நான் லக்ஷியம் செய்யவில்லை. உன் குணத்தையும் கற்பணியையுமே கண்டேன்.

அதற்காக நீ பயப்படவேண்டாம். இனியாகினும் உன் வாயிலிருந்து நற்சொற்கள் வருமோ. என் கவலையும் தீருமோ" என்று கேட்டதை யுணர்ந்த வைதேகிக்கு இன்னும் தாங்கமாட்டாத துக்கம் வந்துவிட்டது. அவள் சிறிய குழந்தையைப்போல விம்மி விம்மி அழுதுகொண்டே "ஹா! நான் இன்னும் எப்படித்தான் சொல்லுவேன்? என்னசெய்குவேன்? இவர் ஒரே பிடியாகப்பேசுகின்றாரே. ஏ! பரம்பொருளே! நான்இத்தகைய ஜாதியில் பிறந்த பாவி என்பதைசொல்லுவதற்குமுன் என்னுயிர்போய்விடாதா? சண்டாளி யான் என்வாயினாலே சொல்லும் படியானவிதி வலிய வந்துவிட்டதே. என்னசெய்வேன்?" என்று எண்ணித் தன்னை சற்று தேற்றிக்கொண்டு "ஐயா! நான் பூவுலகின்கண்முப்பத்து முக்கோடி மனித ராசிக்குள் ஒருத்தியாய்ப் பிறந்தும் அந்த பிறவிக்கு ஏற்றவாறு அமைந்துள்ள விதிகளின்படி நடந்து, தாயென்றும், தந்தையென்றும், உடன்பிறந்தாரென்றும், சுற்றமென்றும் சிநேகமென்றும், கணவனென்றும், இல்லறம் என்றும் முறைகளில் வழுவாது ஒழுகும் வகைபெறாமல் எல்லாவிதத்திலும் அபாக்யவதியாகி, அபலையாக உலகில் ஜெனித்து, பூபாரமாயும் பலனற்ற ஜென்மமாயும் ஜெனித்துவிட்டேன். ஐயா! மறுமையிலாவது இச்சிறுமையுற்ற குலத்தில் உதிக்காமல் தேவதாசி என்ற பட்டத்தைப் பெறாமல், பர்த்தாவுக்கே தாசியமாய் இருக்கும் படியான அருள் என்மேல் சுறக்கும்படியாக அவனடி சிந்தித்துத் துதிசெய்து வந்து உம்மையே மணந்து, உம்மோடு வாழ்ந்து, செம்மையாய் இல்லறம் நடத்தி, என் மனத்தையும் தங்களுடைய மனத்தையும் மகிழச்செய்கிறேன். ஆசையால் இனியாகிலும் இப்பாவியின் மீதுள்ள ஆசையைக் கட்டோடு விட்டுவிடுங்கள்" என்று அவள் கண்ணீரை ஓடவிட்ட வண்ணம் தன்னிறையழிந்து ஐயோ! என்று கீழே விழுந்துவிட்டாள். அந்தோ! ஆவலே வடிவாய் வைதேகியின் வாயிலிருந்து வரும் மொழிகளுக்காக எதிர் நோக்கிநின்ற ராமாம்ருதத்திற்கு இவள் சொல்லிய தேவதாசி என்ற பதத்தைக் கேட்டதும் அவர் சர்வாங்கமும் ஒரேதுடியாகதுடித்து "ஹா! ஐயோ! இவளுடைய மர்மம் யாதோ என்றுஎண்ணினேனே. நான் கனவிலுங் கருதாதவிதமான தாசி குலத்தில் பிறந்தவளாகவா இவள் முடிந்தாள். ஐயோ! சேற்றில் செந்தாமரை பூத்தது போலவும், காட்டில் பட்டுரோஜா பூத்தது போலவும், பேயின் வயிற்றில் பெண்மான் பிறந்தது போலவும் இந்த ஆரணங்கை, கேவலமான தாசி குலத்திலா பிறப்பித்தார். அடடா! பால் நிறைந்த சமயம் பல்லாயுடைந்த மாதிரியும், வெண்ணை திரளும் சமயம் தாழியுடைந்த மாதிரியுமாய் விட்டதே என் கதி. ஐயையோ! நற்குணத்திற்கு நடுநாயகம் போன்று விளங்கும் நவமணியே! உன்னை நான் இந்த ஜாதியிலுதித்தவள் என்பதாக சற்றேனும் எண்ண முடியவில்லையே. உயர்குலத்தில் உதித்த குலமகளை விட ஆயிரம் பங்கு அதிகமான சிரேஷ்டத்தை உன்னிடம் உள்

ளங்கை நெல்லிக்கனி போலக் காணலாகுமே. அதனைக் கண்டே நான் மதிமோசம் போனேனே. உன்னைக்கண்ட எவரும் உன்னை தாசி என்று கனவில்கூட நினைக்கமாட்டார்களே. நினைக்க இடம் கொஞ்சமேனு மில்லையே. ஆஹா! வனிதாரத்னமே! கடைசியில் என் கதியிவ்விதமா முடிந்தது. ஐயோ! இனியான் என் செய்வேன். நான் இவள்மேல் கொண்டுள்ள காதலெல்லாம் கானல் நீராக வல்லவா மாறிவிட்டது. அடடா! இவள் சற்றுமுன் எடுத்துக் கூறிய எல்லா உபமானங்களும் எனக்குப் பலித்துவிட்டனவே. ஐயோ! அம்ருதவல்லி! என்னை நாலாவிதத்திலும் இவ்விதமா கெடுக்க வேண்டும்? உனக்கு விஷத்தை வைத்துக் கொன்ற பாவி நான் என்று என்மேலுள்ள அறுவறுப்பால் நீ இவ்விதம் என்னை ஏமாற்றச் செய்தாயா அல்லது நீயே இவ்விதம் வந்து என்னை முற்றும் மயக்கி மோசம் செய்தாயா! ஆஹா! இந்த வார்த்தையைச் சொல்லியதும் அவள் துக்கத்தில் விழுந்துவிட்டாளே! அடடா என்ன குணவதி! என்னமானி! என்னநல்லொழுக்கம்! என்ன கற்பின் திறமை! என்ன பெருந்தன்மையான குணம்! சீச்சீ! இவ்வித உத்பாத பிண்டத்தை இழிந்த குலத்தில் பிறப்பித்த அந்த பிரமனுக்கு மதியில்லையோ? ஐயோ! இனி நாம் இங்கு அரைக்ஷணமும் இருக்கலாகாது. இந்தக் கணமே எழுந்து வெளியில் போக வேண்டியதுதான் பாக்கி. இந்த அம்புலியைப் பிரிந்து ஆம்பல் போல வாடி வருந்தி போகும்படியான விதியையா என் தலையில் எழுதினாய்! நான் இங்கு வரும்போது அடைந்த இன்பமென்ன. இப்போது போகும்போது உண்டாகும் துன்பமென்ன! சீச்சீ. என்ன ஜென்மமெடுத்தேன். இனிமேல் இந்த உயிரை வைத்துக் கொண்டு ஐந்து நிமிஷங்கூட இருக்கலாகாது. உடனே ப்ராணத்யாகம் செய்துகொள்ள வேண்டியதுதான். ஏ அம்ருதவல்லி! உனக்குக் கொடுத்த அந்த பாஷாணத்தையே நானும் தின்று இதோ உன்னிடமேவந்துவிடுகின்றேன். என்னை வருத்தாதே" என்றுபலவாறுகளெண்ணியவண்ணம் அவ்விடத்தைவிட்டெழுந்து வைதேகியை நன்றாக உற்றுநோக்கியவாறு கண்ணில் நீர் பெருக "ஏ மானவதி! ஏ மதனசுந்தரி! ஏ அருங்குண நிதியைச் சுமந்த ஆரணங்கே! இம்மையில் நாமிருவரும் ஒருவரை யொருவர் நேசித்தும் விவாகம் செய்துகொண்டு வாழாமற் பாவியாகிவிட்டோம். மறுமையில் உன்னையே மணக்கும்படியான வரத்தை எவ்விதமேனும் பெற்று வருகிறேன். ஏ நற்குண நவமணியே! நான் இத்தனை நாழிகைப் பேசியும் உன் ஞமாவைக் கேட்க மறந்துவிட்டேனே. நீயோ மயக்கத்திலாழ்ந்திருக்கின்றாய். நானே போகவேண்டிய தருவாயில் வந்துவிட்டேன்... ஆ... நீ காலை எழுதிய கடிதத்தில் உன் கையெழுத்துள்ளதல்லவா? அதைமறுமுறை பார்த்து நினைப்பூட்டிக்கொள்கிறேன். என்று அவருடைய சட்டைப்பையில்

போட்டிருந்த கடிதத்தை எடுத்துப்பார்த்தார். அதன் அடியில் தங்கள் அன்புள்ள "வைதேகி" என்று எழுதியிருந்ததைப் படித்தார். ஆஹா! நாம் முதலில் இந்த பெயரின் பெருமையைக் கவனிக்காமல் அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஒரே ஆவலினல் விஷயத்தை அறிந்தும் அறியாமலுமாய் தாயாரிடம்கூடத் தெரிவிக்காமல் வந்துவிட்டேனே. ஆ! வைதேகி! சாக்ஷாத் வைதேகியே நித்திரை செய்வதுபோல நீ படுத்திருக்கும் காக்ஷி என் மனதைத் துளைக்கின்றதே. ஏ மாதர்கரசியே! உன்னுயிர் இருக்கின்றதோ இல்லையோ தெரியவில்லை. உன்னை எவ்விதம் தொட்டுப்பார்ப்பது? உம். உயிரிருந்தாலும் இல்லாவிட்டாலும் நமக்கென்ன நான் வந்தவழியைத் தேடிக் கொண்டு திரும்பும்படியான நிலையை யடைந்து விட்டேன். ஏ மாமணியே! மாற்றிலாத் தங்கமே! நீ தெளிந்து எழுந்திருக்குமுன் நான் போய்விடுவதே நலம். மறுபடியும் உன்னுடைய எழில்வழிந்த விழியைக்கண்டால் என்னைமீறி நான் இவ்விடத்திலேயே நின்றுவிடுவேன். ஆகையால் நான் செல்லுகிறேன்......வைதேகி...... உன்னுமாவையே குறித்து ஜபம் செய்து மறுமையில் வந்து உன்னை மணக்கின்றேன். நீ கவலைப்படாதே" என்று கூறியவண்ணம் கதவைத் திறந்துகொண்டு வாய் திறக்காமல் வெளியில் போய்விட்டார். இவர் வெளியில் சென்றதைக்கண்ட காமாக்ஷி சரேலென்று உள்ளேவந்து பார்க்க, வைதேகி மயக்கமாக விழுந்துகிடக்கின்ருள். ராமாம்ருதம் நின்றவிடத்தில் கண்ணீர் வெள்ளம்போல ஓடி இருப்பதையும் கண்ட காமாக்ஷி, திடுக்கிட்டு இதென்ன அனியாயம்! என் வைதேகி மயங்கிக்கிடக்கின்ருள்? என்று பதறிப்போய் வைதேகியின் முகத்தில் பச்சைஜலம் தெளித்து, விசிறியால் விசிறி, மயக்கத்தைத் தெளியவைத்தாள். வைதேகி கண்திறந்து பார்த்தபோது, அங்கு தன் கண்ணுளன் இல்லாது காமாக்ஷி உட்கார்ந்திருந்ததைக்கண்டதும், அவளால் தாங்கமாட்டாதகண்ணீர் அருவிபோல ஓடுகின்றது. அவள் தேகமே ஒரு நடுக்கல் எடுத்துக்கொண்டது. வாய் திறந்துபேசமாட்டாமல், ஏதோ அவளது தொண்டையை அடைக்கின்றது. அவள் கிடக்கும் பரிதாபத்தைக்கண்ட காமாக்ஷி வைதேகியை உற்றுநோக்கி, "என்னம்மா வைதேகி! ஏன் நீ இவ்விதமாய் விழுந்துவிட்டாய்? நடந்த செய்தியாது? என்ன காரணத்தினுல் உனக்கு மறுபடியும் மயக்கம் வந்துவிட்டது" என்று உருக்கமாகக் கேட்டாள். அதற்கு வைதேகி மெல்லபேசத்தொடங்கி "அம்மா! நடப்பதற்கு என்ன விருக்கின்றது. எல்லாம் நான் எண்ணியபடியும், சொல்லியபடியுந்தான் நடந்தது. ஆஹா! அந்த மஹானுபாவன் என்னையின்ன குலத்தினள் என்பதை யறியாமல் அவ்வளவு கடு மோகம் கொண்டுவிட்டார் என்பது நான் சொல்லியது உண்மையே; என்குலத்தை யறிந்ததும் அவர் நிற்கவில்லையே போய்விட்டார். நான் என்விதியை எண்ணினேன் மயக்கமாக வந்துவிட்டது. வேறென்றுமில்லை. கார

ணம் இதுதான். அம்மணி! நான் கோரிய காதலரையும் கண்டானந்தித்தாய் விட்டது. இனிமேல், என்னுயிருக்குச் செலவு கொடுக்கவேண்டிய வழியையே நான் முக்கியமாய்ச் செய்யவேண்டும். என்பாவிப்பிறப்பின் சிறுமையைக் கண்டீர்களா. ஆ! நான் குலமகளாய் உதித்திருந்தால் அவர் என்னைக் காதலித்ததற்குவிட்டுச் செல்வாரா? விலைமகளாய்ப் பிறந்ததன் பயன் என்னென்ன வேலைக்கு ஆளாக்குகின்றது பார்த்தீர்களா? அந்தக் கவிசக்ரவர்த்தி கம்பர் கூறியுள்ளது என்னவோ உண்மைதான், என்று கூறிக்கொண்டே மறுபடி மயக்கத்திலாழ்ந்தாள். காமாக்ஷி இதை எல்லாங்கேட்டு மனந் தவித்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

* * * *

முன்னொரு அதிகாரத்தின் இறுதியில், வீரபத்திரனும் இன்னும் மற்ற ஆள்களும், கிழவி தந்திரமாய்ச்சென்று, தங்களை ஏமாற்றியதை அறிந்து அவளைப் பிடிக்கவெண்ணி, மூலைக்கொருவராக வண்டிகளைப் போட்டுக்கொண்டு தேடிச் சென்றதாக சொன்னோமல்லவா? பிறகு அங்கு என்ன நடந்ததென்பதைக் கவனிப்போம். வீரபத்திரன் மோட்டாரில் ஏறி பல தெருக்களில் சுற்றியும் கிழவியின் வண்டி காணப்படவில்லை. "ஒருக்கால், அவளும் மோட்டாரிலேயே சென்றிருந்தால் இன்னேரம் அவள் குறித்த இடத்திற்குப்போய் சேர்ந்திருப்ளல்லவா. ஆகையால் நாம் அவளை வீணாகத்தெருவில் தேடி யலைய வேண்டாம். இன்னும் சென்றிருக்கும் ஆள்கள் தேடிவரட்டும். நாம் நேரே எஜமான்வீட்டை நோக்கிச்சென்று அங்கிருந்தால் அவளை அப்படிமாய் நசுக்கி எஜமானனிடம் அவளுடைய மோசத்தைச் சொல்லிவிட்டு அவளுக்குத் தக்கதண்டனையை வாங்கி வைக்கின்றேன் பார். அவளை வெளியில்விட்டால் நமது குட்டைச் சொல்லிவிடுவாள். ஆகையால் அவளை நாம் சிறையில்வைத்து சித்திரவதை செய்யவேண்டும். நீ உடனே எஜமான் வீட்டைநோக்கி வண்டியைவிடு. நேரமாயிற்று" என்றான்.

அதைக் கேட்ட ஆள் உடனே எஜமான் வீட்டை நோக்கி வண்டியை விட்டான். அரை நாழிகையில் வண்டி எஜமான் வீட்டையடைந்தது. வீரபத்திரனது மனதிலோ இன்னதென்று சொல்லறியாதவித ஆத்திரம் பொங்கி எழுந்து கொந்தளிக்கின்றது. அவனுக்கு அப்போதிருந்த நிலைமையில் கிழவியை நசுக்கிச் சார்பிழிந்து விடுவன்போல அவ்வளவு கோபம் குதிக்கின்றது. அவனுடைய கண்கள் ரத்தம்போல சிவந்துவிட்டன. அவன் வெகு வேகமாய் வண்டியை விட்டு இறங்கி உள்ளே சென்று, மூலை முடுக்குகளெல்லாம் கண்கள் கிழவியைத் தேடினான். அவன் உள்ளே சென்றதும் கூடவந்த வண்டியோட்டி, அங்குள்ள எல்லோரையும் பார்த்து "நம்மை நம்முடைய கிழவியே ஏமாற்றிவிட்டாளப்பா. இந்த வீரபத்திர ஐயா

நேற்று ரங்கோனிலிருந்து வந்தார். வரும்போதே ஒரு கைதேர்ந்த வேலையைச் செய்துவந்தார்" என்று அந்த விவரங்களை எல்லாம் சொல்லி, கடைசியில் அவள் இவ்விதம் ஏமாற்றிவிட்டாள். அந்தக் கிழப்பிணம் இங்கு வந்தாளா எங்கேயவள்? இடத்தைக் கூறுங்கள். எஜமானெங்கே?" என்று கேட்டான். அதைக்கேட்ட அங்குள்ளோரனை வரும், "ஐயா! வந்தனம். உங்களையா அவள் ஏமாற்றிவிட்டாள். தடிக்கிழவி இங்கு வரவில்லையே. ஐயோ! நமக்கென்ன இப்போது போதாத காலமாகவே இருக்கின்றது. எஜமான் நேற்று இரவுதான் ஊருக்குச்சென்றூர். அவசரமாக ஒருதந்தி வந்தது. அதனுல்போயிருக் கிறூர். அவருக்கும்இப்போதுபெரியஆபத்தாகவே இருக்கின்றது. அவர் ஓர் அழகியபெண்ணைப் பிடித்துக்கொண்டு வந்தார். அது இலவசமாகக் கஷ்டப்படாமல் கிடைத்தது. அந்தப் பெண் எவ்வளவு சுலபத்தில் கிடைத்தாளோ அப்படியே அவ்வளவுசுலபத்தில் பார்த்துக்கொண்டே இருக்கையில் ஏமாற்றிவிட்டு, உயரத்திலிருந்த ஜன்னலின் வழியாகக் குதித்துவிட்டாள். உடனே நாங்கள் எல்லோருமாகப் போய்த் தேடினேம். அவள் மாயமாய் எப்படிச் சென்றூளோ தெரியவில்லை. அது வெகு ஆச்சரியமாகவே இருக்கின்றது. அதே கவலை யாய் சிந்தைபட்டுக்கொண்டிருந்த சமயம் ராத்ரி ஒருதந்தி அவசர மாக உடனே வரும்படியாகவந்தது. அது எந்த ஊரிலிருந்தென்பதை யானறியவில்லை. அவர் ஒரே கிலியாகவிருந்த சமயம் கேட்டால் என்ன சொல்வாரோ என்று பேசாதிருந்துவிட்டோம். அவர் போகும் போது நான் போய் நாளைக்கே வந்துவிடுகிறேன். ஜாக்ரதை என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அன்றுமுதல் அந்தப் பெண்ணை எங் கெங்கோ தேடியும் அகப்படவில்லை. நாம் இதுவரையில் எந்த வேலை யையுஞ்செய்து தோற்றுப் போனேமென்பது கிடையாது. இப் போதுதான் இவ்விதம் ஏமாந்துவிட்டோம். ஆஹா! நமது அண் ணுத்தை வீரபத்திரரே காரியத்தில் ஏமாந்துவிட்டார்களென்பது வெகு ஆச்சரியமாக விருக்கின்றது. அவருடைய பெருமை என்ன. இப்போது இவ்விதம் ஏமாந்ததென்ன தெரியவில்லையே" எனறூர் கள். இதைக்கேட்ட வீரத்திரனுக்குக் கோபம் பொங்கிக் கூத் தாடுகிறுன். ஆ! நான் வீரபத்தன்மையுடைய உழைப்பாளியாக விருந்தால் இந்த இரண்டு பெண்களைத் தேடிப்பிடித்து நமது எஜமா னைப் திருப்தி செய்யாமலிருக்கப் போவதில்லை. எனக்காச்சு. அவ னுக்காச்சு. இன்று இரவுக்குள் கிழவியின் மண்டையோட்டை நான் கையில் எடுக்காவிட்டால் பாருங்கள். இங்கிருந்து குதித்தபெண் எங் தப்பக்கம்குதித்தாள்? அவளை எங்கிருந்து எப்படிப்பிடித்தீர்கள். அவள் எப்படி இருப்பாள்? முதலிய விவரத்தை எல்லாம் சொல்லுங்கள்." என்று ஆவேசத்தோடு தத்திக் குதித்துத் தாண்டவம் செய்தான். இதைக்கேட்ட அங்குள்ளவர்கள் "அண்ணு! உங்களால் ஆகாத காரிய மும் உண்டோ? அவளழகை எங்களால் சொல்லமுடியாது. அவள்

பெயர் வைதேகியாம். முறையே சட்டப்படி அரெஸ்டு செய்தமாதிரியாக இங்கு தந்திரமாய்க் கொண்டு வந்தோம். ஆயினும் அவள் தன் திறந்தைக் காட்டி தந்திரம்செய்து ஓடிவிட்டாள். வாருங்கள், இதோ அந்த இடத்தைக் காட்டுகிறோம்.'' என்று கூறி யழைத்துக்கொண்டு போனார்கள். வீரபத்திரன் வெகு அகங்காரத்தோடு பின்னல் செல்ல அவர்கள் அவனை வைதேகிவிழுந்தவிடத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள். அங்கு சென்று அந்தஜன்னலையும் அவள்குதித்த சாகசத்தையும் பார்த்தவீரபத்திரன் ஆத்திரத்தோடு ''என்ன சாகசக் கள்ளியடா அவள்! அடடா! பூனையின் வாயிலகப்பட்ட எலி மீள்வதுண்டோ? எமன் கையிலகப்பட்ட உயிர் திரும்புவதுண்டோ? அதைப்போல அந்த தந்திரசாலியானபெண்ணை மந்திரம்போட்டு இதோ பிடித்துக்கொண்டு வருகிறேன். ஐயோ! எஜமானைப்பார்த்து வெகுநாளாயிற்று பார்க்கலாம் என்று வந்தேன். வந்தும் தரிசனம் கிடைக்கவில்லை. நாளைக்கா வருவதாகச் சொல்லிச் சென்றார்? அவர் வருவதற்குள் அந்தப் பெண்ணை தேடிக்கொண்டு விடுவதே சரி. அடேய்! உங்களில் யாரேனும் இரண்டுபேர் என்னுடன் கூட வாருங்கள். சென்றதாகச் சொல்லியவர்களே வந்து இடத்தைக் காட்டுங்கள்.'' என்று ஆவேசத்தோடு புறப்பட்டான். அன்று அவள்குதித்தவுடன் வைதேகியைத்தேடிக்கொண்டுபிள்ளையார்கோயில் வழியாகச்சென்றவிடத்தை எல்லாம் அன்று தேடியவரே இன்றும் காண்பித்தார்கள். வீரபத்திரனுக்கு அப்போதிருந்த ஆவேசமும், விசனமும், தான் ஏமாற்றமடைந்ததின் ஆத்திரம் ஒரு பக்கமும் ஒருங்கே கூடி அவன் கண்கள் நெருப்புத்தணல் போல சிவந்துவிட்டன. அவர்கள் காட்டியவிடத்தை எல்லாம் பார்த்துக் கொண்டே செல்கையில் ''இந்தத் தோட்டத்தில் அவள் இனி எங்கிருக்கப்போகிறாள்? இந்த இடத்தில் வந்தும் பிரயோசனமில்லை. ஆகையால் இங்கு பக்கத்தில் எங்காகிலும் வீடுகள் உள்ளவிடத்தில்தான் நாம்போய் தேடவேண்டும். அவள் ஒருக்கால் எவர்களின் உதவியை கொண்டாவது அங்கிருந்தாலு மிருக்கலாம். இங்கெல்லாம் தேடிப் பார்ப்பது அனுவசியம். திரும்புங்கள்'' என்று சொல்லிக்கொண்டே நேராக தோட்டத்தின் வெளியை யடைந்தார்கள். அங்கு வெகு தூரம்சென்றபிறகுவீடுகள்அடர்ந்திருப்பதைப் பார்த்தார்கள். இதைக் கண்ட வீரபத்திரன் ''அப்பா! அக்கள்ளி இந்த வழியாக வந்போது ஒருக்கால் இங்குயாராவது ஆபத்தில் அவளைக் காத்திருக்கலாம்; ஆகையால்நாம்ஒவ்வொரு வீட்டையும் போய்ப்பார்ப்பதற்கு வெறுமைதடியன்போலப்போவது கஷ்டம்! ஆகையால் நாம் உடனே வீட்டிற்குச் சென்றுவிடுவோம். பிறகு நான்சொல்லுகிறபடிகேளுங்கள். நான் ஒரு பிச்சைக்காரக் கிழவிபோல வேஷம் போட்டுக்கொண்டு கையில் சின்னி பொம்மை வைத்துக்கொண்டு ஆட்டுகின்றார்களே அதை நான் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு வீட்டிற்கும் போனல் அது

அநுகூலமாயிருக்கும். நம்மை சந்தேகிக்க மாட்டார்கள். நான் பாட்டு பாடிக்கொண்டு போகிறேன். நீங்கள் வேடிக்கை பார்க்க வருபவர் போல வாருங்கள். ஒவ்வொரு வீட்டிலும் அவ்விதம் பார்த்துக் கொண்டேவருவோம். அங்கு எந்த வீட்டிலாவது அந்தப் பெண்பிள் ளையைக்கண்டால் எனக்கு ஜாடை காட்டிவிட்டு நீங்கள் சென்று விடுங்கள். நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று கூறிக்கொண்டே தமது விடுதியை அடைந்து தாங்கள் செய்துகொள்ளவேண்டியபடி வேஷத்தைப் போட்டுக்கொண்டு, கையில் சின்னி பொம்மையை நிறைய மணிகள் கட்டி எடுத்துக்கொண்டு முன் கண்ட விடத்திற்கு வந்தார்கள். வீரபத்திரன் தந்திரமாய் ஒவ்வோர் வீட்டிலும் சென்று கண்கள் நாலாபக்கமும் சுழலமிட்டவண்ணமாய் கையிலிருக்கும் பொம் மையை ஆட்டியபடி

அளதுக்காரி அடி சின்னி ஆவாரம்பூ அடி சின்னி

பச்சைமரக்கிளியே இச்சைக்கொண்டோடி

வந்தேன்மலே ஏறி போவோம் வாடி

என்று பாடிக்கொண்டு பல வீடுகளையும் கடந்து சென்றான். எங்கும் எதுவும் புலன் கிடைக்க வில்லை. அவர்களும் எத்தனையோ சந்து பொந்துக்களை எல்லாம் தேடிக்கொண்டு போனார்கள். அங்கு ஒரு வீட்டில் போய் வீரபத்திரன் பாடிக்கொண்டேஇருக்கையில் அவ னுடன்கூடவந்தவன் வேடிக்கை பார்ப்பவன்போல வந்து பார்க்கும் போது, காமாக்ஷி, ராமாம்ருதம் வெளியே சென்றதும், வைதே கியின் அறைக்குப் போவதைக் கண்டுவிட்டான். அவனுக்கு ஒரு நினைவு உண்டாயிற்று. அவன் அன்று வைதேகியைத் தேடிக்கொண்டு வரும்போது இவள் சீரைை அலம்பிக்கொண்டு பைத்தியம்போல நடித்தது சடக்கென்று நினைவுவந்ததும் அவன் வீரபத்திரனுக்கு இதை சாமர்த்தியமாய்க் கூறிவிட்டு, இந்த வீட்டிலேயே இன்னும் கொஞ்சநேரமிருக்கும்படியாய் ஜாடை செய்துவிட்டு, காமாக்ஷி நுழைந்த அறையின் ஜன்னலண்டை வீதிபக்கமாக நின்றுபார்த்தான். அப்போது வைதேகி கீழே படுத்திருந்ததையும் காமாக்ஷி துயரமே வடிவாய்மாறி இருப்பதையும்கண்ட அவன் பெரிதும் சந்தோஷமடை ந்து அங்கிருந்து ஓடிவந்து வீரபத்திரனுக்கு ஜாடையாக சேதியைத் தெரிவித்துவிட்டு வெளியில்போய் விட்டான்.

அதே சமயம்தான் காமாக்ஷி, (வைதேகி மறுபடி மயக்கமாக விழுந்து விட்டதாகச் சொன்னோமே. அதைக்கண்டு மனமுடைந்து) அவளுக்கு ஜலம்கொண்டு முகத்திலடித்துப் பாலை வாயில் வார்த்து தெளியச்செய்து கொண்டிருந்தாள். அப்போது வீரபத்திரன்,

கும்மியடி பெண்ணே கும்மியடி குலுங்கக் குலுங்க கும்மியடி
நம்மையாளும் நாதனைப்பார்த்து சலாங்கும்மியடியுங்கடி
ஆலமரத்தடியில் நீ ஆறுமாதமடி சின்னி
கோலமாய் ஆடடி சின்னி.

என்று பாடியபோது காமாக்ஷி அங்குவந்து இதென்ன தலைவேதனை சனியன் பிடித்த இழவாகவிருக்கிறதே. இங்கு இப்போது பிச்சை போட யாருமில்லை. வீட்டில் எங்கள் பெண்ணுக்கு உடம்பு சீக்காகவிருக்கின்றது. நீ வீணாய் கத்தித் தலைவேதனை செய்தால் எனக்கு கோபம் வரும்'' என்று அதட்டினாள்.

அதைக்கேட்ட வீரபத்திரன் வெகு நயமாக பேசத் தொடங்கி "அம்மணி! தர்மம் இல்லேன்னு சொல்லக்கூடாது. உங்க தயவுனாலே பொயக்கிறவ நானு. தாயே தர்மலட்சுமி! உங்க பொண்ணுக்கு நல்லா குணமாகிவிடும்; பயம் வேணாம். ரெண்டுபிச்சை இட்.டேட்டால் நான் ஓட்டம் எடுக்கிறேன்'' என்றான். இதற்குள் கௌரி கையில் அரிசி கொண்டுவந்து போட்டாள். "அம்மா! நீ நல்லா இருக்கணும். வீட்டில் குழந்தைக்கு என்னஉடம்பு? என்று தந்திரமாய்க் கேட்டுக்கொண்டே வாசற்படியைத் தாண்டி தாழ்வாரத்தில் வைதேகி படுத்திருந்த அறைக்குள் தலையை நீட்டி எட்டிப் பார்த்தான். அடடா மன்மதனுக் கேற்ற ரதிதேவிபோலப் படுத்திருந்த வைதேகியைக் கண்டதும் இவனுக்குண்டான சந்தோஷத்தைச் சொல்லமுடியவில்லை. அதை மேலுக்குக் காட்டிக்கொள்ளாமல் பேசத்தொடங்கி "அம்மணி! நல்ல வைத்தியமாய்ப்பண்ணுங்கள் தெளிந்துவிடும். பயம்வேண்டாம்'' என்று அனுதாபப்பட்டுக் கூறுவது போல சொல்லிக்கொண்டே வெளியில் போய்விட்டான். உடனே தான் நேராகப் போய்விட்டால் யாராவது சந்தேகப்படுவார்களென்ற எண்ணத்தினால் இன்னுமுள்ள பத்துவீட்டிற்குச் சென்று பிச்சை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அங்கு வழியில் காத்திருந்த கூடவந்த இருவரும் "அண்ணா! உன்னுடைய சாமார்த்தியத்தைப் போல இந்த உலகத்தில் எவருக்கும் வராது. என்ன தந்திரமாய்க் கண்டு பிடித்துவிட்டாய்? அண்ணா! அன்று அந்த பொம்பளை பைத்தியம்போல விருந்ததெல்லாம் வெறும் வெளிவேஷம் என்று நான் இப்போதுதானறிந்தேன். அவள்தான் இவளைக் காப்பாற்றி எவ்விதமோ இங்கு கொண்டுவந்துவிட்டாள். சரி எதுவோ ஒன்று திரும்ப அவள் நம்முடைய கையிலேயே அகப்பட்டுக்கொண்டாள். வேறு என்னவேண்டும்? அண்ணா! நீங்கள் அவளைப் பார்த்தீர்களா?'' என்றார்கள். அதைக் கேட்ட வீரபத்திரன் "ஆ நான் பார்க்கமலா வருவேன்? வெகு தந்திரமாய் பார்த்துவிட்டு வந்தேன். அடடா என்ன அழகு! என்ன ரூபம்! இருந்தாலும் அவளைப்போலல்லவா பெண்கள் இருக்கவேண்டும்?'' என்றான். இதைக்கேட்ட வந்தவர்கள் அண்ணாத்தே! அவளைக் கண்டுபிடித்

துவிட்டீர்கள் சரிதான். இனி எப்படி அங்கிருந்து வெளிகிளப்புவது" என்றார்கள். அதைக்கேட்ட வீரபத்திரன் "அடடா என்ன விந்தையாகப் பேசுகின்றீர்களே! வீரபத்திரனுக்கா வெளிகிளப்பத் தெரியாது? அதைப்பற்றி உனக்குக் கவலைவேண்டாம். இன்று இரவு நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றான். அதற்குள் கூடவந்தவர்கள் ஏன் அண்ணாத்தே! ராத்திரிக்குள் அவள் இன்னுமெங்காவது போய் விட்டால் என்ன செய்வது? என்றார்கள். அதற்கு வீரபத்திரன் இதற்கு ஜாக்கிரதை பண்ணாத எனக்கு வீரபத்திரன் என்று எதற்குப் பெயரிருக்கிறது. நான் இப்போது வீடுசென்று இந்த உடைகளை மாற்றிவிட்டு என்னுடைய வெறும் உடையோடு நான் இன்று இரவு வரையில் இந்தத் தெருவிலேயே சுற்றிக்கொண்டிருக்கப் போகிறேன். நீங்களும் என்னோடுகூட வாருங்கள். பிறகு நடக்கும் வேடிக்கையைப் பாருங்கள்" என்றான். உடனே இருவரும் வீடுசென்று உடைகளை மாற்றிக்கொண்டு இங்கேயே வந்துவிட்டார்கள்.

இது இங்ஙனமிருக்க வைதேகிக்கு காமாக்ஷி செய்த சிகிச்சையில் சற்று மயக்கம்தெளிந்து எழுந்தாளென்றாலும் அவள் முற்றிலும் சோர்வடைந்திருந்தாள். அவள் நாலாபக்கமும் மருள மருள விழித்துக் கொண்டே எவ்விதமான பதிலும் சொல்லாமல் வாளாவிருந்தாள். காமாக்ஷி வைதேகியைக் கண்டு "அம்மா! நீ வீணாக இவ்விதம் வருத்தப்பட்டுச் செய்வது யாது? உன் நிலைமையிலிருந்தும், சொல்லியதிலிருந்தும் அவர் உன்னை மணக்கமாட்டார் என்பதையறிந்தேன். இனிமேல் இவ்விதம் கலங்கி கண்ணீர்விட்டால் மேலேயாக வேண்டிய காரியங்களைக் கவனிக்கவேண்டாமா? நீயோ கேவலம் சிறியவள். உன் ஆயுள் காலபரியந்தம் நீ இவ்விதமே இருந்தால், காலம் கெட்டுக்கிடக்கின்றது, நீயோ எல்லா அம்சங்களிலும் மேலானவளாக இருக்கின்றாய். உன்னை ஏற்கெனவே துஷ்டர்கள் துராக்ருதம் செய்திருக்கின்றார்கள். மீண்டும் உன்னை ஒருக்கால் உபத்திரவித்தாலும் உபத்திரவிக்கலாம். ஆகையால் அதற்கெல்லாம் நீ இடம் தராமல் ஒரு புருஷனுடன் வாழ்ந்தால்தானே உன்னிடம் அவர்கள் அவ்வளவாக நெருங்க இடமில்லை. நீயோ துன்மார்க்கத்தில் எதுவும் செய்பவளல்ல. உன் ஜாதியைப்போல அனியாயமாய் நடக்கவில்லை. நீ இனிமேல் உனக்குத்தக்க யோக்யதையுடைய ஒரு பாடகரையோ, மேளக்காரரையோ, உங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களையோ பார்த்து மணம் செய்து கொள்ளாமலிருந்தால் உன் பிற்காலத்திற்குக் கஷ்டமாயிற்றே. எல்லாவற்றையும் யோசிக்கவேண்டாமா உன் பொருட்டாக நான் அவ்விதமாக கண்ணியமான மனிதர்களை விசாரித்துத் தெரிவிக்கட்டுமா? உன் அபிப்பிராயம் என்ன?" என்றாள்.

இதைக்கேட்ட வைதேகி சற்று எழுந்து உட்கார்ந்து கண்ணீர் பெருக "அம்மணி! எதற்கும் உதவாத கொடியபாவியாகிய எனக்கா

பிற்காலத்திற்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடவேண்டும்? எனக்கு இனி எவ்விதமான சௌகரியமும் வேண்டாம். அம்மணி! எப்போது நான் என் முழு மனத்தோடு ஒருவரை இச்சித்தேனோ அவரோடு என் உயிரே போய்விட்டது. இனி நான்வேறு ஒருவருக்கு இந்த ஜென்மத்தில் இக்கரத்தினாலா மாலையிடுவேன், அது ஒருநாளும் நடவாத காரியம். ஒருவரை மனதில் வரித்தபிறகு அவரேதான் என் பிராணபதி. அந்த பட்டத்திற்கேற்றவிதமானபடி நடந்துகொள்ளவோ, செய்யவோ நான் கொடுத்து வைக்காத பாவியாகவிருந்தாலும் கூட என் மனத்திற்கு அன்றே மணமாகிவிட்டது. இனிவேறு ஒருவரையும் கண்ணெடுத்தும் பாரேன். என்னை இவ்விஷயத்தில் மாத்திரம் வற்புறுத்தவேண்டாம். நான் எவ்விதமாகிலும் கூடிய சீக்கிரத்தில் உயிரைத் துறந்துவிடுவேனே யன்றி இனிமேல் என்னுயிர் நிலைத்திராதென்பதைக் கவனியுங்கள். நான் எத்தனையோ தரம் உயிர் துறக்க எண்ணினாலும் கொல்லப்படாமல் காப்பாற்றப்பட்ட சண்டாளியாகிய என்னுயிர் இனிமேல் மாத்திரம் போய்விடுமா என்று எண்ணவேண்டாம். அப்போது போகாததற்குக் காரணம் என் மனோபீஷ்டத்தை நிறைவேற்றும்பொருட்டு ஈசன் காத்தார். இப்போது அதையும் நிறைவேற்றிவிட்டார். என்றைக்கும் அவர் என்னை மணக்கமாட்டாரென்பதை நன்குணர்வேன். ஆனாலும் மற்றொரு முறை தரிசனம் செய்யவேண்டுமென்ற அவா மாத்திரமிருந்தது. அதையும் பூர்த்திசெய்துவிட்டார். இனிமேல் என்னுயிரை தன்னடியில் சேர்த்துக்கொள்வார் என்று என் மனதிற்குத் தோன்றுகின்றது. ஆகையால் நானினி இந்த வீட்டைவிட்டுப் புறப்படுகிறேன். அதற்கு எனக்கு அனுமதிக்கவேண்டும். என்னை இந்த ஆபத்தில் காத்தருளிய என்தாயே! இனிமேல் என்னால் உங்களுக்கு சிரமம் வேண்டாம். என்னை விட்டுவிடுங்கள்'' என்று வெகுவாய்க் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டாள். இதைக்கேட்ட காமாக்ஷி முற்றிலும் மனமுருகியவளாய், "ஆஹா! உன்னுடைய தீரமான புத்தியை என்னென்று கூறுவேன்? கண்மணி வைதேகி! நான் நீ கெட்டுவிடவேண்டும் என்ற எண்ணத்தோடு சொல்லவில்லையே. உன் பிற்காலத்தை நோக்கியும், உன் ஜாதியை நோக்கியும், நீ என்னவோ அவரை எண்ணினையேயன்றித் தீண்டவுமில்லையாகையாலும் இன்னொருவரை மணக்கலாகுமே என்று கூறினேன். அதுவும் உனக்குச் சம்மதமில்லை என்பதை அறிந்தேன். ஆகையால் நீ எங்கும் வெளியேறவேண்டாம். என் ஆயிசுகால பரியந்தம் நீ என் கூடவே இருந்துவிடு. உன்னைத் தனியாக அனுப்ப என்மனம் இடங்தரவில்லை. நீ என்னை அன்னிய மனுஷியாக எண்ணவேண்டாம். உனக்கு சற்றும் கவலையே வேண்டாம். உன்னிஷ்டப்படி நீயும் கௌரியும் ஒன்றாகவிருங்கள். இன்னொன்றுகூட செய்யலாம். நீயும் கௌரியும சேர்ந்து, 10 சிறுமிகளுக்கு கல்வி,

சங்கீதம், கைவேலை முதலியன கற்றுக் கொடுத்து, அதனால் நம்முடைய குடும்பத்திற்குச் சற்று ஆதாரம் ஏற்படும்படிக்கும் செய்யலாம். சரி பிறகு எப்படி நடக்கவேண்டுமோ அதைக் கவனிப்போம். நீ எழுந்து சாப்பிடவாம்மா'' என்று உருக்கமாயழைத்தாள். அதை எல்லாங் கேட்ட வைதேகி, "அம்மா! எனக்கு இப்போது பசியே இல்லை. நான் பசி எடுத்தபோது சாப்பிடுகின்றேன். நீங்கள் சென்று சாப்பிட்டு விட்டு வாருங்கள். எனக்கு மந்தமாக விருக்கின்றது. நமது யோசனைகளைப் பிறகு கவனிப்போம்'' என்று கூறிவிட்டு எழுந்து கட்டிலில் படுத்தாள். அவளது மனமாகிய நாடகமேடையில் சற்றுமுன் ராமாம்ருதத்திற்கும் தனக்கும் நேர்ந்த சம்பாஷணைகளையும், அவருடைய ரூபலாவண்யத்தையும், கனிந்த பார்வையையும், அன்பாய்க் கூறிய மொழிகளையும், அவர் தன்மேல் கொண்டுள்ள ப்ரியத்தின் முதிர்ச்சியையும் அவள் எண்ணி எண்ணி அப்போதே கண்ணெதிரே நடக்கும் நாடகம்போலக் கண்டு கொண்டே, இன்பமும் துன்பமும் இணைபிரியாமல் அனுபவித்துக்கொண்டே இருந்தாள். காமாக்ஷியும் எழுந்து வெளியே சென்று ஸ்நானபானதிகளை முடித்துக்கொண்டு வைதேகியைப் பலவந்தப்படுத்திக் கொஞ்சம் ஆகாரம் கொடுத்தாள். அன்று வேறு விசேஷமின்றிப் பகல் பொழுது போய் இரவும் வந்தது.

இரவு சுமார் எட்டுமணி இருக்கும். வீதியிலே பாராக் கொடுத்துக்கொண்டிருந்த வீரபத்திரனும் அவனோடு கூட வந்தவர்களும், இந்த வீட்டையே கவனித்துக் கொண்டிருந்தார்கள். வீரபத்திரன் கூடவந்தவர்களைக்கண்டு, "அப்பா! இனி நேரமாய்விட்டது. நீங்கள் உடனேசென்று நம்முடைய போலீஸ் உடைகளை எடுத்துக்கொண்டு மோட்டாரையும் போட்டுக்கொண்டு வாருங்கள். நான் சொல்லியிருக்கும் யோசனைப்படி செய்துவிடுவோம்'' என்றான். உடனே அவ்விருவரும்சென்று, மோட்டாரையும் உடுப்புக்களையும், எடுத்துக்கொண்டு அரைநாழிகைக்குள் வந்துவிட்டார்கள். உடனே வீரபத்திரன்தான் போலீஸ் இன்ஸ்பெக்டர்போல உடைதரித்துக் கொண்டு, மற்றவர்களை ஜெவான்கள்போல தரித்துக்கொள்ளச் சொல்லி காரில் ஏறிக்கொண்டு கிளம்பி நேராக காமாக்ஷி வீட்டையடைந்து, வீரபத்திரன் பெரிய குரலால், "அம்மா! அம்மா!'' என்று கூவினான். உடனே காமாக்ஷிவந்து பார்க்க போலீஸ் இன்ஸ்பெக்டராக விருக்கக்கண்டு, திடுக்கிட்டுக் கலங்கி நின்றாள். உடனே வீரபத்திரன் அவளைக்கண்டு, "அம்மணி! என்ன செய்வோம்? அனியாயம்! இந்த வீட்டுக்கு பக்கத்துத் தெருவிற்கு அடுத்ததெருவில் சற்றுமுன் ஒரு மோட்டார்கார் ஒரு மனிதன்மேல் ஏறிவிட்டது. அவர் உயிர் போகும் தறுவாயிலிருக்கிறார். அவரைவந்து கண்ட ஜனங்களில் சிலர், "இவர் கீரைக்கார காமாக்ஷியின் புருஷர். அனியாயக்காரப்பாவி''

என்று கூறினர்கள். அந்த மனிதர்களையே தங்களிருப்பிடத்தைக் கேட்டுக்கொண்டு வந்தோம். அந்த மனிதரின்மேல் ஏறிய மோட்டார் வண்டி யோட்டியைப் பிடித்து வைத்திருக்கிறோம். அவருக்கு உயிர் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. உங்களிடம் சொல்ல வந்தோம். தாமதமானல் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விடுவோம்'' என்று கூறினதைக்கேட்ட காமாக்ஷி முதலிய எல்லோரும் கோவென்று கதறியழுது, உருண்டு, புரண்டு, மோதியடித்துக் கொண்டு, வைதேகியைப்பார்த்து காமாக்ஷி, "அம்மா! நீ ஜாக்கிரதையாக இரு. நான்போய் வருகிறேன்'' என்று கூறியவண்ணம் அவர்களெல்லோரும் தலைவிரிகோலமாய் அழுதுகொண்டே வீட்டைவிட்டுச் சென்றுர்கள். இந்த விபரீதச் செய்தியைக்கேட்ட வைதேகி தானும் கூட வருவதாகச் சொல்லியதற்கு காமாக்ஷி "வேண்டாம். கௌரியும் நீயுமிருங்கள்.'' என்று கூறிவிட்டுப் போய்விட்டாள். வீரபத்திரன் ஒரு ஜெவானை நோக்கி, இவர்களை அந்த விடத்திற்கு அழைத்துக் கொண்டுபோ. நான் ஸ்டேஷனுக்குப் போகிறேன் என்று கூறிவிட்டு வெளியே போய்விட்டான். தனியாக விடப்பட்ட கௌரியும் வைதேகியும் பலவாறாக மோட்டாரை தூஷித்தவண்ணம் வீதிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு புலம்பிக்கொண் டிருக்கையில், சற்று நேரத்திற்கெல்லாம் வீரபத்திரன் கதவைத்தட்டினுன். திறந்துவிட வீதியில் நின்ற வீரபத்திரன் "அம்மா! அவருடைய உயிர் போய்விட்டதாம். இனிமேல் வீட்டுக்குக் கொண்டுவர முடியாதாம். ஆகையால் அவரைப் பார்க்கும்பொருட்டு உங்களிருவரையும் அழைத்துக் கொண்டுவரச் சொன்னுர்கள்'' என்று கூறியதைக் கேட்ட இருவரும், "ஐயோ! அம்மா! என்று அலறியடித்துக்கொண்டு வீதிக்கதவைப் பூட்டிக் கொண்டு நடக்கவாரம்பித்தார்கள். அதைக்கண்ட வீரபத்திரன் "நாங்களும் அங்கேதான் போகிறோம். இந்த காரிலேயே நீங்கள் ஏறிக்கொள்ளுங்கள். கொண்டுவிடுகின்றேன்'' என்று கூறியதைக் கேட்ட சிறுமிகள் இவர்கள் உண்மையான போலீஸார் என்றே எண்ணியிருந்தபடியால், வித்தியாசமின்றி வண்டியில் ஏறிவிட்டார்கள். உடனே வீரபத்திரன் தான் நினைத்த வேலை முடிந்துவிட்டதென்ற மகிழ்ச்சியோடும், ஒரு புருவைப் பிடிக்கப்போய், இரண்டு புருக்களாக வலையில் விழுந்துவிட்டதை எண்ணி அளவளாவி மகிழ்ந்த வண்ணமும் வண்டியை மான்வேக மனோவேகமாக விட்டுவிட்டான். தலைவிரி கோலமாய்ச் சென்ற காமாக்ஷி முதலியவர்களுக்கு வழி காட்டுவதுபோலச்சென்ற சேவகன் மெல்ல நழுவிவிட்டான். அவள் தனது தாங்கமாட்டாத துக்கத்தில் ஜெவானைக் கவனிக்காமல் சென்று கொண்டே இருக்கையில், அகஸ்மாத்தாக அவ்வழியே வந்த காமாக்ஷியின் புருஷன் எதிரே மறித்து, "என்ன விசேஷம்! வீட்டில் யாருக்கு என்ன விபத்து? ஏன் இவ்விதம் வீதியில் கத்தியவாறு செல்கின்றுயே'' என்று என்றும் பேசாத அவனே அன்று அவ

ளுடைய பரிதாபத்தைக் கண்டு சகியாமல் கேட்டதை உணர்ந்த காமாக்ஷி திடுக்கிட்டு வியந்து, தன் கண்ணெதிரியில் நிற்கும் கணவனைக் கண்டுகூட அவளது மனம் சமாதானமடையாமல், தான் காண்பது உருவெளித் தோற்றம் என்று எண்ணி அதிகமாகப் புலம்புவதைக் கண்ட அவன் மறுபடியும் கேட்கவாரம்பித்தான். காமாக்ஷியுடன் வந்த அவளது பிள்ளை, பெண் எல்லோரும் "அம்மா! அப்பா இதோ இருக்கிறார்; அழாதே" என்று சந்தோஷத்தோடு கூறியதைக் கேட்ட காமாக்ஷி சற்று நிதானித்துப் பார்க்க தன் கணவன் எதிரே நிற்பதைக் கண்டு பெரிதும் மகிழ்ந்து, "ஆ! எந்த சண்டாளன் இவ்விதம் தெரிவித்தான்" என்று நடந்தவரலாற்றை அவனிடம் கூறினாள். அதைக்கேட்ட அவன் என்ன, என்ன! என்னையா மோட்டாரில் அகப்பட்டு இறந்ததாகச்சொன்னார்கள். அது எந்த போலீஸார்? வா வீட்டுக்கு போவோம்." என்றுகூறி எல்லோரும் வீட்டையடைந்து பார்த்தபோது வீடு பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு முற்றும் குழம்பிய காமாக்ஷி "ஐயோ! வீட்டில் தனியாகவிட்டுச் சென்ற வைதேகி, கௌரி இருவரும் எப்படிப் போனார்கள்?" என்று கலங்கிக்கொண்டு நின்றசமயம் பக்கத்து வீட்டுக்காரி அவ்விடம் வந்து காமாக்ஷி புருஷனைக் கண்டதும் "ஐயோ! காமாக்ஷி! என்னவோ மோசம் வந்துவிட்டதே. உனக்கு முன்னால் தகவல் சொன்னவனே மறுபடியும் வந்து உன்புருஷன் இறந்துவிட்டதாகவும் நீ அவ்விரு பெண்களையும் அழைத்துவரச் சொல்லியதாகவும் கூறினான். அவன் இப்போதுதான் அவனுடைய காரிலேயே அழைத்துச்சென்றான்" என்பதைக்கேட்ட காமாக்ஷி "ஐயோ! அனியாயமே! இது யாரோ வேணுமென்று செய்திருக்கிறார்கள் போலல்லவா இருக்கிறது. வைதேகியுடன் கௌரியையும் அழைத்துக் கொண்டு போயவிட்டானே. இந்த விசித்திரவேலை யார்செய்திருப்பார்கள்? ஒருக்கால் முன்னால் வைதேகியைப்பிடித்த கள்ளர்தான் செய்திருப்பார்களோ" என்றுகதிகலங்கி ஒன்றும் தோன்றாமல் அலறியடித்துக்கொண்டு நிலத்தில் விழுந்தாள். இதைக்கண்ட எல்லோரும் வியப்பே வடிவாய் நின்று என்ன அனியாயம்! என்று கல்லாய் இருந்துவிட்டார்கள்.

---

## 15-வது அதிகாரம்.

### எண்ணெயில் விழுந்த ஈக்கள்.

பத்தாவது அதிகாரத்தின் இறுதியில் கூறியபடி மார்வாடி ஒருபஞ்சு பொம்மையை வைதேகி என்று எண்ணி ஏமாந்து, காசையுமிழந்து, மோசமும் போய்விட்டோமே என்று கதிகலங்கி வெளியில் வருவதற்கு இடமில்லாமல் கூண்டிலடைபட்ட பெருச்சாளிபோல துடிக்கிறான். அவனுக்கு இன்னதென்று சொல்லற்கறியாத விதமான ஆத்திரமும், கோபமும், துக்கமும், வெட்கமும் ஒருங்கேகூடி வதைக்கின்றன.

அவன்தன் ஜென்மத்தில் ஒருவருக்கும் தன் கையினுல் கால்காசுகொடுத்ததில்லே. அவன் காசென்றுல் வெகு சட்டு. அத்தகைய மனிதன் தான் வைதேகியின்மேல் கொண்ட மோகத்தினுல் நிலேகலங்கி, உணர்வுசோர்ந்து, லக்ஷக்கணக்கில் பணத்தை வாரி இரைத்துவிட்டு கடைசியில் தன் இஷ்டம் நிறைவேருமல் துரதிருஷ்டனுய் கஷ்டமடைந்து தனி அறையில் அகப்பட்டுக் கஷ்டமனுபவிக்கும் நிலேமையை எண்ண எண்ண அவன் மனம் கட்டிலடங்காமல் தத்தளிக்கின்றது. அவனுடைய அப்போதிய நிலேமை முன்பு தான் எவ்வளவு ப்ரீதி அந்த வைதேகி மீது வைத்திருந்தாரே அதையெல்லாம் பறக்கும்படியாகச் செய்துவிட்டது. அவன் இன்னதென்று சொல்லற்கிபலா விதமான மனக் கொதிப்பை யடைந்தான். அடடா! என்ன பேதைமை! கேவலம் ஒரு பெண்பால் நம்மை இவ்விதம் ஏமாற்றியதையறிய என் நெஞ்சம் துடிக்கின்றதே. கோடி ஐச்வர்யக்கோமானுகிய நாம் ஒரு கேவலம் பெண்பாவையால் ஏமாந்துவிட்டோம் என்றுல் அதைவிட உலகில் ஏதேனும் வேண்டுமா என்று நினேக்கின்றுன். அவன் உள்ளம் துள்ளுகின்றது. அவன் அந்தக் கதவை தடதடவென்று பலமாகத்தட்டிப் பார்த்தான். கதவு உடைந்துவிடும்போல விருக்கின்றதேயன்றி அவனுக்கு வழி ஏற்படவே இல்லே. அவன் தன்பலம் கொண்டமட்டும் தட்டிப் பார்த்துவிட்டு கைசலித்து விட்டபடியால் விட்டுவிட்டான். தான் எவ்விதம் வெளியில் போவது, இந்த எதிர்பாராத கஷ்டநஷ்டத்திற்கு என்னசெய்வது? அடடா! அந்தப் பெண்ணின் சாகசமே சாகஸம். நம்மை என்ன குலுக்கி, மயக்கி ஏமாற்றிவிட்டுப் போய் விட்டாள்? அடடா! அவள் நம்முடைய ஜாதிக்கேற்றவாறு, தலேமுதல் கால்வரையில் மூடி முக்காடிட்டு மார்வாடி பெண்ணேப் போலவே முகத்தை மூடிக்கொண்டுவந்து நமக்கு இன்னுமென்று காட்டும்பொருட்டு கொஞ்சம் முகத்தைத் திறந்துகாட்டிய வண்ணம் உள்ளேவந்து அவள் பேசிய மாதிரியையும், மரியாதையாக நடந்துகொண்ட மாதிரியையும், அவள் வெகு நாணயக்காரிபோல முகத்துணியை விலக்காமலேயே நின்று பேசி நம்மை ஏய்த்துவிட்டுச்சென்ற அந்தச் சிறுமிக்கு எவ்வளவு மனத்துணிபு இருந்தால் அவ்விதம் செய்வாள்? அடடா! அந்தப் பெண்ணிற்கு மண்டை கொழுப்பும் தைரியமும் இல்லாமலா தன்னுடைய கைவளேயல்கள் போனுலும்போகின்றன என்று சட்டை செய்யாமல் போய்விட்டு நம்மை ஏமாற்றித் தன் ஆத்திரத்தைத் தீர்த்து, என்னே அவமானமடையும்படியான நிலேமைக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டாள். ஆஹா, ஏ பெண்ணே! உன்னே நான் இன்னும் விட்டுவிட்டேனென்று எண்ணுதே. உன்னேக் கண்டுபிடித்துப் பழிக்குப்பழிவாங்காமல். விடுகின்றதில்லே. உன்னேக்கண்டு காமுற்றதின் பலனல்லவா இது? சீச்சீ, இனி உலகத்தில் பெண்ணுசையே கொள்ளலாகாது. பெண்களின்மீது ஆசைகொள்ளல் கேவலம் பேதைமையேயன்றி வேறல்ல. காமத்தினுலுற்ற கேடல்லவா இது!

ஐயோ! என்வீட்டில் என் அன்னையாருக்கு நான் என்சிநேகிதன் வீட்டுக் கலியாணத்திற்குப்போய் வருவதாகச் சொல்லி வந்தேனே. அவர்கள் என் சிநேகிதர் வீடுகளில் விசாரித்து அவர்கள் நான் அங்கு வரவேயில்லை என்று சொல்லிவிட்டால் பிறகு என்ன செய்வார்கள் பாவம். அநியாயமாய் ஏமாந்துபோய் விட்டோமே. ரூபாய் ஒன்று இரண்டா, லக்ஷக்கணக்கிலல்லவா ஏமாந்து விட்டோம். என்னைப்போல செட்டு மனிதன் இல்லை என்ற பெயரை எடுத்ததுபோய், ஒரேமுட்டாய்க் கொட்டிவிட்டேனே. ஐயோ! நான் இந்த அறையை விட்டு எவ்விதம் வெளியில் போவது? எத்தனைநாழி இடித்தாலும் ஒன்றும் தகவலையே காணவில்லையே. அந்தக் கிழட்டுப்பிணமும் நம்மை ஏமாற்றித் தந்திரமாய்ப்பேசி ஏய்த்து நம்மை மயக்கி உள்ளே அனுப்பியதை நினைக்க எனக்கு ஆறவில்லையே. இந்த அறைக்கு கதவையும் ஜன்னல்களையும் தவிர வேறுவழியே காணவில்லையே. நாம் எப்படி வெளிக்கிளம்புவது?" என்று பலவாறும் யோசனை செய்துகொண்டே நெடுநேரம் வரையில் அங்குமிங்கும் திரிந்துகொண்டே தன்னால் இயன்றமட்டும் எவ்வித ப்ரயாசைப்பட்டுப் பார்த்தும், அவனுக்கு ஒருவித வழியும் கிடைக்கவில்லை. அவன் அவ்விதமே நெடுநேரம் அலைந்து திரிந்து கடைசியில் அவன் அப்படியே சோர்வடைந்து கீழே விழுந்துவிட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அவனையுமறியாமல் மெய்மறந்து துயிலில் ஆழ்ந்துவிட்டான்.

நல்ல நடுநிசி சமயத்திற்கு மேலாகிவிட்டது. அப்போது அந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு இரண்டு ஆள்கள் உள்ளே நுழைந்து மார்வாடியின் உடம்பிலிருந்த நகைகளைக் கழட்டிக்கொண்டு ஒன்றுவிடாமல் திருவரங்க சுத்தி செய்துவிட்டு, பிறகு மார்வாடியின் சுவாசத்தில் ஓர் மருந்தை முகரவைத்து, அவனையும் தூக்கிக்கொண்டு வெளியில் சென்று கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

* * * * *

பொழுது விடிந்துவிட்டது. மணி சரியாக ஐந்து அடித்தவுடனே மார்வாடியின் மோட்டார் வண்டிக்காரன் வண்டியோடு வீதியில் வந்து நின்று ஹார்ன் கொடுத்தான். ஏதும் தகவல் தெரியவில்லை. உடனே இறங்கி வீதிக் கதவண்டை போய்ப் பார்த்தான். கதவு பூட்டியிருந்ததைக் கண்டு திடுக்கிட்டு ஒருவேளை நாம் வண்டி கொண்டு வருவதற்கு நேரமாகிவிட்டதென்று கோபித்து நடந்து சென்றுவிட்டாரோ என்று எண்ணி நேரே வீட்டில் வந்து ஜாடையாகப் பார்த்தான். அங்கு காணவில்லை. உடனே இது ரகஸியமான சமாசாரமாயிற்றே. இதை யாரிடம் கேட்பது? ஒருவரிடமும் சொல்லாதே என்று நமக்கு எஜமான் உத்திரவளித்திருக்கிறாரே. அப்படி

யிருக்க நாம் எப்படி இங்கு வந்தாரா என்று கேட்பது என்று யோசித்துக்கொண்டே ஒருக்கால் பட்டணத்துக் கடைக்குப் போயிருப்பாரோ என்று எண்ணி அங்கு நேரே சென்று பார்த்தான். அங்கும் வந்ததாகத் தெரியவில்லை. இவன் பாடு உதறல் எடுத்துக்கொண்டது. என்ன செய்வது? இவர் இங்கு வந்தாரா என்று கேட்டுச் சேதியை உரைத்துவிடலாமா என்று எண்ணினன். மறுபடியும் எஜமான் கோபிப்பாரோ என்று பயந்தான். இவ்விதமே வெகுநேரம் குழம்பியிருந்தபடியே திருவல்லிக்கேணியிலுள்ள வீட்டிற்கே வந்தான். அப்போது அங்கு அந்த வீட்டுக்காரர்கள் இன்னும் மார்வாடி வரவில்லையே என்று எதிர்பார்த்திருந்த சமயம் மோட்டார் வந்துநின்றதும் அவர்கள் மார்வாடிதான் வந்துவிட்டான் என்று எண்ணினர்கள். உடனே ஆவலாய் வரும் வழியை நோக்கியவுடன் ஆசாமி வராமலிருந்ததைக் கண்டு வீதிப்புறம் சென்று வண்டியோட்டியை எஜமான் எங்கே என்று கேட்க, அவன் சொல்வதற்குப் பயந்து பிறகு இந்த சமயம் சொல்லாவிட்டால் ஆபத்து. அவரையோ அங்கு காணவில்லை. கதவையும் பூட்டி இருக்கின்றது. கடையிலும் காணவில்லை. இங்கும் வரவில்லை. நேற்று அவர் கையிலிருந்து லக்ஷக்கணக்கில் நகைகளை வாரி இரைத்தது நமக்குத் தெரிந்த விஷயம். அவர் உடம்பிலும் கணக்கில்லாத நகைகளைப் போட்டுகொண்டு போயிருக்கிறார். இந்த சமயம் நாம் சொல்லாமலிருந்தால் பிறகு அது ஒருக்கால் எதாவது கெடுதலாக நேர்ந்திருந்தால் நம்மீது சந்தேகம் கொண்டு கோபிப்பார்கள் என்று எண்ணி அவர்கள் கேட்டதற்கு, நடந்ததை எல்லாம் கூறி, "நான் காலை ஐந்து மணிக்கே வந்து பார்த்தேன் காணவில்லை. பிறகு நம்முடைய கடையிலும் பார்த்தேன். அங்கேயும் காணவில்லை. அவர் ராத்திரி சென்றிருந்த வீட்டின் கதவைப்பூட்டி இருக்கின்றது. நாம் இந்த சமயம் வெறுமையிருக்கலாகாதென்று சொல்லிவிட்டேன்" என்றான். இதைக்கேட்ட அவர்கள் திடுக்கிட்டுப் பதறிப்போய், "ஐயோ! இதென்ன அனியாயம்! நம்மை யறியாமல் இவ்வித மோசத்தில் இறங்கிவிட்டானே. இப்போது இந்த அக்ரமத்தை எங்கு சொல்லியழுவது? ஐயோ! லக்ஷக்கணக்கில் ரூபாயைவாரி இரைத்து விட்டானே என்ன செய்வது?" என்று கலங்கித் தவித்தவண்ணம், எல்லோரும்கூடி அந்தக் காரிலேயே உட்கார்ந்து ராத்திரி மார்வாடி வந்து இறங்கிய வைதேகியின் வீட்டையடைந்து பார்க்க கதவு பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு, கலங்கி அந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டுக்காரர்களைக் கண்டு "ஐயா! இந்த வீட்டு மனிதர்கள் எங்கே தெரியுமா? இந்தக்கதவை யார் பூட்டியிருக்கிறார்கள்? தெரியுமானால் தயவுசெய்து சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் இந்த வீட்டிலிருப்பவர்களை எங்களுக்கு அதிகமாக தெரியாது. ஆயினும் அவர்களை முந்தாநாள் இரவில் போலீஸார் வந்து எதோ குற்றத்திற்காக

அரெஸ்டு செய்து கொண்டு போனார்கள். பிறகு அந்தப் போலீஸ்கா ரர்களே கதவைப் பூட்டிக்கொண்டு போனார்கள். எங்களுக்கு அதற்கு மேல் நடந்தது தெரியாது. நாங்கள் நேற்று இங்கில்லை. வெளி யில் போயிருந்தோம். நேற்று நடந்த சேதி தெரியாது" என்றார்கள். இதைக்கேட்ட அவர்கள் முற்றிலும் குழம்பிப்போய், "இதென்ன விபரீதம்! இந்த வீட்டுக்காரர்களை போலீஸார் பிடித்திருக்கிறார்களாம். நேற்று வந்தபெண்ணை இந்தவீட்டுப் பெண் என்று சொன்னானே வண்டியோட்டி. இதென்ன அனியாயம்" என்று ப்ரமித்து அவர்கள் ஒன்றும தோன்றாமல் திகைத்து நின்று, சற்றுநேரங் கழித்ததும் அவர்கள் இதைப் போலீஸாரிடமே தெரிவித்து இந்த அனியாயத் தைச் சொல்லிவிட்டு கதவைத் திறக்கச்செய்வோம் என்று எண்ணி நேராக போலீஸ் ஸ்டேஷனை யடைந்து முதல் இரவில் மார்வாடிப் பெண்வந்தது முதல் இன்று கதவை பூட்டியிருக்கிற வரையில் வண்டி யோட்டி போலீஸாரிடம் தெரிவித்தான். அதற்குமுன் வைதேகி மார்வாடியிடம் பணம்வாங்க வந்தது, அவளைக்கண்டு மார்வாடி காமுற் றது முதல் எல்லாம் தனக்குத் தெரிந்ததைக் கூறினான். இதைக்கேட்ட போலீஸார் வியப்பும் திகைப்புமாக மாறி, "இதென்ன அனியாயம்! யாரோ நமக்குத் தெரியாமல் இந்தவூரில் நம்மைப்போலவே போலீஸார் மாதிரியாக வந்து பல வேலைகள் செய்கின்றார்கள் போலவிருக்கின்றது. நேற்று காலையில் அதே வீட்டிலிருந்த பெண்ணைக் கைது செய்துவிட்ட தாக யாரோ எல்லா ஸ்டேஷன்களிலும் விசாரித்துக்கொண்டு போனார் கள். கடைசியில் எங்கும் இல்லையென்று தெரிகின்றது. இது என்ன வோ மாயமாக மனிதர்கள் நடுவில் பலமாதிரியாக வேஷம் பூண்டு ஜனங்களை ஏமாற்றுகின்றார்கள் போன்று இருக்கின்றது. இதைக்கவ னிக்கவேண்டும்" என்று எண்ணியவர்களாய் உடனே அவர்கள் வைதே கியின் வீட்டை நோக்கி இன்ஸ்பெக்டர், சார்ஜெண்டு முதலிய எல் லாரும் வந்து பார்க்க கதவுபூட்டியிருப்பதைக்கண்டு அதை உடைத் துக்கொண்டு உள்ளே சென்றார்கள். வீடுமுற்றும் காலிசெய்த மாதிரி யாகவிருந்ததே யன்றி அதில் எவ்வித சாமான்களும் காணவில்லை. அந்த வீடே சிறிய வீடாகையால் அதில் உள்ள எல்லா அறைகளை யும் திறந்தே வைத்திருந்தது. அந்த வீட்டில் எங்கும் மார்வாடியைக் காணவில்லை. அதைக்கண்ட அவனுடைய மனிதர் திடுக்கிட்டு குடல் நடுக்கமடைந்தார்கள். மார்வாடி எங்கு போயிருப்பான் என்று அவர்களுக்குப் பெருத்த கலக்கம் ஏற்பட்டுவிட்டது. மார்வாடியைக் காணாமல போய்விடவே போலீஸாருக்கும் இன்னுமதிகரித்த சந் தேகங்களும், ஆத்திரமும் உண்டாயின. யாரோ தெரியவில்லை. போலீஸாரைப்போலவும் வேறு பற்பல மாதிரிகளாகவும் வேஷத் துடன் வந்து எல்லோரையும் ஏமாற்றிச் செல்கின்றார்கள். அனேக விடங்களில் திருட்டுகள் நடக்கின்றன. எவ்வளவு ப்ரயாசைப்பட்டும் கள்ளர் என்னவோ அகப்படவில்லை. இது என்னவோ மாயமாக

விருக்கின்றது. இதனை எவ்விதத்திலாகிலும் கண்டுபிடித்து விடுவதே சரி. அந்தக் கொள்ளைக்காரர்களைக் கண்டுபிடித்து அந்த புகழை நாம் பெறவேண்டும். என்று எண்ணி மார்வாடி வீட்டாருக்கு தைரியம்கூறி "நாங்கள் எவ்விதமாகிலும் கண்டுபிடித்து விடுகின்றோம். நீங்கள் பயப்படவேண்டாம்" என்றார்கள். உடனே போலீஸார்கள் வெகு ஊக்கத்தோடு அன்று முதல் எல்லா ஸ்டேஷன்களிலும் உஷாராகவும் சிரத்தையோடும் வேலை செய்யத் துவக்கினார்கள். மார்வாடி வீட்டார்கள் ஒருக்கால் அவனுடைய ஸ்னேகிதர் வீடுகளுக்கு எங்காகிலும் சென்றிருக்கிறானோ. என்று அவ்விடத்திலெல்லாம் தேடினார்கள் எங்கும் காணப்படவில்லை. அவர்கள் அதே கவலையாக உயிரற்ற சவம்போலானார்கள். அவர்கள் கடைகள் ஒன்றையும் திறக்கவே இல்லை. விசனமே வடிவாய் மாறினார்கள். வீதியில் எவராவது படி ஏறினார்களானால் மார்வாடி தான் வந்துவிட்டானோ என்று ஆவலே வடிவாய் எட்டிப் பார்ப்பார்கள் வீதியில் எந்த போலீஸ்காரர்களைக் கண்டாலும் தங்களுக்குத் தான் நற்சேதி கொண்டுவந்துவிட்டார்களோ என்று எண்ணி வழியை நோக்குவார்கள். இவ்விதமே அவர்கள் ஏங்கி இருக்கிறார்கள். சேதியொன்றும் தெரியவில்லை. அவ்விதமே அன்று மறுநாள் கழிந்தது. இவர்களுக்குக் கவலையதிகரித்துவிட்டது. மார்வாடி இருக்குமிடமே தெரியவில்லை. துடிதுடிக்கின்றார்கள். போலீஸார் எவ்வளவோ கஷ்டப்பட்டு பாடுபட்டும் எவ்வித புலனும் கிடைக்கவில்லை மார்வாடியைக் காணாததினத்திற்கு, மறுநாளைக்கு மறுநாள், இரவு சுமார் 9-அல்லது, 10-மணி நேரத்திற்கு காமாக்ஷி, அவள் புருஷன், பக்கத்து வீட்டாரில் சிலர், எல்லோருமாக போலீஸ் ஸ்டேஷனுக்குவந்து "ஐயா! சற்றுமுன் போலீஸ் ஜெவான்கள் எங்கள் வீட்டிற்குவந்து (நடந்ததைக்கூறி,) இவ்விதம்செய்து சென்று விட்டார்கள். வேலியே பயிரை அழிப்பதுபோல நீங்கள் எல்லோருக்கும் நீதியுரைக்கவும், நல்வழிப்படுத்தவும், சட்டம் சட்டம் என்ற திட்டத்தில் உங்கள் அதிகாரத்தைச் செலுத்துகிறவர்கள், நீங்களே இவ்வித அக்ரமம் செய்யலாகுமா? அந்த மனிதர்களை நாங்கள் பார்த்தால் அடையாளம் சொல்லி விடுவோம். அவர்கள் எங்கே ஐயா! வெகு அழகாக இருக்கின்றது உங்களுடைய நீதி. அந்தப்பெணகளை இவ்விதம் மோசம்செய்து அபகரித்துக்கொண்டு போவதற்கு முன்னால் இடி இடித்ததுபோலான வார்த்தையை உண்டாக்கி எங்களைவெளிகிளப்பிவிட்டதுஎன்னதந்திரமய்யா இது!" என்று வாயில் வந்தவாறு கூறியதைக்கேட்ட போலீஸார் முற்றிலும் வியந்து, இதென்ன அனியாயமாக விருக்கின்றதே. நமக்குத் தெரியாமல் நம்மைப்போல வேஷந்தரித்து, துணிந்து வெளியில்வரும் வீரன் அவன்யாரோ தெரியவில்லையே. இதை நாம் வெகு ஜாக்கிரதையாகக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று எண்ணி, வந்தவர்களைக்கண்டு, நீங்கள் சொல்வது வியப்பாக விருக்கின்றது. போலீ

ஸாரை என்னவென்று எண்ணினீர்கள்? நன்மையைச்செய்ய முன்வந்த நாங்களே இந்த அக்ரமத்தைச் செய்ததாக நீங்கள் சொல்வது சற்றும் தகாதவார்த்தை. இவ்விதம் வேஷம்தரித்து யாரோ போலி போலீஸார் வந்து உங்களை இப்படி ஏமாற்றி மோசம் செய்திருக்கிறார்கள். நீங்கள் கவலைப்படாதீர்கள். நாங்கள் இதைக் கண்டுபிடித்து விடுகின்றோம். உங்கள் பெண்களின் அடையாளம், உயரம், பருமன் முதலிய எல்லாவற்றையும் சொல்லுங்கள்'' என்றார்கள். அவ்விதமே, எல்லாவற்றையும் காமாக்ஷி சொல்ல அதை யவர்கள் குறித்துக் கொண்டார்கள். உடனே காமாக்ஷி முதலிய எல்லோரும் போய்விட்டார்கள். போலீஸாருக்கு வியப்பிலும் வியப்பான இந்த சேதிகளைக் கண்டு பிடிப்பதிலேயே தாங்கள் சாமார்த்தியத்தைச் செய்துக் காட்ட வேண்டுமென்ற முயற்சியோடு வேலைசெய்து வருகின்றார்கள்.

* * * * *

புருஷோத்தம பிரபுவின் கொலையின் சம்பந்தமான வழக்கின் தகவல் எதுவும் தெரியவில்லை. பங்கஜவல்லியைக் காணாமல் போன பிறகு அவளது தம்பி ஓரே துக்கசாகரத்தில் மிதப்பவர்போல ஊண் உறக்கத்தைத் துறந்து நாளுக்குநாள் மெலிந்துக்கொண்டே வருகின்றார். பங்கஜவல்லியை எங்கு தேடியும் காணவில்லை. அந்த கேஸையும் போலீஸாருக்குத் தெரிவித்தார்கள். எவ்விதபுலனும் கிடைக்கவில்லை.

மாணிக்கமுதலியாரின் கேஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில்விசாரணைக்கு வந்தபோது அங்கு குற்றவாளியல்ல என்பதற்கு எவ்வித ருஜுவும்ஏற்படாமையால் மாஜிஸ்ட்ரேட் கேஸை ஸெஷன்ஸ் கோர்ட்டிற்கு அனுப்பிவிட்டார். போலீஸார் சிக்கல் முக்கலான பல கேஸ்களிலும் ஒன்றும் தகவல் கிடைக்காமையால் எண்ணையில் விழுந்த ஈக்களைப் போலக் குழம்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

---

பல நாவல்களைத் தமிழ் நாட்டிற்கு மழை போலப் பொழிந்து, பெரும்புகழும், கீர்த்தியும் வாய்ந்துள்ள ஸ்ரீமான் உ. வே. வடுவூர் கே. துரைசாமி ஐயங்காரவர்கள் பி.ஏ., இதும் இந்த புத்தகத்தை ஒரு பொருட்டாக எண்ணி பார்வையிட்டு உதவி வந்ததற்காக எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துத் தண்டன் சமர்பிக்கிறோம். இந்த அதிகாரம் முதல் அன்னவர் தமது சொந்த வேலைகளின் நிமித்தமும், தேக அசௌக்கியத்தினாலும் இதனைப் பார்வையிடுவதற்கு இயலாமல் போனது பற்றி வருந்துகின்றோம்.

கிரந்தகர்த்தா.

# மதிப்புரை.

வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஆத்தான் வெங்கடவரதாசாரியர் ஸ்வாமிகளின் நியமனப்படி ஸ்தானாதிபதி A.D. ராமாநுஜ அய்யங்கார் ஆழ்வார் திருநகரி, (20—6—1926):—

கடல்புடை சூழ்ந்த இவ்வுலகின்கண் எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளிலும் மேலானதான மானிடஜென்மமெடுத்த ஒவ்வொருவரும் தங்களுக்கு ஈசுவரனால் கொடுக்கப்பெற்ற ஞானத்தை அபிவிருத்திசெய்து அதன்பலனாக தமது கரணகளேபராதிகளால் ஈச்வரனுக்கு கைங்கரியாதிகளைச்செய்து, பிறகு அந்தமில் பேரின்பமான முக்தியை அடையவேண்டுமென்பது யாவருமறிந்தவிஷயம். அவ்வித முக்தியை அடைவதற்கு ஞானம் முக்கிய காரணம்; ஞானம்பரிபக்குவமடைய வேண்டில் இதர விஷயங்களில் அருசி வேண்டும். இதர விஷயங்களில் அருசி பிறக்கவேண்டில் அதை அநுபவிக்கவோ அல்லது அதன் விஷயத்தை நன்றாகத் தெரிந்துகொள்ளவோ வேண்டும். அப்படிக்கில்லாத விஷயத்தில் இதில் நசையறாது. இத்தைவிட்டே துறவிகள் மூன்று ஆச்ரமங்களையும் அடைந்து சந்நியாசம் கொள்ளவேணும் என்கிறது. தேகம் முதலானது மின்னின் நிலையில் என்கிறபடி க்ஷணிகமாயுள்ளது. ஈசுவரபக்திதான் நிலையானது என்பதை ஸ்ரீ ராமாயண, பாரத, பாகவதாதிகள் போலத் தற்காலத்துக்குத் தகுந்தபடி யாவருக்கும் எடுத்துக்காட்டி மிகவும் நன்மையை விளைவிக்கக்கூடிய சக்தி இஜ்ஜெகன்மோகினிக்கு இருக்கிறதென்பது நிச்சயம்.

மேற்படி விஷயங்களை தற்சமயம் வெளியாக்கிவருவதும், வை· மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்படுவதுமான வைதேகி என்ற இக்கதையில் செறிந்துகிடக்கக் காணலாம்.

இதில் வைதேகியின் பக்திப் பெருக்கும், காதலின் திறமும், போலீஸாரின்மோசங்களும், காமத்தினுடையதிறமும், "கற்பரசிக்கு அமையனும் துரும்பு" என்பது போல வைதேகி தன் கற்புக்காக வளையல்கள், தோடு முதலானவைகளை இழந்தும், ஜன்னலிலிருந்து குதித்தும், கற்பைக் காக்கும் திறமும், திருட்டு விஷயங்களும், மற்றும் தற்கால பிற்காலங்களுக்கு வேண்டிய விஷயங்களும், அந்நியநாட்டு நாகரீகத்தின் முதிர்ச்சியால் விஷ ஜந்துக்கள் விழுந்தால்கூட அருசி, வாசனை முதலியதும் பாராமல், ஜாதி வித்தியாசங்களும் பாராமல் எதையும் அருந்தும் விஷயங்களையும் இவ்வாசிரியர் பெண்பாலாயினும் கூட மிகவும் ரம்யமாக எழுதுவது வியக்கத்தக்க விஷயமேயாம்.

இது நிற்க, நாவல் வாசிப்பது கூடாதென்று அநேகருடைய அபிப்பிராயம். அதனாலேயே இவ்வரிய விஷயங்களடங்கிய இச்சஞ்சிகைக்கு மிகவும் குறைந்த சந்தா ரூ. 1—8—0 வைத்தும் சந்தாதார்கள் அநேகமாகச் சேரவில்லை. என்னே இவர்கள் மதியீனம்! இது போன்ற சஞ்சிகைகள் மேல் நாடுகளில் உலவிவரும் பக்ஷத்தில் சுமார்

லக்ஷம் சந்தாதாருக்குக் குறையாமல் சேர்ந்திருப்பார்கள். "எறும்பூரக் கல்லும் தேயும்" "கற்பித்தால் கல்வியும் கரையும்" என்பது போல் ஒரு மனிதருக்கு ஒரு தடவைபோல பத்துதடவை சொன்னால் ஓர்விஷயம் நன்றாய் மனதில் பதியுமாறுபோல ஸ்ரீராமாயணாதிகள் சொல்லும் விஷயத்தை இவ்வாசிரியர் தற்கால நாகரீக மனிதர்களுக்குத் தக்கபடி தங்கள் புத்தி சாதுரியத்தால் இவ்விஷயங்களைச் சொல்வதில் நன்மை உண்டாகுமே தவிர தீமை உண்டாகமாட்டாது. ஆகையால் இனிமேலாவது இவ்வரிய விஷயங்கள் அடங்கிய இந்த ஜெகன்மோகிக்குச் சந்தாதாராகச் சேர்ந்தும், தங்கள் நண்பர்களைச் சேர்த்தும் இதன் ஆசிரியருக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் புகட்டி நன்மையை அடையுமாறு ஸர்வவியாபியான ஈச்வரனைப் பிரார்த்திக்கிறோம்.

## வாழி விருத்தம்.

நீலாம்புரி ராகம்.

வாழி ஜெகன் மோகினியும்
வாழி அல்லிக் கேணியுமே
வாழி இதை இயற்றுபவர்
வாழி இது எந்நாளும்.

---

## சுதேசமித்திரன்

(26—6—1926.)

ஸ்ரீமதி, வி. எம். கோதைநாயகி அம்மாளால், எழுதப்பட்ட வைதேகி என்ற தமிழ் துப்பறியும் நாவலின் முதலாவது பாகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இந்த நாவல் அதிகமாக உலக அனுபவங்களையொட்டி எழுதப்பட்டதாயும், ஒரு நல்வழியைப் போதிப்பதாயும் இருக்கிறது. சாதாரணமாக ஒரு குடும்ப ஸ்திரீக்கு இருக்கவேண்டிய குணங்களை வைதேகி என்ற கதாநாயகி அனுபவபூர்வமாக எடுத்துக்காட்டி யிருக்கிறாள். கதாநாயகிக்கும் கூனற்கிழவிக்கும் நடக்கும் ஸம்வாதங்களிலிருந்து வேசித்தொழிலின் கேடுகளும், அந்தத் தொழிலை யநுஷ்டிப்பவர்கள் மற்றவர்களை ஏமாற்றச்செய்யும் பலவித தந்திரங்களும் வெளியாகின்றன. யோக்கியமாக நடந்து கொள்கிறவர்களுக்குக் கடவுள் பரீக்ஷார்த்தமாக வரிசையாகப் பல இடுக்கண்கள் நேருமாறு செய்கிறதும் இதிலிருந்து தெரிகிறது. போலீஸார் ஜனங்களுக்கு ஹிம்ஸை நேராமல் காப்பதற்காக உள்ளவர்கள் எனினும், வேலியே பயிரை அழிப்பதுபோல் அவர்களில் சிலர் செய்யும் அதிக்கிரமங்கள் மிகவும் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. பொதுவாகவே சொல்நடை மிகவும் நன்றாக இருக்கிறது. பெண்கள் இலக்கியத்துறையில் கீர்த்தி பெறலாமென்பதற்கு கோதை அம்மாளின் நூல்கள் காட்டுகின்றன.

182828

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.

## குறைந்த சந்தாவில் நடைபெறும் உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

## எது ?

முன்னிலும் பெரிய அளவில்
திருச்சியினின்று வெளியாகி வரும்

## "நச்சினார்க்கினியன்". தான்.

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்காகும் கதைகள், விடுகதை, விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகிழாச் சமயக்கொள்கைகள், இந்துதேச சரித்திரக்கதைகள், சைவ வைணவ புராண இதிகாசக்கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல்மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் வெளிவரும்.

வருட சந்தா ரூ 2 தான். வெளிநாடுகளுக்கு ரூ. 2 8 0

விளம்பர விகிதம்:—பக்கத்திற்கு ரூ. 5 அரைப்பக்கத்திற்கு ரூ. 3 நீடித்த விளம்பரங்களுக்கு சகாய விகிதம்.

இப்பத்திரிகையின் சந்தாதார்க்குரிய நலங்களைப் பத்திரிகையிற் காண்க. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்புக.

பண்டித : ம. கோபால கிருஷ்ணையர்,
பத்திராதிபர், "நச்சினார்க்கினிய நிலயம்"
"தெப்பக்குளம் போஸ்ட்."

---

## காமதேனு.

ஓர் உயர்தர மாதாந்திர தமிழ்ப்பத்திரிகை.
பிரதி பௌர்ணமியிலும் வெளிவரும்.

இதில் கிராமமுன்னேற்றத்திற்குறிய முக்கிய விஷயங்கள் ஐக்கிய இயக்கம், கிராமபஞ்சாயத்துகள், விவசாயம், வியாபாரம், பிரதமக்கல்வி முதலிய எல்லாவிஷயத்தையும் கிராமவாசிகளுக்கு சொற்பசந்தாவில் தெரிந்துகொள்ளும்பொருட்டு இதை நடத்திவருவதால் எல்லாகிராமவாசிகளும் ஐக்கியஸ்தர்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தா வருஷம் 1-க்கு ரூபாய் 1—8—0 முன்பணமாக கட்டவேண்டும். விளம்பர விகிதங்களுக்கு பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

R. ஆனந்தரூவ், "காமதேனு" பத்திராதிபர்,
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்

---

## ஆனந்த போதினி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்ததும், 20000-சந்தாதாரர்களுடையதுமான மாதப் பத்திரிகை இது ஒன்றே. இதற்கு 12-வது வருடம் இப்பொழுது நடக்கிறது. இதுவரையில் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் இப்பொழுதே சேருங்கள். பிரதிமாதமும் 48-பக்கங்களுள்ள விஷயங்களுடன் இது வெளிவரும்.

வருடச்சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலியவற்றிற்குத் தபாற் செலவு உள்பட ரூ. 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஆனந்த போதினி ஆபீஸ், மதராஸ்

# அமிர்தாஞ்சனம்




அமிர்தாஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரு. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

**உடனே முந்துங்கள்.**

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

**எல்லா கடைகளிலும் கிடைக்கும்.**

**அமிர்தாஞ்சன் டிபோ,**

**7. தம்புச் செட்டி வீதி, சென்னை.**

சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.